# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30
பக்கங்கள்: 28

சுடர் 33 | கதிர் 235 | ஆடி 03ஆம் நாள் | வியாழக்கிழமை | 19 ஜூலை 2018 | வள்ளுவர் ஆண்டு 2049


கிருமித்தொற்றால்

## ஒரு வயது குழந்தை பரிதாபகரமாக சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 19
மூளையில் ஏற்பட்ட கிருமித்தொற்றுக் காரணமாக ஒரு வயதுக் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது. அரியாலை பூம்புகாரைச் சேர்ந்த பிரதீபன் பிரியங்கா என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது.
'சிறுமி நேற்றுமுன்தினம் பால்மா குடித்து விட்டு உறங்கியுள்ளது. மாலை ஐந்து மணியளவில் நித்திரையால் எழும்பிய குழந்தைக்கு சளித்தன்மை >> 23

புலிகளுக்கு நிகராக

# மாற்று இயக்கங்களுக்கு மரியாதை வழங்க எதிர்ப்பு

வல்வெட்டித்துறை நகர சபையில் குழப்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 19
வல்வெட்டித்துறை நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட தீருவில் பொதுப்பூங்காவில், குமரப்பா புலேந்திரன் உள்ளிட்ட 12 வேங்கைகளின் நினைவுத்தூபி மாத்திரமே அமைக்கப்படவேண்டும். மாற்று இயக்கங்கள் உள்ளிட்ட ஏனையோருக்கு அங்கு நினைவுத் தூபி அமைக்கப்படக் கூடாது. இவ்வாறு வல்வெட்டித்துறை நகர சபையில் கோரிக்கை முன்வைக்கப்பட்டபோதும், அதனை நிராகரித்து >> 23

விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனின்றிச் சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 19
உந்துருளியும், ஈருருளியும் மோதிய விபத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த குடும்பத் தலைவர் 10 நாள்களின் பின்னர் உயிரிழந்துள்ளார்.
காரைநகர் கருங்காலியைச்சேர்;ந்த முருகேசு சிவபாலன் (வயது-62) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.
கடந்த 8ஆம் திகதி, கோண்டாவிலிருந்து திருநெல்வேலியிலுள்ள எரிபொருள் நிலையத்துக்குப் பணிக்கு, பலாலி வீதியால் வரும்போது திருநெல்வேலிப் பகுதியில் விபத்து, நடைபெற்றது. விபத்தில் காயமடைந்து மயங்கிய குடும்பத் தலைவர் யாழ்ப்பாணம் போதான வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். >> 06

புதிய அரசமைப்புக்கான

# நிபுணர் குழுவின் முதல் வரைவு வழிநடத்தல் குழுவால் நிராகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19
வழிநடத்தல் குழுவுக்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்ட நிபுணர்குழு கூடி ஆராய்ந்து தயாரித்துள்ள அரசமைப்புக்கான முதல் வரைவை, வழிநடத்தல் குழு நேற்று நிராகரித்துள்ளது. அரசமைப்பு வரைவின் சில கூறுகள் தொடர்பில் கட்சிகள் எடுத்துள்ள நிலைப்பாட்டை உரிய வகையில் அது பிரதிபலிக்கவில்லை எனத் தெரிவித்தே வழிநடத்தல் குழு நிராகரித்துள்ளது.
கடந்த மே மாதம் 24ஆம் திகதி, எட்டு மாத இடைவெளியின் பின்னர் புதிய அரசமைப்புக்கான வழிநடத்தல் குழு கூடியது. வழிநடத்தல் குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்கு நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவும் அன்றைய அமர்வில் பங் >> 23

டெனீஸ் விவகாரம்

## விக்னேஸ்வரனின் மேன்முறையீடு 26ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19
வடக்கு அமைச்சரவையிலிருந்து பா.டெனீஸ்வரனை நீக்கியதற்கு இடைக்காலத் தடை விதித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு தடைவிதிக்கக் கோரி, வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனால் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் 26ஆம் திகதிக்கு ஒத்தி >> 23

## கல்மடுக் குளத்திலிருந்து ஆணின் சடலம் மீட்பு

கிளிநொச்சி, ஜூலை 19
கிளிநொச்சி கல்மடுக் குளத்திலிருந்து ஆணின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் கரவெட்டியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சுந்தரம் புலேந்திரன் (வயது -63) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். >> 23

## தூக்குத் தண்டனை பட்டியலில் தமிழர்கள்

கொழும்பு, ஜூலை 19
தூக்குத் தண்டனைக்குரிய கைதிகளின் பெயர்ப் பட்டியல் சிறைச்சாலைகள் பணியகத்தினால் நீதி அமைச்சுக்கு அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டது. அந்தப் பட்டியலில் 7 தமிழர்களும் உள்ளடங்குவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது.
போதைப் பொருள் குற்றங்களுக்கு தூக் >> 06

## காத்திருந்து களைத்துப்போன மக்கள் காணிக்குள் தாங்களாகவே இறங்கினர்

முள்ளிக்குளத்தில் சம்பவம்

மன்னார், ஜூலை 19
கடற்படையினரின் கட்டுப்பாட்டிலிருந்து மக்களின் போராட்டங்களால் விடுவிக்கப்பட்ட முள்ளிக்குளம் காணிகளுக்கு ஓராண்டுகளின் பின்னர் மக்கள் நேற்றுப் பிரவேசித்தனர். மன்னார் மாவட்டத்தின் முசலிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ளது முள்ளிக்குளம். போர் காரணமாக மக்கள், கடற்படையினரால் >> 23

## தொழிற் சந்தையில் ஆள்தேடும் ராணுவம்

யாழ்ப்பாணம், ஜூலை 19
யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் சனிக்கிழமை இடம்பெறவுள்ள தொழிற் சந்தையில் இராணுவத்தினரும் தொழில்கூடம் அமைக்கவுள்ளனர். அதனூடாக இராணுவத்துக்கு ஆள் >> 06

## ஆவாக் குழுவுக்கும் இராணுவத்துக்கும் தொடர்பில்லை

தலைமை அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 19
வடக்கில் உருவாகியுள்ள ஆவாக் குழு பயங்கரவாதக் குழுவல்ல. ஆயுதக் குழுவாகவும் அதனைக் கருத முடியாது. அது இராணுவத்துடன் சம்பந்தப்பட்டதல்ல. சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கும் செயற்பாடாகவே இந்தக் குழுவின் நடவடிக் >> 23

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில்

## அரசின் நடவடிக்கை திருப்தியாக இல்லை

பெல்ஜியம் பிரதிநிதிகளிடம் சம்பந்தன் இடித்துரைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19
காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்கள், தங்களின் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் நிலையற்ற நிர்க்கதி நிலைமை >> 06





முல்லைத்தீவில் 500ஆவது நாளில்

## தொடர் போராட்டத்தை கைவிட்ட உறவுகள்

போராட்ட வடிவத்தை மாற்றப் போவதாகவும் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 19
முல்லைத்தீவில் காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவினர்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தி >> 06

## தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலில்லை

ஆனாலும் படைமுகாம்களை அகற்றமாட்டோம் – ருவான்

கொழும்பு, ஜூலை 19
வடக்கில் இராணுவ முகாம்களை நீக்கக் கோரி அரசோ, பாதுகாப்பு அமைச்சோ எந்தக் கட்டளையும் பிறப்பிக்கவில்லை. வடக்கின் முகாம்கள் ஒருபோதும் நீக்கப்படப் போவதுமில்லை. தேசிய பாது >> 23



கதிர்காமம் ஆடிப் பெருந்திருவிழாவில் 6ஆவது நாளான நேற்று யானை 'கலைகொண்டு' பச்சைப்பந்தல் அமைக்கும்நிகழ்வு இடம்பெற்றது. (4)



## ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் விநியோகத்தில் ரூபா23.89 நட்டம்

### பெற்றோலிய வள அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை19
மண்ணெண்ணெய்விநியோகத்தில் பெற்றோலியக்கூட்டுத்தாபனத்துக்கு ஒரு லீற்றருக்கு 23.89 ரூபா நட்டம் ஏற்படுவதாகப் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நேற்று இடம்பெற்றபோது, மைத்திரி ஜயந்த சமரவீர எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் ரணதுங்க மேலும் தெரிவித்தாவது:

விலை அதிகரிக்கப்பட்ட மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் விலையைமீனவர்களின்கோரிக்கையால் ரூபா 70 ஆகக் குறைத்தோம். ஆனால் எமக்குத் தற்போதும் மண்ணெண்ணெய் லீற்றருக்கு 93.89 ரூபாஓதுக்கவேண்டியுள்ளது. எவ்வாறாயினும் நாங்கள் நட்டத்திலேயே ஒருலீற்றரை70ரூபாவுக்குவிநியோகிக்கின்றோம்.

எரிபொருள்சூத்திரம்தற்போது வெளியிடப்பட்டுள்ளது. விரைவில் உங்களுக்கும் அது பற்றி அறிவிக்கப்படும். பெரும்பாலும் எரிபொருள் சூத்திரம் திறைசேரியால் தீர்மானிக்கப்படும்.

நாம்பன்னாட்டுச்சந்தையில்எரிபொருள் விலை உயரும்போது உள்நாட்டில் எரிபொருள் விலை அதிகரிக்கவும், பன்னாட்டுச்சந்தையில்எரிபொருள்விலைகுறையும்போதுஉள்நாட்டில் எரிபொருள் விலை குறையும் வகையில் எரிபொருள் சூத்திரத்தை வடிவமைத்துள்ளோம்.

நாம்அமைச்சரவையின்அங்கீகாரத்துடன் அதற்கான குழுவை அமைத்துள்ளோம். அந்தக் குழு வழங்கும் ஆலோசனைக்கமைவாகவே விலையின் ஏற்ற இறக்கம் தொடர்பாகத் தீர்மானிக்கப்படும் -என்றார். (4)

### மன்னார் சதொச வளாகத்தில்

## இருவர் அணைத்தது போன்று இரு எலும்புக்கூடுகள் மீண்டன

**மன்னார், ஜூலை 19**

**மன்னார் சதொச விற்பனை நிலையத்தில், ஒருவரை ஒருவர் அணைத்தது போன்று அருகருகே இரு மனித எச்சங்கள் காணப்பட்டமை நேற்றுக் கண்டறியப்பட்டது. அத்துடன் பெண்கள் கைக்கு அணியும் காப்பு என்று சந்தேகிக்கப்படுகின்ற தடயப் பொருள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.**

அருகருகேயுள்ள இந்த எச்சங்கள் பல்வேறு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகஅங்குள்ளவர்கள் கூறுகின்றனர்.

இவை மீட்கப்பட்டமையை அடுத்து வளாகத்தை விரிவுபடுத்தி அகழ்வு இடம்பெற்று வருகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினமும் மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டிருந்தன. அவை மீட்கப்பட்டுவருகின்றனஎன்று குழுவினர் தெரிவித்தனர்.

மன்னார்நீதிவான் ரி.ஜே.பிராபாகரன் முன்னிலையில், சட்ட மருத்துவ நிபுணர் டபிள்யூ. ஆர்.ஏ.எஸ். ராஜபக்ச தலைமையிலான குழுவினர் அகழ்வில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த இடத்தில் கடந்த மார்ச் மாதம்கட்டுமானப்பணிக்கான ஆரம்ப வேலைகளில் ஈடுபட்ட போது மனித எச்சங்கள் மீட்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து அகழ்வு இடம்பெற்று வருகின்றது குறிப்பிடத்தக்கது. (4,56)

## வாழ்க்கை செலவை குறை!

### அட்டனில் நேற்று கவனவீர்ப்பு

கொழும்பு, ஜூலை19
அட்டன் மணிகூட்டுக் கோபுரத்துக்கு முன்பாக மக்கள் விடுதலைமுன்னணியினர்நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். எரிபொருள் விலை மற்றும் அதிகரித்துள்ள வாழ்க்கைச் சுமையை அரசு குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

எரிபொருள் மற்றும் அன்றாட தேவைகளுக்கான பொருள்களின் விலை குறைக்கப்பட வேண்டும், தேவையற்ற வரிகள் நீக்கப்படவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் இதன் போதுமுன்வைக்கப்பட்டன. (4)




## ஒருதொகுதி எலும்பு எச்சங்களை கொழும்புக்கு எடுக்கத் திட்டமா?

தலைமன்னார், ஜூலை19
அகழப்பட்டவற்றில் ஒருதொகுதிமுழு மனித எலும்புக்கூடுகளைக்கொழும்புப்பல்கலைக்கழகத்துக்கு எடுத்துச் செல்லத் திட்டமிடப்படுவதாகக் கூறப்படுகிறது.

அதற்காக மன்னார் நீதிமன்றில் நகர்தல் பத்திரம் தாக்கல்செய்ய அனுமதிகோரப்படவுள்ளதாகவும், கொழும்புப் பல்கலையின் சட்ட மருத்துவ அதிகாரி அதற்கு நடவடிக்கை எடுத்துவருகிறார் என்றும் தெரியவருகின்றது.

மன்னார் சதொச விற்பனை நிலைய வளாகத்தில் எலும்புக் கூடுகள் அகழப்பட்டு வருகின்றன.

இது வரைக்கும் எடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள், எலும்புக்கூட்டு எச்சங்கள் 43 பெட்டிகளில் அடைக்கப்பட்டு பாதுகாப்புக் கருதி மன்னார் நீதிவான் மன்றவளாகத்திலுள்ள ஒரு அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

அகழ்வுசெய்யப்படும்இடங்களில்தொடர்ந்துமனித எச்சங்கள்மண்டையோடுகள்இனங்காணப்பட்டு, மீட்கப்பட்டு வருகின்றன.

சிறப்புச்சட்டமருத்துவஅதிகாரிடபிள்யூ.ஆர்.ஏ.எஸ். ராஜபக்சதலைமையில் இடம்பெறும் இந்தப் பணியில் மருத்துவ அதிகாரிகள் உட்பட பதினொரு பேர் வரையில் அகழ்வில் ஈடுபட்டுள்ளனர். (4.60)





## சமூகவிரோத - இழி குழுவினர் பொருள்களை அடித்து நாசம்

### அச்சுவேலி பத்தமேனியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை19
வீடுபுகுந்த இனந்தெரியாத குழு வீட்டின் கதவு, கண்ணாடி உட்பட வீட்டில் இருந்த ஏனைய பொருள்களை அடித்து உடைத்து நாசப்படுத்தியுள்ளது. அது மட்டுமன்றி, அங்கு வசிக்கும்குடும்பத்தலைவருக்கு உயிர்அச்சுறுத்தல்விடுத்து அந்தக்குழு சென்றுள்ளது என்று அச்சுவேலிப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. சம்பவம் யாழ்ப்பாணம் அச்சுவேலி பத்தமேனியில் நேற்றுமுன்தினமிரவு 10:30க்கும் 11க்கும் இடைப்பட்டநேரத்தில்இடம் பெற்றுள்ளது.

மோட்டார்சைக்கிளில்கம்பிகள் பொல்லுகள் சகிதம் முகத்தை மறைத்தவாறு அந்தக் குழுவிலிருந்த வர்கள் காணப்பட்டனர். முதலில்வீட்டின்வெளிக்கதவை (கேற்) அடித்து உடைத்தனர். பின்னர் வீட்டுக்குள் நுழைந்து வீட்டுக்கதவு, ஜன்னல் கண்ணாடிகள், கதிரை, மேசை, குளிர்சாதனப்பெட்டி என்பனவற்றை மட்டுமன்றிவீட்டில்பொருத்தியிருந்த மின்விசிறியையும் அடித்துநெளித்தனர்.

அவர்கள்இவ்வாறானஇழிவானவேலைகளைச்செய்தவாறு வருவதைக் கண்டதும் வீட்டில் இருந்தவர்கள் பாதுகாப்புக்கருதி அங்கிருந்து மறைந்துகொண்டனர்என்றுவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

முறைப்பாடு செய்யப்பட்டதற்குஇணங்கவிசாரணை இடம்பெறுகிறது என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். யாழ்ப்பாணத்தில்இளைஞர்குழுக்களின் அட்டகாசங்கள் அதிகரித்துள்ளன.

அதனைக் கட்டுப்படுத்துவதற்காகச் சட்டம் ஒழுங்கு அமைச்சர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் சில நாள்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்து தங்கிநின்று சென்றிருந்தனர். இந்த நிலையிலேயே அட்டகாசம் இடம் பெற்றுள்ளது. இத்தகைய சம்பவங்கள் பொதுமக்களிடம் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. (4,37)

# எல்லையற்ற அதிகாரம் ஊழலுக்கு வழிவகுக்கும்

## திறந்த அரச பங்குடமை மாநாட்டில் அரச தலைவர் மைத்திரிபால உரை

கொழும்பு, ஜூலை 19
எல்லையற்ற அதிகாரம் ஊழலுக்கு வழிவகுக்கும் என்று தெரிவித்த அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன, அதிகாரத்துக்கும் ஊழலுக்குமிடையிலான தொடர்பைத் துண்டிப்பதற்குக் கடந்த மூன்று வருடங்களில் அரசு பல்வேறு முக்கிய நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

திறந்த அரச பங்குடமை தலைவர்கள் மாநாடு சந்திப்பு ஜோர்ஜியாவின் திபிலிசி மாநாட்டு மண்டபத்தில் ஜோர்ஜியாவின் தலைமை அமைச்சர் மமுக பகதட்சே தலைமையில் நேற்று ஆரம்பமானது. மாநாட்டில் 75 உறுப்பு நாடுகளின் அரசதலைவர்கள், தலைமை அமைச்சர்கள், சபாநாயகர்கள், அமைச்சர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போது மைத்திரிபால மேலும் தெரிவித்ததாவது:

நான் அரசதலைவர் பதவிக்குத் தெரிவு செய்யப்படும்போது எந்தவொரு நாட்டிலும் இல்லாத எல்லையற்ற அதிகாரம் இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசதலைவரிடம் இருந்தது. தான் அரசதலைவர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டு 6 மாதங்கள் நிறைவடைவதற்கு முன்னர் 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் மூலமாக அந்த எல்லையற்ற அதிகாரத்தை நாடாளுமன்றுக்கு வழங்கி நாடாளுமன்றைப் பலப்படுத்த நடவடிக்கை எடுத்தேன்.

அன்று தலைமை நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர் மற்றும் ஆணைக்குழு அதிகாரிகள், அரசதலைவரின் விருப்பின் பேரிலேயே நியமிக்கப்பட்டு வந்தனர். இன்று அந்த அனைத்து நடவடிக்கைகளும் நாடாளுமன்றினால் நியமிக்கப்பட்டுள்ள அரசமைப்புச் சபை ஊடாக இடம்பெறுகிறது.

நாட்டைப் பொறுப்பேற்கின்றபோது அரசியல் அதிகாரத்தின் காரணமாக நீதித்துறையும் பெரும் ஊழலுக்கு உள்ளாகியிருந்தது. நீதித்துறையின் சுயாதீனத் தன்மையைப் பாதுகாப்பதற்கு தற்போதைய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு உள்ளிட்ட அனைத்து ஆணைக்குழுக்களும் இன்று பலமான நிலையில் உள்ளன. எவரும் தலையிட முடியாத வகையில் சுயாதீனமான, பக்கச்சார்பற்ற நிறுவனங்களாக அவை செயற்படுகின்றன.

அரசியல்வாதிகளாக இருந்தாலும் அரச அதிகாரிகளாக இருந்தாலும் தன்னிடமுள்ள தனிப்பட்ட அதிகாரத்தை முடியுமானளவு குறைத்து அதிகாரத்தை யாப்பு ரீதியாகக் கூட்டாண்மையிடம் பொறுப்பளிக்க வேண்டும். கருத்தரங்குகள், செயலமர்வுகள் ஊடாக அரச அதிகாரிகளுக்கு அறிவூட்டவும், ஊழல் மோசடியை ஒழித்துக் கட்டுவது தொடர்பாக சிவில் சமூகத்திடம் உள்ள அதிகாரத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றி பொதுமக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கும் அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது - என்றார்.

திறந்த அரச பங்குடமை 2011ஆம் ஆண்டு பன்னாட்டு மட்டத்தில் முறையாக ஆரம்பிக்கப்பட்டது. தற்போதைய அரசால் எடுக்கப்படும் கூட்டரசின் நிகழ்ச்சித்திட்டத்தை பாராட்டி அந்தப் பங்குடமையில் இணைந்துகொள்ளுமாறு விடுக்கப்பட்ட அழைப்பின் பேரில் 2015ஆம் ஆண்டு இலங்கையும் அதில் இணைந்துகொண்டது. இந்த அமைப்பில் உறுப்புரிமை பெற்றுள்ள முதலாவது தெற்காசிய நாடாக இலங்கை உள்ளது. தற்போது 75 நாடுகள் திறந்த அரச பங்குடமையில் உறுப்புரிமை பெற்றுள்ளன.

ஊழல் ஒழிப்பு, சிவில் சமூக ஈடுபாட்டை அதிகரித்தல் மற்றும் அரச சேவையைப் பலப்படுத்துதல் ஆகிய நோக்கங்களை அடைந்துகொள்வதில் உள்ள சவால்கள் மற்றும் சவால்களை வெற்றிகொள்வதற்கு பூகோள ரீதியாகக் கூட்டாக எடுக்க வேண்டிய முயற்சிகள் குறித்து அரசியல் தலைவர்கள் சந்திப்பின்போது விரிவாக கவனம் செலுத்தப்படுகின்றது. இந்த மாநாடு இன்று நிறைவடையும் - என்று அரச தலைவர் ஊடகப்பிரிவு தெரிவித்தது. (4)



கைதடி பழைய பாலத்தில் தண்ணீர்க் குழாய் பொருத்தும் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் நேற்றுக் கொங்கிறீட் தூண் ஒன்றைப் பாரம்தூக்கி மூலம் உயர்த்தி வைக்க முற்படும்போது பாரம்தூக்கி இயந்திரம் உடைந்து சரிந்தது. எவருக்கும் சேதம் ஏற்படவில்லை. தொலைத்தொடர்பு வயர் அறுந்ததோடு பழைய பாலமும் சேதமடைந்துள்ளது. (9)



நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜங்க அமைச்சர் லகி ஜயவர்தன தனது அமைச்சு கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றார்.
இதன்போது, நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் அமைச்சின் செயலாளர் ஹபுஆராச்சி ஆகியோர் கலந்துகொண்டனர். (4)

## ஹெரோய்ன் வைத்திருந்தவருக்கு ஆயுள் தண்டனை

கொழும்பு, ஜூலை 19
ஹெரோய்ன் போதைப் பொருளை வைத்திருந்த மற்றும் அதனை விற்பனை செய்தவருக்கு கொழும்பு மேல்நீதிமன்றம் ஆயுள் தண்டனை வழங்கித்தீர்ப்பளித்துள்ளது.

7.93கிராம்ஹெரோய்ன் போதைப்பொருளை வைத்திருந்த மற்றும் அதனை விற்பனைசெய்தார் என்பது நீதிமன்ற விசாரணையில் நிரூபிக்கப்பட்டது. (4)

## அரசதலைவர் ஆணைக்குழுவில் அமைச்சர் மங்கள வாக்குமூலம்

கொழும்பு, ஜூலை 19
அரசதலைவர் ஆணைக்குழுவில் நிதியமைச்சர் மங்கள சமரவீர நேற்று வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

சிறிலங்கன் எயார்லைன்ஸ், சிறிலங்கன் கேட்டரின் மற்றும் மிஹின் லங்கா ஆகிய நிறுவனங்களில் இடம்பெற்றதாக கூறப்படும் ஊழல், மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவில் அவர் வாக்குமூலம் வழங்கினார்.

அந்த நிறுவனத்தை ஆரம்பிக்கும் சமயத்தில் உரிய அமைச்சர் என்ற வகையில் சாட்சியமளிப்பதற்காக அவரை ஆணைக்குழு நேற்று அழைத்திருந்தது. அந்த நிறுவனம் ஆரம்பிக்கப்படும்போது வானூர்தி சேவைகள் அமைச்சராக இருந்ததன் அடிப்படையில் வாக்குமுலம் வழங்கச் சென்றேன் என்று அமைச்சர் கூறினார். (4)

## 5அடி நீள நாக பாம்புடன் அதன் 37 குட்டிகள் மீட்பு

கொழும்பு, ஜூலை 19
தெற்கில் சீதுவை பகுதியிலுள்ள மண் மேட்டில் இருந்து பெருந்தொகை நாகபாம்புகள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. மண் மேட்டுக்குள் மறைந்திருந்தபோது அவை மீட்கப்பட்டன. 37 குட்டிகளுடன் மிகவும் நீளமான பாம்பு ஒன்று மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட பாம்பும் அதன் குட்டிகளும் காட்டில் விடப்பட்டுள்ளன.

"5 அடி நீளமான பாம்பு நாஜா நாஜா என்ற விஞ்ஞான பெயரில் அழைக்கப்படுகிறது. இலங்கையில் வாழும் நாகபாம்பு ஒரு தடவையில் 10 தொடக்கம் 30 முட்டைகளை இடும்" என்று வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அனைத்து முட்டைகளும் உடைந்து பாம்புகள் வெளியாகும் சந்தர்ப்பங்கள் ஓரளவு குறைவு. எனினும் இதுவொரு அபூர்வ சம்பவம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (4)

## நாட்டில் கலால் குற்றங்களால் 6 மாதங்களில் 25,000 பேர் கைது

கொழும்பு, ஜூலை 19
கடந்த 6 மாதங்களில் கலால் குற்றங்கள் சம்பந்தமாக 25 ஆயிரத்து 214 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கலால் திணைக்களம் தெரிவித்தது.

சுமார் ஆயிரம் கலால் திணைக்கள அதிகாரிகள் நடத்திய சுற்றிவளைப்பில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் சட்டவிரோத மதுபான தயாரிப்பு மற்றும் விநியோகத்தில் ஈடுபட்டமை சம்பந்தமாக 19 ஆயிரத்து 145 பேர் அடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹெரோய்ன் உட்பட போதைப் பொருள்களை உடமையில் வைத்திருந்தமை சம்பந்தமாக 3 ஆயிரத்து 81 பேரும், புகையிலை சம்பந்தமான குற்றச்சாட்டில் 3 ஆயிரத்து 463 பேரும் கைது செய்யப்பட்டனர்.

கலால் உரிமம் பெற்ற இடங்களில் இடம்பெற்ற குற்றங்களிலும் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். எவ்வாறாயினும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்தக் குற்றங்கள் குறைவாகவே பதிவாகியுள்ளன என்று திணைக்களம் மேலும் தெரிவித்தது. (4)

## குழந்தைக்கு மது பருக்கினரென தந்தை உட்பட நால்வருக்கு மறியல்

கொழும்பு, ஜூலை 19
ஒரு வயதுக் குழந்தைக்கு (ஒரு வருடமும் ஒரு மாதமும்) மதுபானம் பருக்கினார்கள் என்றகுற்றச்சாட்டில் 4 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அனுராதபுரம், மீகவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனங்கமுவ பகுதியில் நேற்றுமுன்தினம் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்துடன் தொடர்புடைய நால்வரை மீகவெவ பொலிஸார் கைதுசெய்துள்ளனர். வீடொன்றில் இடம்பெற்ற நிகழ்வின்போது குழந்தையின் தந்தை மது அருந்திவிட்டு கையில் வைத்திருந்த தனது குழந்தைக்கு மதுபருக்கும் காணொலி சமூக வலைத்தளங்களில் பரவியது. இதனையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட மீகவெவ பொலிஸார் குழந்தையின் தந்தை உட்பட நால்வரை கைதுசெய்துள்ளனர். அவர்கள் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கல்கமுவ நீதிமன்று உத்தரவிட்டது. (4)

# ஈருருளி திருடனுக்கு மறியல்

சாவகச்சேரி, ஜூலை 19

கொடிகாமம், பகுதியில் ஈருருளி திருடிய நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது சாவகச்சேரி நீதிமன்று. கொடிகாமம் நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் பணியாற்றும் வரணி குடமியனைச் சேர்ந்த பணியாளர் கடந்த 13ஆம் திகதி கடைக்கு முன்னால் தனது 8 ஆயிரம் ரூபா பெறுமதியான ஈருருளியை நிறுத்திவிட்டுப்பணியில் ஈடுபட்டுள்ளார். மதியம் உணவருந்தச் செல்வதற்காக ஈருருளியைப் பார்த்தபோது ஈருருளியைக் காணவில்லை. உரிமையாளர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். அங்குள்ள மறைகாணியில் பதிவு செய்யப்பட்ட காணொலியில் ஈருருளி எடுத்த நபரின் முகம் தெளிவாகப் பதிவாகியிருந்ததைப் பகுதியில் உள்ள சிலர் அவதானித்தனர்.

கடந்த 16ஆம் திகதி ஈருருளியைத் திருடிய குறித்த நபர் மற்றொரு கடையில் இருந்ததை அவதானித்து, ஈருருளி உரிமையாளரிடம் தெரிவித்தனர். அவரை பிடித்துப் பொலிஸ் நிலையத்தில் உரிமையாளர் கையளித்தார்.

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைச் சேர்ந்த ஈருருளித் திருடனைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் இந்த நபரை எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ9)

# வல்வெட்டித்துறை நகரசபைக்குட்பட்ட அபிவிருத்தி தொடர்பில் நடவடிக்கை

## நகர சபை அமர்வில் தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 19

வல்வெட்டித்துறை நகரசபையின் நான்காவது அமர்வு நகர சபை மண்டபத்தில் நேற்றுக் காலை 10 மணியளவில் நகரசபைத் தவிசாளர் கோ.கருணாணந்தராசா தலைமையில் இடம்பெற்றது. அமர்வில் நகரசபைக்குட்பட்ட அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, சந்நிதி கோயில் நிர்வாகம் தம்முடன் ஒத்துழைப்பதில்லை என்றும் ஆலயத்துக்குச் சொந்தமான ஆலயக் காணிக்குள் இருக்கும் மலசலகூடங்களைக் கூட தாமே துப்புரவாக்கி வருவதாகவும் ஆலய நிர்வாகத்தை அண்டிய பகுதியில் உள்ள கழிவகற்றல் மற்றும் ஏனைய பகுதிகளில் உள்ள பெரும்பாலான சேவைகளை நகர சபையாலேயே மேற்கொள்ளப்படு கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில், ஆலய நிர்வாகத்துடன் கதைப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது.

மேலும், தொண்டைமானாறு வழியாக வரும் 751 இலக்க பேருந்துச் சேவை தொண்டைமானாறு சந்தியுடனே செல்வதாகவும் சந்நிதி கோவில் வழியாகச் செல்வதற்கு உரிய இடங்களுக்கு அறிவித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை ஆகவே இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் ஈபிடிபி உறுப்பினர் கமல் தெரிவித்தார். இது தொடர்பில் போக்குவரத்துச் சபையுடன் பேசுவது என முடிவெடுக்கப்பட்டது.

அத்துடன் வல்வெட்டித்துறை ஊரிக்காடு இராணுவத்தினரின் காவலரணை அகற்ற வேண்டுமென கடந்த நகரசபை அமர்வில் தீர்மானம் எடுக்கப்பட்டு அகற்றித் தரக்கோரி வடக்கு முதலமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதற்கு முதலமைச்சர் பதில் வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. காவலரண் எடுப்பது தொடர்பில் உரியவர்களுடன் கலந்துரையாடி உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்தப் பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-26)

வடமராட்சி, மர்லைசந்தை சிறி வரதராஜ விநாயகர் ஆலய தேர்த்திருவிழா கடந்த திங்கட்கிழமை பல்லாயிரக்கணக்காண அடியவர்கள் புடைசூழ சிறப்பாக நடைபெற்றது. விநாயகப் பெருமான் தேரேறி வருவதைப் படத்தில் காணலாம். (எ)





# முன்னோடிப் பரீட்சை

கொடிகாமம், ஜூலை 19

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தால் எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெறவுள்ள புலமைப் பரிசில் பரீட்சையை முன்னிட்டு மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

குறித்த கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் நாளை தனித்தனியே பரீட்சைகள் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-159)



லண்டனில் உள்ள வல்வை சிதம்பரக்கல்லூரி பழைய மாணவர்கள் உலகளாவிய நிலையில் நடத்திய சிதம்பரா கணிதச் சவால் போட்டிக்கான பரிசளிப்பு நிகழ்வு லண்டனில் கடந்த 14ஆம் திகதி நடைபெற்றது. நிகழ்வின் முதலாவது அமர்வுக்கான முதன்மை விருந்தினராக யாழ். பிரபல உயிரியல் ஆசான் வி.எஸ்.குணசீலன் தம்பதியர் கலந்து கொண்டனர். தாயகக் கல்வி வளர்ச்சிக்குச் சிறப்பான பங்களிப்பு நல்கும் ஆசிரியருக்கான விருது வி.எஸ்.குணசீலனுக்கு வழங்கப்பட்டது.

# காரைநகரில் வைக்கோல் பட்டடை திடீரெனத் தீப்பற்றியது

யாழ்ப்பாணம், ஜூலை 19

காரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட களபூமியில் உள்ள வீடொன்றில் குவிக்கப்பட்டிருந்த வைக்கோல் பட்டடை நேற்றுத் திடீரெனத் தீப்பற்றிக்கொண்டது.



இது தொடர்பாக பிரதேச செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பிரதேச செயலக இடர் முகாமைத்துவப் பிரிவுடன் இணைந்து பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மிகத் தீவிரமாகப் போராடி தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். காரைநகர் பிரதேச சபையினர் தீயணைப்புக்கு தண்ணீர் வழங்கினர்.

உரிய நேரத்திற்குள் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருக்காவிட்டால் அருகில் இருந்த மற்றைய வைக்கோல் பட்டடை மற்றும் அருகே இருந்த வீடு என்பனவும் தீக்கிரையாகியிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (5)



# நிதி உதவி

கொடிகாமம், ஜூலை 19

கொடிகாமம், திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் திறமையான மாணவர்கள் ஐந்து பேருக்கு அவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக தலா 10ஆயிரம் ரூபா கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டது கனடாவில் வசிக்கும் கல்லூரியின் பழைய மாணவி பாலேஸ்வரி நந்தகுமாரன் என்பவர் இந்த நிதியை அன்பளிப்புச் செய்தார்.

ஜி.சி.ஈ உயர்தர மாணவர் ஒருவருக்கும், தரம் எட்டில் 2 மாணவர்களுக்கும் தரம் பத்தில் 2 மாணவர்களுக்கும் என 5 மாணவர்களுக்கு இந்த நிதி வழங்கப்பட்டது என்று கல்லூரி அதிபர் தெரிவித்தார். (எ-159)

## கைதடியில் சுட்டுக்கொல்லப்பட்ட கூட்டுறவுப் பணியாளர்கள்

# நினைவுத் தூபிக்கான அடிக்கல் நடப்பட்டது

தென்மராட்சி, ஜூலை 19

யாழ்ப்பாணம், கைதடி பலநோக்குக் கூட்டு றவுச் சங்கத்தின் கிளைக் கடைக்குள் நின்ற வேளையில் துப்பாக்கிச் சூட்டில் சாவடைந்த கைதடிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர்கள் உட்பட பத்துபேரின் நினைவாக அமைக்கப்படவுள்ள புதிய தூபிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு சங்கத் தலைமை அலுவலகத்துக்கு முன்பாககடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

கடந்த 1984 ஆகஸ்ட் 13ஆம் திகதி ரோந்து வந்த படையினர் மற்றும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற தாக்குதலின்போது சங்கத்தின் கிளைக்கடைகளில் இருந்த பணியாளர்கள் எட்டுப் பேரும் பொதுமக்கள் இருவருமாக 10 பேர் சாவடைந்தனர்.

இந்தப் பத்துப் பேரின் நினைவாக, சம்பவம் இடம்பெற்ற கடைக்கு முன்பாக நினைவுக்கல் நடப்பட்டு வருடாவருடம் நினைவஞ்சலிகள் நடத்தப்பட்டு வந்தன. சம்பவம் இடம்பெற்ற இடத்தில் காணப்பட்ட கடைகள் விஸ்தரிப்புக்காக அங்கிருந்த நினைவுக்கல் தற்போது அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. அதைச் சங்கத் தலைமை அலுவலகத்துக்கு முன்பாக நட சங்க நிர்வாகத்தினரால் முடிவு செய்யப்பட்டது.

எதிர்வரும் 13ஆம் திகதி நினைவுத்தூபி திறக்க ஏற்பாடுகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

கைதடி கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் இ.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர்களான கேசவன் சயந்தன், பா.கஜதீபன், கைதடி வணிகர் மன்றத் தலைவர் க.பிரபாகரன் சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர்களான க.கேதீஸ்வரன், ஜானகி இராசேந்திரம், தி.தங்கவேலு உயிரிழந்தவர்களின் குடும்பத்தி னர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். (எ -9)

# வகுப்பறைத் தொகுதி திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19

அச்சுவேலி, சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத் தொகுதி கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

வகுப்பறைக் கட்டடத்தை யாழ்ப்பாண மாவட்டச் செயலர் என்.வேதநாயகன் மற்றும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

மாவட்டச் செயலரின் சிபார்சின் கீழ், மீள்குடியமர்வு மறுவாழ்வு வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் சுமார் 9.14 மில்லியன் ரூபா நிதியில் குறித்த கட்டடம் அமைக்கப்பட்டது.

இதன்போது, சிவஸ்ரீ கு.வை.வைத்தீஸ்வரக் குருக்களால் பாடசாலை ஸ்தாபகரின் பூட்டனாருக்குப் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசில்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. (எ-106)







# கொட்டில்களில் வாழும் மக்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கக் கோரிக்கை

## வலி.மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் பிரதேச செயலருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

வலி.மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட மூளாய் கிழக்கு, ஒளி சனசமூக நிலையத்தின் கீழ் கொட்டிகளில் வாழும் வறுமைப்பட்ட மக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வீடுகள் வழங்க வேண்டும் என்று பிரதேசசபைத் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன் வலி.மேற்குப் பிரதேசச் செயலர் பிறேமினியிடம் கோரியுள்ளார்.

இது தொடர்பில் பிரதேச செயலருக்கு அவர் அனுப்பி வைத்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சங்கானைப்பிரதேசசெயலர் பிரிவில் ஜெ-171 மூளாய் கிழக்கில்-ஒளி சனசமூக நிலையப் பிரிவின் கீழ் வாழும் 22 குடும்பங்கள், வீடின்றி வறுமையில் வாழும் ஏழைக் குடும்பங்களாகவும் சமுர்த்திப் பயனாளிக் குடும்பங்களாகவும் கொட்டில் வீட்டில் வாழும் குடும்பங்களாகவும் இனம்காணப் பட்டுள்ளன.

இன்று நல்லாட்சி அரசால் வீடின்றி வாழும் குடும்பங்களுக்குப் பல்வேறு திட்டங்களின் ஊடாக வீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வலி.மேற்குப் பிரதேசம் அரசால் வளர்ச்சி அடைந்த பிரதேசமாக இனம் காணப்பட்டுள்ளது. அவ்வாறு இருந்த போதிலும் இன்றும் வீடின்றி, மலசலகூடமின்றி, கிணறுகளின்றி எமது மக்கள் பல வேதனைகளுடன் வாழ்ந்து வருகின்றனர்.

எனவே குறித்த 22 குடும்பங்களது குடும்பப்பதிவு அட்டை, உறுதி ஆதனங்கள், மற்றும் ஆவணங்கள் இணைத்து முன்னிலைப்படுத்துகின்றேன். அவர்களின் நிம்மதியான வாழ்வுக்கு வீடுகள் வழங்க வேண்டும் - என்றுள்ளது.

இது தொடர்பாக பிரதேசசபைத் தவிசாளர் த.நடேனேந்திரனுடன் தொடர்புகொண்டு கேட்டபோது 'இந்த ஒளி சனசமூகநிலையத்தின் கீழ் 100 குடும்பங்கள் வாழ்கின்றன. அவர்கள் அடிப்படை வசதிகள் அற்ற நிலையிலேயே குடிசைகளில் வாழ்க்கை நடத்துக்கின்றனர். அவர்களுக்கு இதுவரைகாலமும் வீடுகள் எவையும் வழங்கப்படவில்லை. இதனால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக எனக்குக் கடிதம் மூலம் தெரியப்படுத்தியிருந்தனர்.

அவர்கள் இடம்பெயர்வுக்கு முற்பட்ட காலம் அதனைத்தொடர்ந்து அதற்கு பின்னர் எனப் பல தசாப்தங்களாக இங்கு வாழ்கின்றனர். கூடுதலாக அன்றாட வேலைகளுக்கு செல்லும் குடும்பத்தலைவர்கள் குடும்பங்கள், வறுமைக்கோட்டுக்குட்பட்ட சமுர்த்தி நிவாரணம் பெறுவோர் குடும்பங் கள், பெண்தலைமைத்துவக்குடும்பங்கள் போன்ற குடும்பங்களே இங்குள்ளன. பல தடவைகள் திட்ட வீடுகளுக்கு கோரியும் இதுவரை கிடைக்கப்பெற வில்லை. இவர்கள் தமது காணிகளுக்கான சொந்தமான உறுதிகளைவைத்துள்ளனர். எனவே அவர்களுக்கு வீட்டுத்திட்டங்களை முன்னுரிமைப்படுத்தி வழங்குமாறு பிரதேசசெயலருக்குக் கடிதம்மூலம் வேண்டு கோள் விடுத்துள்ளேன் - என்று தெரிவித்தார். (எ-114)

## வீட்டிலிருந்து ஆசிரியர் நேற்று சடலமாக மீட்பு

கொடிகாமம், ஜூலை 19

மீசாலை மருதடியில் ஆசிரியரின் சடலம் அவரது வீட்டிலிருந்து நேற்று இரவு மீட்கப்பட்டுள்ளது. அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் பொன்னையா சிவசுதன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். உயிரிழப்புக்கான காரணம் நேற்றிரவு வரையில் தெரியவில்லை. (5.9.131.159)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம்,ஜூலை 19

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் கல்வளை ஆட்டுப்பிட்டி ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை மாலை விளக்கேற்றலுடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து எட்டு நாள்கள் மாலை வைரவ பெருமானுக்கு பூசைகள் இடம்பெற்று வீதியுலாவரும் ஒன்பதாவது நாள் சனிக்கிழமை காலை 6 மணிக்கு பொங்கல் பூசைகளுடன் ஆரம்பமாகி மதியம் 12 மணியளவில் வீதியுலாவும் மகேஸ்வரப் பூசையும் இடம் பெறும் என ஆலயப் பரிபாலன சபையினரால் தெரிவிக்கப்பட்டது. (எ-63)

## குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

கீரிமலை, கருகம்பனை தமிழ் மன்றச் சன சமூக நிலையமும் இந்து இளைஞர் கழகமும் இணைந்து 7ஆவது தடவையாக நடத்தும் குருதிக்கொடை முகாம் கருகம்பனை தமிழ் மன்றம் சன சமூக நிலையத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 4 மணி வரை இடம்பெறவுள்ளது.

அத்துடன், 'உயிரிழப்பின் பின் கண் தானம் செய்ய விரும்புவோரும் அன்றைய தினம் பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-114)

## நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ்ப்பாண மாநகர சபையின் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி ஆதனவரி நிலுவை அறவீடுகளை மேற்கொள்ளும் பொருட்டு இன்று19ஆம்திகதிவியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை வட்டாரம் 4க்கான நடமாடும் சேவை யூபிலி மகப்பேற்று நிலையத்தில் இடம்பெறும் யாழ்ப்பாண மாநகர சபைப் பிரதி ஆணையாளர் தெரிவித்துள்ளார். (எ)

## சதுரங்கப் பயிற்சி

சாவகச்சேரி நகர இளைஞர் கழகத்தினரால் தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கு நிபுணத்துவம் வாய்ந்த சதுரங்க பயிற்சியாளர்களால் இலவச சதுரங்கப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. சாவகச்சேரியில் நடைபெறவுள்ள பயிற்சிகளில் பயிற்சி பெற விரும்பும் மாண வர்கள் சாவகச்சேரி டச்சு சாலை செருக்கல் பிள்ளையார் சாலையில் உள்ள பொது நோக்கு மண்டபத்தில் பெயர்களைப் பதிவு செய்யுமாறு கழகச் செயலர் மு.கோகுல்ராஜ் அறிவித்துள்ளார். (எ-9-8)

## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஜூலை 19

நல்லூர், சங்கிலியன் மன்றத்தின் 73ஆம் ஆண்டுநிறைவை முன்னிட்டு மன்றம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் மன்ற மண்டபத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை நடைபெறவுள்ளது.

நரம்புணர்ச்சிப் பரிசோதனை, எலும்புகள் பரிசோதனை, நவீன முறையில் கொழுப்பின் அளவுப் பரிசோதனை, குருதியில் நீரிழிவுப் பரிசோதனை, தோல் சம்மந்தமான பரிசோதனை என்பன இடம் பெறவுள்ளதோடு, கடந்த மே மாதம் கண்பரிசோதனை செய்தவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளும், மன நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவள ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளன.

பதிவுகள் அனைத்தும் 21ஆம் திகதி காலை 8 மணிக்கு மேற்கொள்ளப்படும் என்று சங்கிலியன் மன்றத்தினர் தெரிவித்துள்ளனர். (எ-113)

## திண்மக்கழிவுகள் கொட்டப்படும் பற்றைகள் துப்புரவு செய்யப்பட்டன

யாழ்ப்பாணம்,ஜூலை 19

பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் எடுத்துக்கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து வடலியடைப்பு, வெள்ள வாய்க்கால், காயா வீதி ஆகியன பற்றைகள் வெட்டித் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

வலி.தென் மேற்குப் பிரதேசத்தில் பண்டத்தரிப்பு பட்டினத்தில் வடலியடைப்பிலுள்ள வெள்ள வாய்க்காலில் திண்மக் கழிவுகள் கொட்டப்பட்டுள்ளமையால் மழை வெள்ளம் ஓடமுடியாத நிலை மற்றும் ஆயிரத்து 500 மீற்றர் நீளமான காயா வீதியில் இரு பக்கங்களும் பற்றைக்காடாகக் காட்சியளிப்பதனால் போக்குவரத்திற்குச் சிரமம் ஏற்படுகின்றமை ஆகியன தொடர்பில்பிரதேசசபைத் தவிசாளருக்குச் சுட்டிக் காட்டியுள்ள புளொட்கட்சியின் முன்னாள்ப்பிரதேச சபை உறுப்பினர் குமணன் மழைகாலம் ஆரம்பமாவதற்கு முன் இவற்றைத் துப்பரவு செய்து தருமாறும் கோரியிருந்தார்.

இது தொடர்பாக வலி. தென் மேற்குப் பிரதேச சபைத்தவிசாளர் அ.ஜெபநேசனுடன் "உதயன்" தொடர்புகொண்டு கேட்டபோது பிரதேச சபை உறுப்பினர் குமணன் தெரியப்படுத்தியதையடுத்து இந்த வெள்ள வாய்க்கால் மற்றும் காயா வீதி என்பன கடந்த 2,3 வாரங்களுக்கு முன்னர் பிரதேச சபை ஊழியர்களால் துப்பரவு செய்யப்பட்டன - என்றார். (114-115)



## மொழிபெயர்ப்பு நாவல்களின் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம் ஜூலை 19

சிங்கள மொழியில் இருந்து தமிழ் மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்ட நாவல்கள் மற்றும் சிறுகதையின் அறிமுக நிகழ்வு யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்றது.

சாமிநாதன்விமல்மொழிபெயர்த்தகௌஷல்ய குமாரசிங்ஹறவின் 'இவ்விரகசிய சாரளத்தால் உற்றுநோக்கின்' (நாவல்) மற்றும் பிரபாத் ஜயசிங்ஹறவின் 'மகர தோரணம்' (சிறுகதைகள்), சிவலிங்கம் அனுஷா மொழிபெயர்த்த நிஷ்ஷங்க விஜேமான்ன வின் 'தாரா ஷியாமலீகுமாரசுவாமி' (நாவல்) ஆகிய நூல்களின் அறிமுக நிகழ்வே நடைபெற்றது. (எ-37)

## கொடியேற்றம்

வடமராட்சி, ஜூலை 19

வதிரி, காளையந்தோட்டம் திருவருள்மிகு ஸ்ரீ முத்துகுமாரசாமி திருக்கோவில் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 19ஆம் திகதி நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

பத்து தினங்கள் இடம்பெறும் திருவிழாவின் வேட்டைத்திருவிழா 25ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கும் சப்பறத்திருவிழா 26ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கும் தேர்த்திருவிழா 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கும் தீர்த்தத்திருவிழா மறுநாள் 28ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கும் நடைபெறுவதுடன் பெருந்திருவிழா நிறைவுபெறும்.

இருபாலை கற்பகப்பிள்ளையார் திருக்கோவில் முதன்மைக் குரு சி.பா. செல்வசேனக்குருக்கள் முதன்மைக் குருவாக இருந்து பெருந்திருவிழாவை நடத்தி வைப்பார். (எ-173)

## கலைஞர்கள் தகவல்களை சமர்ப்பிக்கவும்

யாழ்ப்பாணம், ஜூலை 19

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நாடு முழுவதும் உள்ள கலைஞர்களின் தகவல்களை தரவுத் தளத்தில் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே நல்லூர்ப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கலைஞர்கள் தரவுத் தளத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுத் தங்கள் தகவல்களை முழுமைப்படுத்தி ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் நல்லூர்ப் பிரதேச செயலகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும் என நல்லூர்ப் பிரதேசசெயலாளர் எ.அன்ரன் யோகநாயகம் தெரிவித்துள்ளார். (எ)



## மருத்துவப் பரிசோதனை

கொடிகாமம், ஜூலை 19

கொடிகாமம், திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கான மருத்துவப் பரிசோதனை பாடசாலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பாடசாலையில் கல்வி கற்கும் சிறப்புக் கல்வி மாணவர்கள் உட்பட 112 மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனைகள் இடம்பெற்றன என்று பாடசாலை அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் தெரிவித்தார்.

மருத்துவப் பரிசோதனைகளைச் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் க.தயாளனும் ஏனைய பரிசோதனைகளைப் பிரதேசப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.அருள்குமாரும் மேற்கொண்டனர். (எ-159)

## மாகாணசபைத் தேர்தல் ரணில் தலைமையில் நாளை கூட்டம்

கொழும்பு, ஜூலை 19

மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்தின் போது மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவது குறித்து ஆராயப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கட்சித் தலைவர்களது கூட்டம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றக் கட்டத் தொகுதியில் இடம்பெற்றது. இதன்போது மாகாணசபைத் தேர்தல்களை உரிய காலத்தில் நடத்தவேண்டியதன் அவசியம் குறித்து மகிந்த அணியின் சார்பில் பங்கேற்ற தினேஷ் குணவர்த்தன வலியுறுத்தியுள்ளார். சிறுபான்மைக் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் தேர்தலை நடத்தவேண்டியதன் அவசியம் குறித்து எடுத்துக்கூறியுள்ளனர். நாளை வெள்ளிக்கிழமை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடி இந்த விடயம் தொடர்பில் ஆராய்வது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. (5,61)

## தமிழ் மக்களின் உரிமைகளையே வடக்கு முதலமைச்சர் கோருகின்றார்

### இப்படிச் சொல்கிறார் பொன்சேகா

கொழும்பு, ஜூலை 19

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சர்ச்சைக்குரிய கருத்துக்களைக் கூறி வருகின்றார் என்ற போதிலும் அடிப்படையில் அவர் தமிழ் மக்களின் உரிமைகளையே கோருகின்றார். இவ்வாறு கோருவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கூற முடியாது. தேசியப் பாதுகாப்புக்குப் பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் தமிழ் மக்களுக்கான தீர்வை அரசு வழங்கும். இவ்வாறு வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ராஜகிரியவில் உள்ள பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் அலுவலகத்தில் நேற்றுப் புதன் கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு முதலமைச்சர் உள்ளிட்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்களை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டால் கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். நாட்டில் மீண்டும் ஒரு போதும் போர் உருவாகாது. வடக்கில் இடம்பெறும் சில விடயங்களைக் கருத்தில் கொண்டு எதிர்த் தரப்பினர் மீண்டும் பயங்கரவாதப் போர் தோற்றம் பெறும் என்று குறிப்பிடுவது அரசியல் தந்திரமாகவே காணப்படுகின்றது.

வடக்கில் புதைக்கப்பட்ட விடுதலை புலிகளின் ஆயுதங்கள், சீருடைகள் மீட்கப்படுகின்றமை; காட்டி பயங்கரவாதம் மீண்டும் உருவாகும் என்ற எதிர்த்தரப்பினர் கருத்துக்கள் குறிப்பிடுகின்றனர். 30 ஆண்டுகள் போர் இடம்பெற்ற பிரதேசத்தில் விடுதலை புலிகள் புதைத்து வைத்த ஆயுதங்கள் தற்போது நில அகழ்வின் போது கண்டெடுக்கப்படுவது சாதாரண விடயமாகவே காணப்படுகின்றது.

இதனைக் குறிப்பிட்டு, வடக்கு மக்களை சில தரப்பினர் தெற்கு மக்களின் பார்வையில் விரோதிகளாகவே பார்க்க முனைகின்றனர். வடக்கு அரசியல்வாதிகள் ஒரு கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதை போன்று தெற்கு அரசியல்வாதிகள் பிறிதொரு கொள்கையினை நோக்கிப் பயணிக்கின்றனர் - என்றார்.

**பாதாள உலகக் குழு**

'பொலிஸ் சேவையில் முன்னர் கடமையாற்றி தற்போது பாதாள உலகக் குழுவில் அங்கம் வகிக்கும் ஒருவர் அமைச்சர் சரத் பொன்சேகா கலந்துகொள்ளும் வைபவங்களில் கலந்து கொண்டுள்ளார். அதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. அமைச்சர் சரத் பொன்சேகா பாதாள உலகக் குழு உறுப்பினர்களை தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டிருப்பாராயின் அவரை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கவேண்டும்' என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் பத்ம உதயசாந்த நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்த பொன்சேகா, பாதாளக் குழுக்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களுடனான எவ்வித தொடர்புகளும் எனக்குக் கிடையாது. எனது ஒளிப்படத்தினை மையப்படுத்தி கடந்த தினங்களில சில ஊடகங்கள் முக்கிய பாதாளக் குழுக்களுக்கு அமைச்சரது பாதுகாப்பு கிடைக்கப் பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளன. இதற்கு எதிராக விரைவில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்- என்றார். (5,61)

## தொடர்...

னர். வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடி கடந்த ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக கூடாரம் அமைத்து ஆரம்பிக்கப்பட்ட தொடர் போராட்டமானது நேற்று 500ஆவது நாளை எட்டியது. இதனை முன்னிட்டே முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் முன்பாக நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பமான போராட்டம் பி.ப. 2 மணிவரை நடத்தப்பட்டது.

'பன்னாட்டுச் சமூகமே எமக்குப் பதில்கூறு', 'அரசே நாம் உனது கைகளில் ஒப்படைத்த பிள்ளைகள் எங்கே?', ' விசாரணை என்று எம்மை ஏமாற்றாதே', 'தமிழ் பிரதிநிதிகளே வாயடைத்துள்ளீர்களா?', 'எங்கே எமது உறவுகள்?', 'பன்னாட்டுச் சமூகமே கண்ணைத் திற', 'பிள்ளைகளை ஒப்படைத்த பெற்றோர்களின் கதி என்ன?' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை தாங்கியவாறும் உள்ளக விசாரணை வேண்டாம், காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகம் வேண்டாம், பன்னாட்டு விசாரணைதான் எமக்கு வேண்டும் என்றும் கோசம் எழுப்பினர்.

இதுவரை தொடர்போராட்டத்தை மேற்கொண்ட உறவுகள் நேற்றுடன் அதனை நிறுத்தினர்.

'தொடர்போராட்டத்தை நிறுத்திக் கொள்வதால் போராட்டத்தைக் கைவிட்டதாக அரசு எண்ணக்கூடாது. போராட்ட வடிவத்தை மாற்றி ஒவ்வொரு மாதமும் 30ஆம் திகதிகளில் பெரிய போராட்டம் முன்னெடுக்கப்படும்' என்று மக்கள் அறிவித்தனர். (5,31)

## தூக்குத்...

குத் தண்டனை விதிப்பதற்காக, 18 பேர்களின் பெயர்கள் அடங்கிய ஆவணம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

அதில் 7 தமிழர்களும் உள்ளடங்குகின்றனர்.

2003ஆம் ஆண்டு தூக்குத் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ள சிறி தர்மாகரன், 2007ஆம் தீர்ப்பளிக்கப்பட்ட வேலாயுதன் முரளிதரன், 2009ஆம் ஆண்டு தீர்ப்பளிக்கப்பட்டுள்ள சிவனேசன் ராஜா, 2012ஆம் ஆண்டு தீர்ப்பளிக்கப்பட்டுள்ள எஸ். புண்ணியமூர்த்தி, எஸ்.கணேசன், 2013ஆம் ஆண்டு தீர்ப்பளிக்கப்பட்டுள்ள விநாயகமூர்த்தி மற்றும் எஸ்.ஏ. சுரேஸ் குமார் ஆகியோரின் பெயர்களே அந்தப் பட்டியலில் உள்ளது. (5)

## நீதிமன்ற இணக்கப்பாட்டை புறந்தள்ளி தலைமறைவானவருக்கு கடூழியச் சிறை

யாழ்ப்பாணம், ஜூலை 19

நிதி மோசடிக் குற்றச்சாட்டு வழக்குகள் இரண்டில் நீதிமன்றில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டைப் புறந்தள்ளி தலைமறைவாகியிருந்த பெண்ணுக்கு நான்கு ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று நேற்றுத் தீர்ப்பளித்தது.

'இரண்டு வழக்குகளிலும் எதிரிக்கு தலா இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. எதிரி தண்டனையை ஒன்றன் பின் ஒன்றாக அனுபவிக்கவேண்டும்' என்று நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் தண்டனைத் தீர்ப்பளித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இருவரை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து ஹட்டனைச் சேர்ந்த பெண் ஒருவர் பணம் பெற்றுள்ளார். அவருக்குரிய பணத்தை வங்கியில் வைப்பிலிட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவரும் நீண்ட நாள்களாக ஏமாற்றப்பட்டு வந்துள்ளனர்.

பணத்தை வழங்கிய இருவரும் யாழ்ப்பாணம் சிறப்பு குற்ற விசாரணை பொலிஸ் பிரிவில் முறைப்பாடுகளை வழங்கினர்.

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து பணத்தைப் பெற்று நம்பிக்கை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் அந்தப் பெண்ணுக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்.

நீதிமன்றின் உத்தரவில் கைது செய்யப்பட்ட அவர், விளக்கமறியலில் வைக்கப்பட்டு, பின் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில், முறைப்பாட்டாளர்களுக்கான பணத்தை தவணை அடிப்படையில் மீளச் செலுத்துவதாக அந்தப் பெண் நீதிமன்றில் இணக்கப்பாட்டுக்கு வந்தார்.

2015ஆம் ஆண்டு இவ்வாறு மன்றில் வழங்கிய வாக்குறுதியை மீறி அவர் நீதிமன்றில் முன்னிலையாகாமல் தலைமறைவாகி வாழ்ந்து வந்தார்.

எதிரிக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் தொடர்ச்சியாக திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டு வந்தது.

அந்தப் பெண் நேற்று முன்தினம் மல்லாகம் நீதிவான் நீதிமன்ற எல்லையில் கைது செய்யப்பட்டார். அவரை நேற்றுவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட மல்லாகம் நீதிவான் நீதிமன்றம், சந்தேகநபரை யாழ்ப்பாணம் நீதிமன்றில் முற்படுத்துமாறு யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு அறிவுறுத்தல் வழங்கியது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் அந்தப் பெண் முற்படுத்தப்பட்டார்.

நீதிமன்றில் முன்னிலையாகாமல், மன்றுக்கு வழங்கிய வாக்குறுதியை மதிக்காமல் செயற்பட்டதாக அந்தப் பெண்ணை கண்டித்த நீதிவான் அவர் மீதான குற்றங்களுக்கு தண்டனைத் தீர்ப்பை வழங்கினார். (5,103)

## அரசின்...

யில் இருக்கின்றார்கள். உண்மை கண்டறியப்படவேண்டும் என்று வலியுறுத்தி பல மாதங்களாகப் போராடுகின்றார்கள். இது தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் எமது எதிர்பார்ப்புக்களை முழுமைப்படுத்தும் வகையில் இல்லை. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வந்துள்ள பெல்ஜியம் நாடாளுமன்ற நட்புறவுக் குழுவினருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இடையிலான சந்திப்பு நாடாளுமன்றக் கட்டிடத் தொகுதியில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் பணியகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது.

இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரின் ஊடகப் பிரிவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

**அரசமைப்பு**

நாட்டில் தற்போது காணப்படும் அரசமைப்பு எல்லோரினதும் இணக்கப்பாட்டுடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றல்ல என்பதனைச் சுட்டிக் காட்டினார். அதேவேளை நாட்டின் பன்முகத் தன்மையையும் பல இனங்களையும் அனுமதிக்கும் ஒரு புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான முயற்சிகள் இடம்பெற்று ஒரு வரைபு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

மேலும் இந்த முயற்சிகள் கைகூடுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதனையும் நீண்டகாலமாக தொடரும் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வினை எட்டும்முகமாக நிலவும் சூழ்நிலைமையைச் சாதகமாகப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

இந்த நாட்டை ஒரு புதிய பாதையில் கொண்டு செல்லும் நோக்கில் புதிய அரசமைப்பானது ஆண்டிறுதிக்குள் நிறைவேற்றப்பட வேண்டும். நாட்டை முன்னேற்றமான பாதையில் இட்டு செல்வதா? அல்லது மீண்டும் பின்னோக்கி நகர்த்துவதா? என்பதே இன்றுள்ள தெரிவுகளாகும். நாட்டை முன்னேற்றமான ஒரு பாதையில் கொண்டுசெல்ல வேண்டுமானால் ஒரு புதிய அரசமைப்பை நிறைவேற்றுவது இன்றியமையாததாகும்.

**மக்கள் விரக்தி**

தமது பிரச்சினைகளுக்குத் தாம் எதிர்பார்த்த உடனடி உதவிகள் கிடைக்காமையால் மக்கள் விரக்தி அடைந்திருப்பதனையும், மக்கள் பரம்பரை பரம்பரையாக நூற்றாண்டு காலம் வாழ்ந்த நிலங்களை படையினர் கைவசப்படுத்தி வைத்துள்ளதனையும் இவற்றினை விடுவிப்பது தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் மிக மந்தகதியில் இடம்பெறுகின்றது.

**காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்**

காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்கள் தொடர்ந்தும் தங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் ஒரு நிலையற்ற நிர்க்கதி நிலமையில் இருக்க முடியாது. உண்மை கண்டறியப்படவேண்டும். அதேவேளை எமது மக்கள் பல மாதங்களாக இந்த விடயங்கள் தொடர்பில் தொடர்ச்சியான போராட்டங்களில் ஈடுபட்டுவருகிறார்கள். இந்த விடயங்கள் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் எமது எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யும் வண்ணம் இல்லை.

கடந்த காலங்களில் இலங்கை தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பங்களிப்புகளுக்கு நன்றி தெரிவித்த எதிர்க்கட்சிதலைவர், நாட்டு மக்களுக்கு பாதக விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய நடவடிக்கைகளைச் சீர்செய்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசை வலியுறுத்தவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். (5)

## தொழிற்...

சேர்ப்பு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலக மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தினரால் தொழிற் சந்தை ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்படுவது வழமை. இந்த ஆண்டுக்குரிய தொழிற் சந்தை யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் நாளை மறுதினம் சனிக் கிழமை இடம்பெறவுள்ளது. காலை 8.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரை நடைபெறும்.

தொழிற் சந்தையில் தொழில் வழங்கும் நிறுவனங்கள் தங்களது கண்காட்சிக் கூடங்களை அமைப்பார்கள். கடந்த காலங்களில் பொலிஸ் திணைக்களத்துக்கு ஆள் சேர்ப்புக்காக தொழிற் சந்தையில் இடம்வழங்கப்பட்டிருந்தது.

இந்த முறை, மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் தலைமையகத்தினால் இராணுவத்தினருக்கு ஆள் சேர்ப்புச் செய்வதற்கு தொழிற் சந்தையில் இடம் வழங்கப்பட்டுள்ளது. சிவில் நிர்வாகத்தில், இராணுவத்தின் தலையீடு தொடர்வதாகக் குற்றம் சுமத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5)

## விபத்தில்...

மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்த நிலையில் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணையை, திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (5,8)

# கஞ்சா கடத்தலைத் தடுப்பதற்கு இந்தியாவுடன் இலங்கை பேச்சு

## சட்டம் ஒழுங்கு அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 19**

**இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கேரள கஞ்சா கடத்தப்படுவது அதிகரித்துள்ளது. இதனைக் கட்டுப்படுத்த இந்தியாவுடன் பேச்சு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு நேற்றுத் தெரிவித்ததாவது:

கேரளக்கஞ்சாகடத்தப்படுவதைத்தடுப்பதற்காக சட்ட நடைமுறைப்படுத்தும் இந்திய அதிகாரிகளின் உதவிப்யைப் பெறும்நோக்கில்இந்தியாவுடன்பேச்சு இடம்பெறும்.

கடந்தவருடம்4ஆயிரத்து660கிலோ கஞ்சாபோதைப்பொருளைக்கைப்பற்றினோம். இவற்றில் பெரும்பாலானவை கேரளக்கஞ்சா.

இதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில்25ஆயிரம்பேர்கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று அமைச்சர் தெரிவித்தார்.

வடபகுதி கடல் ஊடாக கேரளக் கஞ்சா இலங்கைக்குள் கடத்தப்படுகின்றது. இதன் காரணமாக யாழ்ப்பாணமே மோசமாகபாதிக்கப்பட்டுள்ளது.

இந்திய அதிகாரிகளின் உதவியைப் பெறுவதற்காக அவர்களுடன் பேச்சு நடத்தவுள்ளோம். கடத்தல் தொடர்பான எங்கள் விசாரணைகளுக்குச் சாட்சியங்கள் அவசியமாகவுள்ளன என்றுரஞ்சித்மத்துமபண்டாரமேலும் தெரிவித்தார். (4)

# நகைக் கொள்ளையர்களென இருவர் பொலிஸாரால் கைது

## நகைகள், உந்துருளி மீட்கப்பட்டன

கொழும்பு, ஜூலை19

உந்துருளியில்சென்றுவீதியில் செல்லும் பெண்களிடம் நகைகளைக் கொள்ளையிட்டுவந்தனர்என்று இருவரைப் பொதுமக்களின் உதவியுடன் கைது செய்யப்பட்டனர்.

கொள்ளையிடப்பட்டநகைகளில் 15 பவுண்களையும் கொள்ளைக்குப்பயன்படுத்தப்பட்ட உந்துருளியும்மீட்கப்பட்டுள்ளன என்று நீர்கொழும்பு ஊழல் ஒழிப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

பமுனுகம, போப்பிட்டிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த34மற்றும்40வயதுடையவர்களே கடந்த திங்கட்கிழமைகைதுசெய்யப்பட்டுள்ளனர்.

34 வயதுடைய நபர் முன்னரும் 18 தங்கச் சங்கிலிகளைக் கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர். தொடருந்தில்பயணிக்கும் பெண்களின் நகைகளைக் கொள்ளையிட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டவர்.

மற்றையவர் பேலியகொடை, வத்தளை ஆகிய பிரதேசங்களில்நகைபறிப்புச்சம்பவங்களுடன்தொடர்புடைய 3 பிள்ளைகளின் தந்தை. சந்தேகநபர்களுக்கு எதிராகக் கொச்சிக்கடை,கட்டுநாயக்க,சீதுவை, நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுகளில் 10 வழக்குகள் தொடரப்பட்டுள்ளனமைய விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. கொள்ளையிட்ட நகைகள் ஜாஎல பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரிடம் அடகு வைத்துள்ளனர். அந்தநபர்நீர்கொழும்பு ,வத்தளைஆகியபிரதேசங்களில் உள்ள நகை அடகு வைப்பு நிலையங்களில் அந்த நகைகளைக் கூடுதலான விலைக்கு அடகு வைத்துள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4,71)

# பரராஜசிங்கம் கொலை: பிள்ளையான் மீதான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை19

கிழக்குமாகாண முன்னாள் முதலமைச்சர்பிள்ளையான் எனப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தன் மீதான வழக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசெப் பரராஜசிங்கம் படுகொலைச் செய்யப்பட்ட தொடர்புடைய குற்றச்சாட்டில், கிழக்குமாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் கைது செய்யப்பட்டு ஆயிரம் நாள்களுக்கு மேலாக விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவர் மீதான வழக்குவிசாரணைமட்டக்களப்புமேல்நீதிமன்றில் நேற்று எடுக்கப்பட்டபோது மறியல் நீடிக்கப்பட்டது.

ஜோசெப் பரராஜசிங்கம், 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் 25 ஆம் திகதி மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நத்தார் தின நள்ளிரவு ஆராதனையில் கலந்துகொண்டிருந்தபோது இனந்தெரியாதோரின்துப்பாக்கிச்சூட்டில்கொல்லப்பட்டார். (4)

# நாடகவிழா ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நுண்கலைத்துதுறை மற்றும் நாடகமும் அரங்கக்கலை மாணவர்களின் வெறுவெளி அரங்கக் குழுவினரால்ஏற்பாடுசெய்யப்பட்ட நாடகவிழாவின் ஆரம்பநிகழ்வு இன்று வியாழக்கிழமை 19அம் திகதி மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது. மேலும்சமகால அரங்கின் போக்குக்கள் தொடர்பான கலந்துரையாடல் 20,21ஆம் திகதிகளில் முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரையும் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து ஆற்றுகைகளும் இடம்பெறவுள்ளன. விழாவிலே மரவுவழி நாடகம், சமகால நாடகம், சிறுவர் நாடகம் சமூக நாடகம், தெருவெளி நாடகம் போன்ற ஆற்றுகைகளும் இடம்பெறவுள்ளன. நாடகத்துறையில் ஆர்வமுடைய அனைவரும் விழாவில் கலந்து கொள்வதன் மூலம் பயன்பெற முடியும்.

# 5 லட்சத்துக்கும் மேற்பட்டோர் அரச காணிகளில்

கொழும்பு, ஜூலை19

அரச காணிகளில் சட்டவிரோதமாக 5 இலட்சத்துக்கும் அதிகமானோர் வசிக்கின்றனர் என்று காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு மேற்கொண்ட ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. நாடுமுழுவதும் இந்த ஆய்வு நடத்தப்பட்டது என்று ஆணைக்குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பிறேபந்து ருவன் பத்திரன தெரிவித்துள்ளார். அவர்களுள் 50 ஆயிரம் பேருக்கு இந்த வருட இறுதிக்குள் காணி உறுதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இரத்தினபுரி, கண்டி, மாத்தளை, புத்தளம் உள்ளிட்ட சில மாவட்டங்களில் இதற்கான ஆரம்பக்கட்ட பணிகள் தற்போது இடம்பெறுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (4)

# கூட்டரசால் நாடு மோசமாகியுள்ளது

## கூறுகிறார் பசில்



கொழும்பு, ஜூலை19

தற்போதைய அரசின் கீழ், நாடு மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று முந்தினம்நடைபெற்றநிகழ்வுஒன்றில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச உருவாக்கிய புதிய அரசில் அனைத்து இன மக்களும் எந்தவித அச்சமும் இன்றி வாழக்கூடிய நிலை உருவாகும். பசி, உயிரிழப்புப் பயம், 30ஆண்டுகளாகஇடம்பெற்றபோர்மற்றும்சுனாமி பேரழிவுகளால் மக்கள் எதிர்கொண்ட துன்பங்களைவிட அதிகமான துன்பங்களை அனுபவிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை இன்றைய அரசு உருவாக்கியுள்ளது. இந்தநிலை சகல துறைகளிலும் பாதிப்பை ஏற்படுத்தும் - என்றார். (4)

# அர்ஜுன் அலோசியஸ் உள்ளிட்ட இருவரின் பிணை மனுத் தீர்மானம் ஒக்ரோபரில் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை19

பிணை வழங்குமாறு கோரி பர்பசுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும்அதன்நிறைவேற்றுஅதிகாரி கசுன்பலிசேனஆகியோர் தாக்கல்செய்தமீள்பரிசீலனைமனுதொடர்பானதீர்மானம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு மூலம் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் கசுன் பலிசேன ஆகியோர், மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி சம்பந்தமாக கைது செய்யப்பட்டுள்ள தம்மை பொதுச்சொத்துக்கள்சட்டத்தின்கீழ்பிணையில்விடுவிப்பதற்குகொழும்பு கோட்டைநீதிவான்மன்றநீதிவான்மறுப்புத்தெரிவித்ததாக நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

எனினும் விசாரணைகளின்படி இரகசியப் பொலிஸார் நீதிமன்றுக்குச்சமர்ப்பித்த அறிக்கையில் பொதுச்சொத்துக்கள் சட்டத்தின் கீழ் எந்த தவறும் இனங்காணப்படவில்லை என்று மனுதாரர்கள் தெரிவித்தனர்.

இதன்காரணமாக கொழும்பு நீதிவான் மன்று வழங்கிய பிணை மறுப்புத் தீர்ப்பு சட்டத்துக்கு முரணானது என்று தீர்ப்பளித்துதம்மைபிணையில்விடுவிக்கஉத்தரவிடுமாறு அர்ஜுன் அலோசியஸ் மற்றும் கசுன் பலிசேன மேன்முறையீட்டு நீதிமன்றில் கேட்டுள்ளனர். (4)

# படையினரைப் பலவீனப்படுத்தாது தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்தவும்

## கூட்டரசிடம் கோருகிறது பொது எதிரணி



கொழும்பு, ஜூலை19

பாதுகாப்புப் படைகளைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளை அரசு உடனடியாகக் கைவிட்டு, தேசிய பாதுகாப்பைஉறுதிப்படுத்தும்நடவடிக்கைகளைச்செயற்படுத்தவேண்டும்என்று பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர்மேலும்தெரிவித்ததாவது:

வடக்குகிழக்கில்இராணுவமுகாம்கள் அகற்றப்படுகின்றனஎன்றும்இராணுவத்தில் 25 வீத படையணியினர் நீக்கப்படுகின்றனர்என்றும் இராணுவம் வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ அறிவித்தல் மிகப்பாரதூரமான விடயம்.

இராணுவத்தின் 39 படையணிகள் குறைக்கப்படுகின்றன. இதில் 938 உயரதிகாரிகள் மற்றும் 23ஆயிரத்து 266படையணியினர்குறைக்கப்படும் நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது. ஆனால் இராணுவத் தளபதி அவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெறவில்லைஎன்றுகூறிஉண்மைகளை மறைத்து வருகின்றார்.

இந்தஅரசுஆட்சிக்குவந்தவுடன்புலம்பெயர் புலி அமைப்புகளுக்குக் கொடுத்தவாக்குறுதிகளைநிறைவேற்றும் வகையில் செயற்பட்டு வருகின்றமை மிகவும் மோசமானது. தகுதியான இராணுவ அதிகாரிகள் படைகளில்இருந்துநிராகரிக்கப்படுகின்றமை, இராணுவம்பலவீனப்படுத்தப்படுகின்றமை காரணமாக இடை நிலையில் உள்ள இராணுவ அதிகாரிகள் தமது எதிர்கால எதிர்பார்ப்புகளை வெறும் கனவாக மாற்றிக்கொள்ளும் நிலைமையே உருவாக்கியுள்ளது.

மறுபுறம்புலிகளுக்குஇழப்பீடுகொடுக்கும்அமைச்சரவைப்பத்திரம்அமைச்சரவையில் அங்கீகரிக்கப்படுகின்றது. சைனட் கடித்துக்கொண்டு உயிரை மாய்த்த புலிகளுக்கு வடக்கில் தூபி எழுப்பப்படுகின்றது. இந்த அரசின் ஆட்சியில் இதுவரை 84 ஆயிரம் ஏக்கர் இராணுவ காணித்துண்டுகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

ஆவா குழுக்களின் பயங்கரவாதச் செயற்பாடுகள்மீண்டும்தலைதூக்கி வருகின்றது. கிளைமோர் குண்டுகள் மீட்கப்படுகின்றன. இவற்றையெல்லாம்தாண்டிவிஜயகலாமகேஸ்வரன் வடக்கில் மீண்டும் புலிகள் உருவாக வேண்டும் என்ற அழைப்புக் குரல் எழுப்புகின்றார். இவற்றுக்குமத்தியில் இராணுவத்தை பலவீனப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றமைஏற்கத்தக்கஒன்றாகஅமையாது. ஆகவே பாதுகாப்புப் படைகளைப்பலவீனப்படுத்தும்நடவடிக்கைகளை அரசு உடனடியாகக் கைவிட்டு தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றார். (4)

# குற்றங்களைக் குறைக்க வழி கூறாதோர் தூக்குத்தண்டனையைஎதிர்ப்பதுசரியா?

## சாடுகிறார் வசந்த பண்டார எம்.பி.

கொழும்பு, ஜூலை19

இலங்கையில் போதைப்பொருள் குற்றச்செயல்கள் கடுமையாக அதிகரித்திருத்தபோது அவற்றைக்கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்து ஆலோசனைகூற அக்கறை காட்டாத மனித உரிமைகள் அமைப்புக்கள், போதைப்பொருள் குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றுவதற்கு அரசு தீர்மானித்ததும் கண்டனங்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு சிறிலங்காசுதந்திரக் கட்சியின்நாடாளுமன்றஉறுப்பினர் சாந்தபண்டார விசனம் தெரிவித்தார். கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாரந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும்தெரிவித்ததாவது:

போதைப்பொருள் குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றுவதற்கு அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேன எடுத்த தீர்மானம் பெரிதும் வரவேற்கத்தக்கது. அந்தத் தீர்மானம் அரசதலைவரைப் பற்றி நாட்டுமக்களிடமுள்ளமதிப்பை அதிகரித்திருக்கின்றது.

சிறிலங்காசுதந்திரக்கட்சியைப் பலப்படுத்துவதற்காகக் கட்சி மறுசீரமைப்புநடவடிக்கைகள், கட்சித்தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் தீவிரமாக இடம்பெற்றுவருகின்றன. கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது பெருஞ் சவால்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. தேர்தலின் பின்னர்சிலரின்தீர்மானங்கள் கட்சி மீது பாராதூரமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. இவற்றிலிருந்து மீண்டுசுதந்திரக்கட்சியைப்பலப்படுத்த புதிய வேலைத்திட்டங்களைநடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கட்சிக்குப் புதிய இளைய தலைமுறையினரை இணைத்துக் கொள்ளும் பணிகளும்ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் எதிர்த்தரப்பினர் ஊடக சந்திப்புக்களிலும் மக்கள் சந்திப்புக்களிலும், தற்போதையஅரசுநாட்டின்பொருளாதாரத்தை வீழ்ச்சியடையச் செய்துவிட்டதாகக் கூறிவருகின்றனர். அரசு ஒன்று ஆட்சிக்குவந்த முதல் மூன்று ஆண்டுகளில்நாட்டையும்நாட்டின்பொருளாதாரத்தையும்கட்டியெழுப்புவதற்கான திட்டங்களையும் அதற்குத்தேவையானவற்றையும் பெற்றுகொள்வதற்கான நடவடிக்கைகளையே முன்னெடுக்கும். இதற்கு முன்னர் இருந்தஅரசுகளும்இதனையே செய்துவந்துள்ளன.

அதேபோன்றுதான் கூட்டரசு ஆட்சிக்குவந்த முதல்முன்று வருடங்களில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வியூகங்களை வகுத்து இன்று மொரகாகந்த உட்பட பெரும் வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அதிலொன்றுதான் 'கிராம சக்தி' வேலைத் திட்டம். இது அனைத்துக் கிராமங்களையும் கட்டியெழுப்பும் நோக்கில் பல்வேறு துறைகளைஉள்ளடக்கியவகையில் கட்டியெழுப்பப்பட்டது. இந்தத் திட்டம் தற்போது நாடு முழுவதிலுமுள்ள கிராமப் பகுதிகளில் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

போதைப்பொருள் குற்றச் செயல்கள் நாட்டில் தற்போது பெரும்பாதிப்பைஏற்படுத்தியுள்ளன. இருப்பினும் கடந்த காலங்களில் போதைபொருள் பாவனையைக்கட்டுப்படுத்துவதற்கெனப் பெரியளவில் போதைபொருள் கட்டுபாட்டு நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆனால் கடுமையான அவதானங்களுக்கு மத்தியிலும்சட்டத்திலிருந்துதப்பிக்கும்போதைபொருள்பாவனை தொடர்பான குற்றவாளிகளால் மீண்டும் குற்றங்கள் நாட்டில் இடம்பெறுகின்றன.

போதைபொருள் பாவனை குறித்து மக்களுக்கு விழிப்புணர்வூட்டும்நடவடிக்கைகளை ஊடகங்கள்செய்யவேண்டும். போதைபொருள்பாவனைநாட்டையும் நாட்டு மக்களையும் பெரியளவில் பாதிக்கும். சம்பந்தப்பட்டகுற்றவாளிகளைநாட்டிலிருந்துமுழுமையாகஅழிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். நாட்டில் போதைபொருள்பாவனையும்அதனுடனான குற்றச்செயல்களும் அதிகரித்துக் காணப்படும் சந்தர்ப்பத்தில் அவற்றைக் கட்டுபடுத்துவதற்கு ஆலோசனைகள் எதுவும் வழங்காத மனித உரிமைகள்தொடர்பான அமைப்புக்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்றன, அதனைக் கட்டுப்படுத்த அரசு சட்ட நடவடிக்கை எடுக்கும்போதுஅவற்றைக்குற்றமாகக் கருதுகின்றன. அரசின் முடிவுகளுக்குக் கண்டனங்களைத் தெரிவிக்கின்றன.

போதைப்பொருள் பாவனையுடனான குற்றங்கள் அதிகரித்தபோது அவ்வாறான அமைப்புகள் குற்றங்களைக் கட்டுப்படுத்த ஆலோசனைகளை முன்வைக்காததற்குக் காரணத்தைக் கூறவேண்டும். - என்றார். (4.61)

# மகிந்தவே தயாரா?

## அஜித் பி.பெரேரா நினைவூட்டுகிறார்

தேர்தல்நடவடிக்கை தொடர்பாக சீனநிறுவனத்திடமிருந்து முன்னாள் அரசதலைவர்பணம்பெற்றதாக நியூயோர்க் ரைம்ஸ் வெளியிட்டுள்ளசெய்திதொடர்பில் பதிலளிப்பதற்கு நாளை தயாராகுமாறு இராஜாங்க அமைச்சர் அஜித் பி. பெரேரா மகிந்த ராஜபக்சவுக்கு நினைவூட்டியுள்ளார்.

2015 ஆம் ஆண்டு அரசதலைவர் தேர்தலில் மகிந்த ராஜபக்ச சீன நிறுவனத்திடமிருந்து 7.6மில்லியன் ரூபாவைப் பெற்றுக்கொண்டார் என்று நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை செய்து வெளியிட்டிருந்தது. இதுகுறித்து ஆராயப்பட வேண்டும் எனவும் மகிந்த நாடாளுமன்றில் விளக்கவுரை வழங்க வேண்டும் எனவும் ஐக்கிய தேசியக்கட்சியினர் கூறினர். அரசதலைவர் விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார். (4)

# அமைச்சரின் பாதுகாப்புப் பிரிவில் பாதாளஉலகஉறுப்பினர்கள் 5பேர்

## திட்டமிட்ட குற்றங்களைத் தடுக்கும் பிரிவு தவிக்கிறது

**கொழும்பு, ஜூலை 19**

**பாதாள உலக முக்கிய புள்ளிகளான 5 பேர் அமைச்சரவை அங்கீகாரம் உடைய அமைச்சர் ஒருவரின் பாதுகாப்பு பிரிவில் சேவையாற்றி வருகிறார் என்று பொலிஸார் கண்டறிந்துள்ளனர். அவர்களைக் கைது செய்யப் பொலிஸார் தீவிரமாகத் தேடித்திரிந்தனர். ஆனால் சிக்கவில்லை. இந்த நிலையிலேயே அமைச்சரின் பாதுகாப்புப் பிரிவில் அவர்கள் உள்ளனர் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இது தொடர்பான தகவல்கள் திட்டமிட்ட குற்றங்களைத் தடுக்கும் பிரிவுக்குக் கிடைத்துள்ளன. ஆனால் பிரபல அமைச்சர் ஒருவரின் தனிப்பட்ட பாதுகாப்பு உத்தியோத்தர்களாகஅவர்கள் உள்ளனர் என்பதால் கைது செய்வதில் பொலிஸார் தாமதம் காட்டுகின்றனர் என்று பொலிஸ் தலைமையக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். குறித்த 5பேரும் குறித்தஅமைச்சரின்தனிப்பட்ட பாதுகாப்புப் பிரிவில் சேவையாற்றும் புகைப்படத்துடன் கூடிய ஆதாரங்களையும் திட்டமிட்ட குற்றங்களைத் தடுக்கும் பொலிஸ் பிரிவுக்குக்கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ்சேவையிலிருந்தபோது பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்பு கொண்டிருந்தார்என்றகுற்றத்தில் பொலிஸ் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட ஒருவரும் அந்த 5 பேரில் உள்ளடங்குகிறார்.

அந்தஅமைச்சரின்பணியகத்தில் சேவையில் இருந்தவாறேபாதாளஉலகஉறுப்பினர்கள் அமைச்சரின் பணியகத்தில் நடமாடுகின்றபுகைப்படங்களுடன் கூடிய ஆதாரங்களும் பொலிஸாருக்குக் கிடைத்துள்ளன.

அந்த 5 உறுப்பினர்களையும்பாதுகாப்புப்படையணியில் வைத்திருக்கும் அமைச்சர், தனதுபிரதேசத்துக்குஉட்பட்டஹெரோய்ன் மற்றும் கஞ்சா போதைப் பொருள்கள் தொடர்பில் கைதாகும் சந்தேக நபர்களைப் பாதுகாக்கும் பணிகளில் அண்மைக் காலமாக ஈடுபட்டிருந்தார்என்றுதெரிவிக்கப்படுகின்றது.

5 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மற்றும் கைத்துப்பாக்கியுடன்கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரையும், கஞ்சா 500 கிராம் கேரளக் கஞ்சாவுடனும் கைதுசெய்யப்பட்டசந்தேகநபர்களையும் விடுவிப்பதற்காகவே குறித்த அமைச்சர் அண்மையில் பொலிஸாருக்கு அழுத்தம்கொடுத்திருந்தார் என்று பொலிஸ் தலைமையகத்தின்குறித்தஉயர்அதிகாரி கூறியுள்ளார்." (4.71)

கேலிச்சித்திரம்




# பாதாளஉறுப்பினர்களைப்பாதுகாக்கும் அமைச்சர்யார்என்றுவிசாரிக்கின்றோம்

## சபையில் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை19

பாதாளஉலகக்கோஷ்டிகளைப்பாதுகாக்கும்அமைச்சர் யார் என்பது குறித்து ஆராய்ந்து உண்மைகளை வெளிப்படுத்த அரசு தயாராக உள்ளது. ஆனால்பாதாள உலகக் கோஷ்டிகளுடன் தொடர்பு பட்டவர்கள், அவர்களை ஆட்சியில் கூடவே வைத்துக்கொண்டவர்கள் எம்மீது விரல் நீட்ட அருகதையற்றவர்கள் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பத்ம உதயசாந்த குணசேகர, நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் கேள்வியொன்றை எழுப்பியிருந்தார். அதற்குப் பதிலளிக்கையில் ரணில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாதாளஉலகக்குழுவைச்சேர்ந்த5பேருக்குஅமைச்சர் ஒருவரின் பாதுகாப்புக் கிடைத்துள்ளதாகப் பத்திரிகையொன்றில்செய்திவெளியாகியுள்ளது. அந்த அமைச்சர் யார்? அவ்வாறு அவருக்குப் பாதாளக் குழுவைச்சேர்ந்தவர்களை வைத்துக்கொள்ள முடியுமா? என்று பத்ம உதயசாந்த கேள்வியெழுப்பியிருந்தார்.

இதற்குமுதலில்பதிலளித்தசட்டம்,ஒழுங்குபிரதிஅமைச்சர் நளின் பண்டார, "கூட்டரசில் யாரும் பாதாளக் குழுவை வளர்க்கவில்லை. பாதாளக் குழுவை உருவாக்கியவர்கள்யார்என்பதனைக்கூறுவோம். முக்கிய பாதாளக் குழுவைச் சேர்ந்தவர்கள் அப்போது பாதுகாக்கப்பட்டனர். அவர்கள் யார் என்பதனை நாங்கள் வெளியீடுவோம்" என்று தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பதிலளித்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, "இவ்வாறு பாதாளக் கோஷ்டிகளை அமைச்சர் ஒருவர் பாதுகாத்ததாகச்செய்தி வெளியாகியுள்ளது. அவர் யார், எவ்வாறு பாதுகாக்கின்றார் என்ற கேள்வியை அந்தப் பத்திரிகையிடமே கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். பொலிஸ்உத்தியோகபூர்வமாக அவ்வாறு எந்தத் தகவலையும் முன்வைக்கவில்லை.

எனினும், இதுகுறித்துநாம்ஆராய்ந்துபார்க்கத்தயாராக உள்ளோம். ஆனால் பெண் துர்நடத்தைகளில் ஈடுபட்ட பிரதேச சபைத் தலைவரை நீக்க முடியாது இருந்தவர்கள், அவருக்கு எதிராக வழக்குத் தொடுக்க முடியாதிருந்தவர்கள் இன்றுஎம்மிடம்கேள்விகேட்கின்றனர்கள்வர்கள், பாதாளக்கோஷ்டிகளை, துர்நடத்தைக்காரர்களைக் கட்சியுடன் வைத்துகொண்ட நபர்கள் இன்று எமக்கு விரல்நீட்டுகின்றனர்.

இந்தச் சம்பவம் குறித்து நாம் விசாரணை செய்கின்றோம்" என்று தெரிவித்தார். (4.61)

# தூக்குத்தண்டனையைநிறைவேற்றியேதீருவோம்

கொழும்பு, ஜூலை19

ஐரோப்பியஒன்றியம்மட்டுமல்லமுழு உலகமே எதிர்த்தாலும் தூக்குத் தண்டனையைநிறைவேற்றுவோம். இந்த விடயத்தில் ஒருபோதும் பின்வாங்கமாட்டோம் என்று விவசாயத்துறைத் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர்மேலும்தெரிவித்ததாவது:

போதைப்பொருள்குற்றங்களுக்காகத் தூக்குத் தண்டனை விதிப்பது தொடர்பான இலங்கை அரசின் தீர்மானத்துக்குஐரோப்பியஒன்றியம்உள்ளிட்ட மேற்குலக நாடுகள் எதிர்ப்புவெளியிடுகின்றன. தூக்குத் தண்டனையை நடைமுறைப்படுத்தினால்பொருளாதாரத்தடைகளைவிதிப்பதாகஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

போதைப்பொருள் பாவனையை அழிப்பதற்குக் கடந்த காலங்களில் பெரு முயற்சிகளை அரசு எடுத்தது. இதன் ஒருகட்டமாகவே தூக்குத்தண்டனைகாணப்படுகின்றது. நீதித்துறையால்குற்றவாளிகளாகக்கருதப்பட்டுத் தூக்குத்தண்டனைஎன்றுஅறிவிக்கப்பட்ட கைதிகளுக்குத் தூக்குத் தண்டனையை வழங்குவது எந்தவிதத்திலும்மனிதஉரிமைமீறல்செயற்பாடாகாது என்பதை மேற்குலக நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும் புரிந்துகொள்ள வேண்டும்.

எமது நாட்டில் முக்கியச் சட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது அதற்கு எதிராக மேற்குலக நாடுகள் அழுத்தங்களைப்பிரயோகிப்பதுஏற்றுக்கொள்ள முடியாது. அரசதலைவரின் இந்தத் தீர்மானத்துக்கு நாட்டு மக்களும், பௌத்த மதத் தலைவர்களும், அரசியல்வாதிகளும்ஆதரவுவழங்கியுள்ளனர். ஆகவே அரசு நாட்டு மக்களின் விருப்பங்களுக்குஅமையச்செயற்பட வேண்டுமே தவிர பன்னாடுகளின் விருப்பத்துக்கு அமைய அல்ல என்றார். (4)

## 4ஜீ வலையமைப்புக்கே கூகுள் பலூன் திட்டம்



கொழும்பு, ஜூலை 19
கூகுள் பலூன் திட்டம் 4ஜீ வலையமைப்பை விரிவுபடுத்தும் நோக்கத்தில் கொண்டுவரப்பட்டதேஒழிய ''வைபை'' வலயத்தை அமைக்கும் நோக்கத்தில் கொண்டு வரப்பட்ட ஒன்றல்ல. இவ்வாறு தொலைத் தொடர்புகள், டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்கள் அமைச்சர் ஹரீன் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கானகேள்விநேரத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினர்பிமல்ரத்நாயக்கவினால் இலங்கையில் நடைமுறைப்படுத்தஉத்தேசிக்கப்பட்டிருந்த "கூகுள் லூன்" திட்டம் தொடர்பாக எழுப்பப்பட்டிருந்தகேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது,

"கூகுள்லூன்"வேலைத்திட்டம் தொடர்பாகத் தேவையான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக சில நிறுவனங்களுடன்ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதுகூகுள்நிறுவனத்துடன்தொடர்புடையதாகும்.

இதற்காக இலங்கை எந்த செலவும் செய்திருக்கவில்லை. இலங்கை வான் பரப்பில் அந்த பலூன் வந்த போது அது உடைந்து விழவில்லை. அது சிவில் வானூர்திச்சேவைஅதிகாரிகளினால் திட்டமிட்டவகையில் கீழ் இறக்கப்பட்டுள்ளது. எனினும் தவறான வகையில்கருத்துக்களைப் பரப்பி இந்த விவாகரத்தை நகைப்புக்குரிய ஒன்றாக மாற்றிவிட்டனர்.

கூகுள் பலூன் தொடர்பாக தவறானகருத்துக்களே மக்கள் மத்தியில் சென்றது. அந்த பலூனின் ஊடாக வைபைகொடுக்கமுடியாது. அதன்மூலம்4ஜீதொழிநுட்பத்தை வழங்குவதே அந்த பலூனின்அடிப்படைநோக்கமாகும். வை பை வலயம் அதனுடன் தொடர்புடைய வேலைத்திட்டம்அல்ல. அது வேறு வேலைத்திட்டம்.

இதில் அனுமதிப் பத்திரம் தொடர்பாகப் பிரச்சினை இருக்கின்றது. எமக்கும்சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து அனுமதி கிடைக்கும் பட்சத்தில் அதனை நிறைவேற்ற முடியும்.


இந்தத் திட்டத்தை அரச தலைவர் முதலில் ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்கு இந்த பலூன் தொடர்பில் அரச தலைவருக்குச் சரியான தெளிவின்மையே காரணமாகும். எனினும் இப்போது அவர் விளங்கிக் கொண் டுள்ளார். எமக்கு அங்கீகாரமும் கொடுத்துள்ளார்என்றார். (ரி2,61)

இலங்கையில்

# தூக்குத்தண்டனையை கொண்டுவர இயலாது

*ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு*

**கொழும்பு, ஜூலை 19**
**இலங்கையில் தூக்குத்தண்டனையை நடைமுறைப்படுத்த முடியாது. தூக்குத் தண்டனை தொடர்பில் பன்னாட்டு உடன்படிக்கைகளில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் குறித்து அரசு கவ னம் செலுத்த வேண்டும். நீதிமன்ற நடவடிக்கைகளை அரசியல் மயப்படுத்து வதற்கே இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படு கிறது. இவ்வாறு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.**



கொழும்பு ஸ்ரீவஜிராஷ்ரம பௌத்த நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்கலந்துகொண்டுஉரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது,

மக்கள் வாழ்வாதாரத்தைக் கொண்டுநடத்தமுடியாதநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அதனால் அரசுக்கு மக்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர். அதிலிருந்து மக்களின்கவனத்தைத்திசைதிருப்புவதற்குப் பல்வேறு உபாயங்களை அரசு பிரயோகித்து வருகிறது. அதற்காகஒவ்வொருவாரமும்ஒவ்வொரு விவகாரத்தை வெளிக்கிளப்பி விடுகிறது.

தற்போது போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட குற்றம் நிரூபிக்கப்பட்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்குத் தண்டனையை நடைமுறைப்படுத்துவதுதொடர்பில் கவனம் திருப்பப்பட்டுள்ளது. எனினும் அத்தண்டனையை நடைமுறைப்படுத்த முடியாது.

தண்டனை விதிக்கப்பட்டவர்கள் மேன்முறையீடு செய்துள்ளனர். தீர்ப்பு வரும் வரையில் தண்டனையை நிறைவேற்ற முடியாது. தூக்குத் தண்டனை தொடர்பில் இலங்கை, பன்னாட்டு உடன்படிக்கைகளில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் தொடர்பிலும் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

பெற்றோல், டீசல் விலை அதிகரிப்பு விடயத்திலும்அரசுமக்களை ஏமாற்றும் வகையில்நடவடிக்கை எடுக்கிறது. அரசிடம் திட்டமிடப்பட்ட,கொள்கைத்திட்டமோ ஒழுங்கமைக்கப்பட்ட வேலைத்திட்டமோ இல்லை. இதனால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த நாட்டிலுள்ள நீதிபதிகள் தமது கடமைகளைஉரியமுறையில்மேற்கொள்கின்றனர். அவர்கள் மனச்சாட்சிக்கு எதிராகப்பணியாற்றுபவர்கள் அல்ல. அவ்வாறெனின் எதற்காகச் சிறப்புநீதிமன்றம் அமைக்க வேண்டும்?

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுளகளைப் பார்த்து அரசு அச்சப்பட்டுள்ளது. ராஜபக்ச குடும்பத்தை சிறையில் அடைக்க வேண்டும். அதற்காகவே சிறப்பு நீதிமன்றத்தை அமைக்க முற்படுன்றனர். அதனை அடைந்துகொள்வதற்குநிதிக்குற்றப் புலனாய்வுப்பிரிவை அரசு இயந்திரமாகப் பயன்படுத்திக் கொள்கிறது. நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவு சட்ட விரோதமான நிறுவனமாகும்.

சிறப்பு நீதிமன்றத்தின் மூலம் நியாயம் நிலைநாட்டப்படப்போவதில்லை. சிறப்புநீதிமன்றம் மற்றும் சிறப்பு ஆணைக்குழுக்கள் மூலம் அரசியல் பழிவாங்கலுக்கே வழிகோலும். சிறப்பு நீதிமன்றத்தில் முதலில் எதனை விசாரணை செய்ய வேண்டும்எனமக்களிடம்கேட்டால் 99 சதவீதத்தினர், மத்திய வங்கி பிணைமுறி மோசடியை விசாரிக்க வேண்டும்என்பர்-என்றார். (ரி2,31)



## ஆஸி. அரசின் செயலுக்கு ஐக்கிய நாடுகள் கண்டனம்

கொழும்பு, ஜூலை 19
புகலிடம் தேடிய, கணவனை இலங்கைக்கு நாடு கடத்தி இலங்கைத் தமிழ் குடும்பத்தைப் பிரித்த ஆஸ்திரேலிய அரசின்செயலுக்குஐக்கியநாடுகள்சபை கண்டனம்தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் புகலிடம்தேடிய18 இலங்கையர்கள் நேற்று முன்தினம் கொழும்புக்கு நாடு கடத்தப்பட்டனர். நாடு கடத்தப்பட்டவர்களில் ஒருவரான திலீபன், தனது மனைவி மற்றும் 11 மாதக் குழந்தையிடம் இருந்து பிரிக்கப்பட்டு, இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை முகவர் அமைப்பு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

சிட்னியில் வசித்த இவரை, நாடு கடத்தியதன் மூலம், ஆஸ்திரேலியாவில் புகலிடம் வழங்கப்பட்ட அவரது மனைவி, 11 மாதக் குழந்தையுடன் தனித்து விடப்பட்டுள்ளார்.

இந்த நடவடிக்கை குடும்ப ஒற்றுமை என்ற அடிப்படை உரிமைக்கு முரணானது. குழந்தையின்நலன்குறித்தஅடிப்படைக்கொள்கைகளுக்கும்எதிரானது. தந்தை நாடு கடத்தப்படமாட்டார், குடும்பத்துடன் இருப்பதற்கு அனுமதிக்கப்படுவார் என்ற உத்தரவாதத்தை ஆஸ்திரேலியாவிடமிருந்து கோரியிருந்தோம்.

ஆஸ்திரேலியாவின்உள்துறைஅமைச்சருக்குத், தனியார் சட்டத்துறையினர் பலர் வேண்டுகோள் விடுத்தபோதிலும் அதுவெற்றியளிக்கவில்லை. கடல்வழியாக ஆஸ்திரேலியாவை சென்றடைபவர்கள், தங்கள் குடும்பத்தவர்களுடன் சேரவிடாமல் தடுக்கப்படுகின்றனர்.

இலங்கை அகதிகள் விவகாரம் வெறுமனே குடும்பங்களை ஒன்று சேரவிடாமல் தடுப்பதற்கு அப்பாற்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ரி2)

## கடற்றொழிலாளருக்கு புதிய காப்புறுதித் திட்டம்

கொழும்பு, ஜூலை 19
மீன்பிடி வள்ளங்கள் மற்றும் கடற்தொழிலாளர்களுப் புதிய காப்புறுதி முறையொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா மற்றும்கடற்தொழிலாளர்சங்கப்பிரநிதிகளிடையே கடந்த திங்கட் கிழமை அமைச்சில் சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன்போதேஅமைச்சர்இதனைத் தெரிவித்துள்ளார்.

கடற்தொழில் துறையில் ஈடுபட்டுள்ள 4 ஆயிரத்து500கடற்தொழிலாளர்களுக்குப்புதியகாப்புறுதிமுறைமையை அறிமுகப்படுத்துவது குறித்தும் அமைச்சர் கருத்துத் தெரிவித்தார்.

எரிபொருள் விலை தொடர்பில், கடற்தொழிலாளர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினை தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

எரிபொருள் விலைச் சூத்திரத்தை நடைமுறைப்படுத்தும் போது கடற்தொழிலாளர்களுக்குத் தீர்வு பெற்றுக்கொள்வது தொடர்பில் நிதி அமைச்சுடன் பேசுவதாகவும் கலந்துரையாடப்பட்டது.

இடர்களின்போது கடற்தொழிலாளர்களுக்குஉதவிப்பொருள்கள்வழங்குவது குறித்தும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார். (ரி2,31)



## போதைப்பொருள் பாவனையால் தவறான பழக்கவழக்கங்கள்

*மருத்துவர் அனில் சமரநாயக்க*

கொழும்பு, ஜூலை 19
போதைப்பொருள் பாவனைகளால் தகாத பழக்கவழக்கங்கள் இயல்பாகவே மக்கள் மத்தியில்உருவாகின்றன. இதனால் துர்நடத்தைகள் மற்றும் தற் எக கொலைகளும், இடம்பெறுகின்றன. இவ்வாறு மருத்துவ அதிகாரிஅனில்சமரநாயக்கதெரிவிதுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:
கொழும்பில் மாத்திரம் 2016 ஆம் ஆண்டில் 9 ஆயிரத்து 613 பேர் எச்.ஐ.வி. தொற்றால்பாதிக்கப்பட்டுள்ளனர். இது 2017 ஆம் ஆண்டு 10 ஆயிரத்து, 641 பேராக அதிகரித்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

மேல்மாகாணத்தில்"ஐம்பெரும் பாவங்களை நீக்கிடுவோம்" எனும் தொனிப் பொருளின் கீழ் நேற்றுமுன்தினம் சுகாதார மேம்பாட்டுபணியகத்தால் ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
போதைப்பொருள்பாவனைகள் நொடிக்கு நொடி அதிகரித்துக் கொண்டேஇருக்கிறது. சுகாதாரச் சீர்கேடுகளால் பல்வேறு நோய்கள்மக்களிடையேவெகுவிரைவாகப் பரவுகின்றன. இதற்கு மக்களிடையே போதியவிழிப்புணர்வு இன்மையே காரணமாகும்.

மது அருந்திவிட்டு வாகனம் செலுத்துவதால், தனிப்பட்ட ஒருவரின்றிமூன்றாம்தரப்பினரும் பாதிக்கப்படுகின்றனர். கவனவீனத்துடன் வாகனம் செலுத்துவதை முற்றாக நிறுத்த வேண்டும். வீதி விதிமுறைகளைக் கடைப்பிடித்துஉயிரின்மதிப்பை உணர்ந்து வாகனத்தைச் செலுத்தவேண்டும்.

நாட்டில் சிறியோர் முதல் பெரியோர் வரை சகலரது மத்தியிலும்போதைப்பொருள்பாவனை பரவ ஆரம்பித்து விட்டது.

இதனால் எத்தனையோ குடும்பங்கள் தெருவில் நிற்கின்றன. பெரும்பாலான இளைஞர்கள் இதற்கு அடிமையாகிவிட்டனர். இதில் பாடசாலை மாணவர்களும்உள்ளடங்குவது வருந்தத்தக்கது.

இலங்கையில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், சிலாபம், யாழ்ப்பாணம் உள்ளிட்ட மாவட்டங்களிலேயே அதிகளவு போதை பொருள்கள் கைமாற்றப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

இத்தகைய பாவனைகளால் தகாதபழக்கவழக்கங்கள்இயல்பாகவே மக்கள் மத்தியில் உருவாகின்றன.

இதனால் துர்நடத்தைகளும், தவறான உயிர் மாய்ப்புக்களும், தகாத உறவுநிலைகளும், ஆண் பெண் இருபாலாரிடையேயும்நடந்தேறுகின்றன.

குறிப்பாக மாணவர்கள் மத்தியிலிருந்துபோதைப்பொருள்பாவனையை முற்றாக ஒழிக்க வேண்டுமாயின்பெற்றோர்கள் உட்பட பாடசாலை வளாகங்களும் பிள்ளைகள் தொடர்பில் கவனஞ் செலுத்தவேண்டும். அவ்வாறு இனங்காணப்பட்டவர்களைத்தேசதுரோகிகளாகப் பார்க்காது அவர்களை உரிய சிகிச்சைகளுக்கும், ஆலோசனை, பயிற்சிகளுக்கும் உட்படுத்தவேண்டும்என்றார். (ரி2,61)

## காணவில்லை



படத்தில் இருக்கும்
திருகோணமலையைச் சேர்ந்த
**மு.கா.முகமட் பஷீர்**
(வயது 79), என்பவரை
10.07.2018 இலிருந்து
காணவில்லை. தகவல் தெரிந்தவர்கள்
உடன்தொடர்புகொள்ளவும்.

**077·361 1082**
**077 343 8184**
**071 686 7234**

(cs. 145384) (13.17)

## கிளிநொச்சியில் வீடு வாடகைக்கு

கிளிநொச்சி நகர் மையத்தில், சகல நவீன வசதிகளுடன் கூடிய புத்தம் புதிய வீடு வாடகைக்கு உடனடியாக விடப்படும். அலுவலக உபயோகத்துக்கு மிகவும் உகந்தது. முதல் தளத்தில் மூன்று அறைகளும்; இரண்டு குளியலறைகளும், பெரிய Hall வசதியுடன் சமையலறை தளபாட வசதிகளும் உண்டு. இரண்டாம் தளம் நான்கு அறைகளுடன் மூன்று குளியலறைகள், சமையலறை Hall உடன் உண்டு. இவ் வீடு கச்சேரி, உதவி அரசாங்க அதிபர் பணிமனை, புகையிரத நிலையம், வங்கிகள், பஸ் தரிப்பிடம், சந்தை என்பனவற்றிற்கு அருகில் மிகக் குறைந்த பத்து நிமிட நடைதூரத்தில் உள்ளது.

**தொடர்பு: 077 262 3711**

(cs. 145384) (13.17)

## விற்பனைக்கு

LXXX இலக்கத்தை கொண்ட 207 - TATA
சிவப்பு நிற வாகனம் விற்பனைக்குண்டு.
**077 525 3375**

## கார் விற்பனைக்கு

NISSAN SUNNY SUPER
SALOON 1796CC JE XXXX
நல்ல நிலையிலுள்ள கார்
விற்பனைக்குண்டு
**தொடர்பு - 076 226 6245**

விளம்பர
தொடர்பு
களுக்கு

உதயன்

advt@uthayan.com,
021 493 1111

## INVITATION FOR BIDS (RE- BID)
### Strategic Cities Development Project (SCDP)
### Ministry of Megapolis and Western Development

### REFURBISHMENT TO EXISTING PUBLIC CONVENIENCE AT BUS STAND IN JAFFNA

### NCB NO: SCDP/WB/JF/WK/09

1. The Government of Democratic Socialist Republic of Sri Lanka has received a credit from the World Bank towards the cost of Strategic Cities Development Project including the city region of Jaffna. It is intended that part of the proceeds of this credit will be applied to eligible payments under the Contract for Refurbishment of Public Conveniences in Jaffna.
2. The Project Director, Strategic Cities Development Project (SCDP) invites sealed bids from eligible and qualified bidders for Refurbishment to existing public convenience at Bus stand in Jaffna as described below and estimated to cost of Rs. 9.5 Million.
   The work consists of refurbishment of existing Public Convenience with the required facilities. The site is located at Bus Stand in Jaffna. Construction Period is120 Days.
3. Bidding will be conducted through National Competitive Bidding procedure from CID A registered C7 or above Contractors.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the following requirements.
   - Registered with the Construction Industry Development Authority (CIDA) for grade C7 or above in the field of Building Construction.
5. Qualification requirements to qualify for contract award include:
   - Experience of three projects of similar nature and complexity equivalent to the proposed work completed successfully during last 5 years.
   - A Technical Officer qualified in NCT (Civil) or equivalent with 5 years' relevant experience.
   - The minimum liquid assets or credit facilities required is Rs.**1.0 Million**.
6. Interested bidders may obtain further information from Additional Project Director (Jaffna), Project Implementation Unit, SCDP, 3rd floor, District Secretariat, Jaffna, Tel.021 2216383, email: scdpjf@gmail.com and inspect the bidding documents at the same address during normal working hours from **19.07.2018** until **08.08.2018** from **09.00hrs to 15.00hrs** on week days.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application addressed to Project Director, (SCDP), 4th floor, Sethsiripaya (Stage 01), Battaramulla and could be collected at Project Implementation Unit, SCDP, 3rd floor, District Secretariat, Jaffna from **19.07.2018 until 08.08.2018** from **09.00 hrs to 15.00 hrs** upon payment of a non-refundable fee of Rupees three thousand (**Rs. 3,000/=**). The method of payment will be cash payment.
8. Bids shall be delivered in duplicate to the address: Additional Project Director (Jaffna), Project Implementation Unit, SCDP, 3rd floor, District Secretariat, Jaffna on or before **10.00** am on **09.08.2018.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. Bids shall be valid up to **09.11.2018.**
10. All Bids shall be accompanied by a Bid-Security, of Rupees Ninety-five thousand (Rs. 95,000.00) by cash deposit or a bank draft issued by a commercial bank, which shall be valid up to **16.11.2018.**
11. The pre- bid meeting and site visit will be held on **01.08.2018** at **2.00 pm** at the office of Additional Project Director (Jaffna), SCDP, 3rd floor, District Secretariat, Jaffna.Interested bidders are encouraged to attend. Bidders should arrange their own site visit prior to the pre-bid meeting.

**Project Director**,
Strategic Cities Development Project (SCDP),
4th floor, Sethsiripaya (Stage 01),
Battaramulla.

(NG/1986/6/10)

## கண்ணீர் அஞ்சலி



நேற்று (18.07.2018) புதன்கிழமை
இறைபதம் அடைந்த எமது செயலகத்தின்
நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின்
புலனாய்வு உத்தியோகத்தராக கடமையாற்றும்
**திருமதி மேனகா குகதர்சன்**
அவர்களின் அன்புத் தந்தையார்
**முருகேசு சிவபாலன்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரது ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும் ஊழியர் நலன்புரிச் சங்கம்,**
**பிரதேச செயலகம், தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சந்தானலட்சுமி (சோதி) சோமசுந்தரம்



மலர்வு 1944.01.04 | உதிர்வு 2018.07.15

சட்டநாதர் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும், ஆடியபாதம் வீதி, நல்லூரைப் வசிப்பிடமாகவும் கொண்ட சோதி என அன்பாக அழைக்கப்படும் சந்தானலட்சுமி கடந்த (15.07.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை அன்னலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் செல்லம் தம்பதியரின் அன்புமருமகளும் சோமசுந்தரத்தின் அன்புமனைவியும் பரமேஸ்வரன் (குமார்), சதீஸ்வரன் (தீசன்), யசோதரன் காலஞ்சென்ற தயாளன் மற்றும் மைதிலி ஆகியோரின் அன்புத் தாயாரும் றஜிதா, விக்கினதாசன் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான பேபிசரோஜா, ராணி சரோஜா, கமலா தேவி மற்றும் சிறீஸ்கந்தராஜா, தேவராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற குருநாதன் மற்றும் நவீனா, ராகினி, காலஞ்சென்றவர்களான நடராசா, வைத்தி லிங்கம் மற்றும் சரஸ்வதி, லட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் அற்புதமணி, புவனேஸ்வரி, பதஞ்சலி மற்றும் காலஞ்சென்ற கனகரத்தினம் ஆகியோரின் அன்புச்சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (22.07.2018) ஞாயிற்றுக்கிழமை 288, ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு மு.ப. 10.00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**
**021 222 6560**



### திருமதி நாகேஸ்வரி செல்லத்துரை

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி செல்லத்துரை நேற்று (18.07.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா தம்பதியரின் மகளும், ஆறுமுகம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், சண்முகராசா (கடை - குளோபல் ஸ்ரார்), செல்வராசா (சந்தை - திருநெல்வேலி), யோகராசா (சந்தை - திருநெல்வேலி), கனேசராசா (மன்னார்), ஜெயக்குமார் (கோண்டாவில்), வசந்தகுமாரி (கனடா), சந்திரகுமாரி (கோண்டாவில்), விஜயகுமாரி (கோண்டாவில்), ரதிக்குமாரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயும், செல்வராஜன் (கனடா), இரதிதேவன் (இந்திரன் - பிரபல காணித்தரகர்), சற்குணானந்தன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற குகானந்தன், பவளகாந்தி, பவளராணி, சர்வேஸ்வரி, விக்கினேஸ்வரி ஆகியோரின் மாமியும் சுதன் (சுவிஸ்), லோஜன்.(சுவிஸ்), பிருந்தா, ஜனனி, சுபாஸ்பரன் (குட்டி - கோல்டன் ஸ்ரார் ), ரமேஸ் (R.D.H.S வாகனம் ஓட்டுனர் ), நளினா, பிரகாஸ் (சந்தை -திருநெல்வேலி) நிரோஜா , சுமித்தா, பிரதீஸ் (சுவிஸ்), பிரதீப் (சுவிஸ்), அர்சுன் (கனடா), அர்சனா (கனடா), கஜானன், மயூரன், மயூரிக்கா, டிசாந்தி, நிசாந்தன், வசீ, சிந்துஜா (பிரான்ஸ்), ஜெனார்த்தனன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் போர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.07.2018) முற்பகல் 11.00 மணிக்கு அவது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**
**021 205 3314**

(cs 18333) (13)

யாழ்ப்பாண மாவட்டத்துக்குட்பட்ட

## போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலகு கடன்

யாழ்ப்பாணம், ஜூலை 19

மறுவாழ்வுஅதிகாரசபைஊடாகயாழ்ப்பாண மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலகு கடன் திட்டம் ஒன்றை வழங்க யாழ்ப்பாண வணிகர் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளதாகஅதன்முன்னாள்தலைவரும் தற்போதைய உபதலைவருமான ஜெயசேகரம் தெரிவித்தார்.

இது தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெயசேகரத்தின் ஏற்பாட்டில்யாழ்ப்பாணம்வணிகர்கழகத்தில் நேற்றுமுன்தினம் காலை 11 மணியளவில் இடம்பெற்றது. கலந்துரையாடலில் போரால் பாதிக்கப்பட்ட ஒரு தொகை மக்களுக்கு கடன் திட்டம் தொடர்பில் தெளிவூட்டப்பட்டது. மறுவாழ்வு அதிகார சபையின் அதிகாரி, வணிகர் கழக பிரதிநிதிகள் ஆகியோர் விளக்கங்களை வழங்கினர்.

போரால் பாதிக்கப்பட்ட வறுமை நிலையில் உள்ளகுடும்பங்கள், முன்னாள்போராளிகள், பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் ஆகியோர் இந்தத் திட்டத்தின் ஊடாக கடன் பெற்றுக்கொள்ளமுடியும். பயனாளிஒருவர் ஆகக்கூடிய கடன் தொகையாக 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரையில் பெற்றுக் கொள்ள முடியும். இந்தக் கடன் தொகையைப் பெற்ற நாளில்இருந்துஒருவருடத்தின்பின்னர்கடன் தொகையை மாதாந்தம்செலுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

10 வருட கால எல்லையைக் கொண்ட குறைந்த வட்டியைக் கொண்டதாக கடன் வழங்கப்படவுள்ளது. முன்பு ஏதாவது நிறுவனத்திலிருந்து கடன் பெற்று மீள கட்டாதவர்களை தவிர மற்றைய அனைவருக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. கடனை பெற விரும்புபவர்கள் வணிகர் கழகத்தில் வழங்கப்படும் படிவத்தை முழுமைப்படுத்தி தங்களின் கிராம அலுவலரின் உறுதிப்படுத்தலுடன் ஒப்படைக்க வேண்டும். அத்துடன் கடன் பெறுபவர் இலங்கை வங்கியில் கணக்கு வைத்திருக்க வேண்டும். இரண்டு பிணையாளிகள்ஒப்பம்இடவேண்டும். அவர்களும் இலங்கை வங்கியில் கணக்குகள் வைத்திருக்கவேண்டும்-என்றார். (எ-8,113)

மாணவர்களின் பாதுகாப்புக்கு

# பெற்றோர் ஆசிரியர் இணைவு அவசியம்

வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவுரை

**தலைமன்னார், ஜூலை 19**

**பிள்ளைகளின் பாதுகாப்பு இன்றைய காலக்கட்டத்தில் மிக முக்கியமாக இருக்கின்றது. பிள்ளைகள் பாடசாலை முடிவுற்று வீடு செல்லும்போது பெற்றோரும் ஆசிரியர்களும் இணைந்து பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும். பிள்ளை பாடசாலைக்குச் செல்லாத சமயத்தில், பெற்றோர் பிள்ளையின் வகுப்பு ஆசிரியருக்கு பிள்ளையின் பாதுகாப்பு கருதி உடன் தெரிவிக்கவேண்டும்.**

இவ்வாறு, வடமாகாண கல்விபண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறைஅமைச்சின்செயலாளர்சத்தியசீலன் தெரிவித்தார்.

மடு கல்வி வலயத்திலிருந்து கடந்த 2016, 2017ஆம்ஆண்டுகளில்தரம் 5புலமைப்பரிசில், ஜி.சி.ஈசாதாரண தரம், உயர்தரம் மற்றும் மாகாண மட்ட தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் தோற்றிச் சாதனை படைத்தமாணவர்களைமதிப்பளிக்கும் நிகழ்வு மடுவலயக்கல்விப் பணிப்பாளர் மாலினி வெனிற்றன் தலைமையில்கடந்தசனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்விஎன்பது எமக்கு முக்கியமான மூலதனம். எமது பிள்ளைகளே வருங்காலத்தின்விலைமதிக்கமுடியாத சொத்துக்கள். எனவே நாம் அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். அவர்களுக்கு தன்னம்பிக்கையை நாம் ஊட்ட வேண்டும்.

பிள்ளைகள் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை பெறும்போது அவர்களை வாழ்த்த வேண்டும். மாறாக நாம் ஏனைய பிள்ளைகளுடன் ஒப்பிட்டு அவர்களை குறை கூறுவதைத் தவிர்க்கவேண்டும்.

இந்தபிரதேசம்பலபிரச்சினைகளை சந்தித்த பிரதேசமாகும். மக்கள் இடம்பெயர்ந்து பின் தற்பொழுது மீள்குடியமரும் பிரதேசமாக இருக்கின்றது. அதனடிப்படையில்இந்தப் பிரதேசத்தைமுன்னுரிமைப்படுத்தி பலவிதமான அடிப்படைத் தேவைகளை முழுமை செய்து வருகின்றோம். ஆசிரியர் வளங்களை பொறுத்தமட்டிலும்நாங்கள் இந்தக் கல்விவலயத்துக்கேமுன்னுரிமை வழங்கி வருகின்றோம்.

பிள்ளைகளின் கல்வி மட்டத்தை உயர்த்துவதற்காக ஜி.சீ.ஈ. சாதாரணப்பரீட்சையின்பெறுபேறுகளை உயர்த்துவதற்காக பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வகுப்பு பரீட்சைகளிலே குறைந்த புள்ளிகளை பெறும் மாணவர்களின் கல்வி மட்டத்தை உயர்த்துவதற்கான திட்டங்களையும் நாம் செயல்படுத்துகின்றோம்.

பிள்ளைகளுக்கு கல்வியை மட்டுமல்ல எமது விழுமியங்களையும் பண்பாட்டையும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

இப்பொழுது பட்டதாரிகள், வேலையற்றவர்களாக வேலைக்காக போராடும் நிலையை நாம் பார்க்கின்றோம். இந்த நிலை எமது பிள்ளைகளுக்குதொடரக்கூடாது. இந்த உலத்தில்எந்த துறைக்கு முக்கியத்துவம் இருக்கின்றது. எந்த துறையில் எமது பிள்ளைகளை இட்டுச் சென்றால்தொழில்வாய்ப்பைபெற முடியும் என்பதை நாம்தான் அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்.

தாதியர்வேலைவாய்ப்புக்காக ஆட்சேர்ப்புமேற்கொள்ளும்போதுஎமது மாகாணத்திலிருந்துவிண்ணப்பங்களை பெற்றுக் கொள்ள முடியாது இருக்கின்றது. மூன்று பாடங்களிலே சாதாரண சித்தி பெற்ற விஞ்ஞானத் துறை மாணவர்களை கண்டு பிடிக்க முடியாத நிலை இருந்து வருகின்றது.

ஆகவேவிஞ்ஞானத்துறைமற்றும் கணிதத்துறைகளுடன் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் துறைகளில் பிள்ளைகள் ஈடுபட நாம் அவர்களுக்குவழிகாட்டவேண்டும்-என்றார். (எ-60)

மானிப்பாய் வயோதிப பெண் படுகொலை:

## குற்றச்சாட்டிலிருந்து சந்தேகநபர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19

மானிப்பாய் பகுதியில் வயோதிபப் பெண் படுகொலைச்சம்பவத்துடன்தொடர்புடையவர்என்றுபொலிஸாரால்கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரைக்குற்றச்சாட்டில்இருந்துவிடுவித்தது மல்லாகம் நீதிவான் நீதிமன்று.

குறித்தவழக்கு மல்லாகம்நீதிவான்நீதிமன்றில் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போதுவிளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குறித்த சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

அதனை தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணையின்போதுசந்தேகநபர்சார்பில் முன்னிலையான சட்டத்தரணி க.சுகாஸ், 'சந்தேக நபர் மனநிலை பாதிக்கப்பட்டவர். அவருக்கும் இந்தக் கொலைக்கும் எந்தவொரு தொடர்பும் கிடையாது. கொலைச் சம்பவ தினத்தன்று கொலையாளி வீட்டுக்குள் நுழைவது, வீட்டிலிருந்து வெளியேறுவது என்பன பாதுகாப்புக் கமராவில் பதிவாகியுள்ளன. அந்த நபர் இவர் இல்லை என்பதுதெட்டத்தெளிவாகஅதில்தெரிகிறது. எனவேசந்தேகநபரைவழக்கிலிருந்துவிடுவிக்கவேண்டும்' எனமன்றில்சமர்ப்பணம் செய்தார்,

பொலிஸாரால் சந்தேகநபருக்கு எதிராக உரிய ஆதாரங்கள்சமர்ப்பிக்கப்படாதநிலையில்சட்டத்தரணிசுகாஷின்சமர்ப்பணத்தை ஏற்றுக்கொண்ட நீதிமன்று சந்தேகநபரை வழக்கிலிருந்து விடுவித்தது.

மானிப்பாய்கல்லூரிஒழுங்கைஎன்றவிலாசத்தில்தனித்து வாழும்நாகரத்தினம் குமராசாமி(வயது-88)என்பவரதுவீட்டில்வைத்து, அவரை பராமரிப்பதற்காக பணிக்கு அமர்த்தப்பட்ட வயோதிபப் பெண் கடந்த மாதம் 28ஆம் திகதி கொலை செய்யப்பட்டார்.

மானிப்பாய், சங்கபிள்ளைவீதியைச்சேர்ந்த தம்பையா லீலாதேவி (வயது- 60) என்ற வயோதிப் பெண்ணே கொலை செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஆனைக்கோட்டைப் பகுதியில் நடமாடிய மனநிலை பாதிக்கப்பட்ட ஒருவரை மானிப்பாய் பொலிஸார் கைது செய்தனர். (எ-37)



மன்னாரில்

## புதிய பஸ் நிலையங்களுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளை

தலைமன்னார், ஜூலை 19

மேல் மாகாண மற்றும் மாநகர அபிவிருத்திஅமைச்சின் 'தகிர்த புரவர' செயற்றிட்டத்தின் கீழ் மன்னாரில்புதியபஸ்நிலையங்களுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் மேல் மாகாண மற்றும் மா நகர அபிவிருத்தி அமைச்சர் பாட்டாளி சம்பிக்க ரணவிக்க, நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் வட மாகாண சபை முதலமைச்சர்விக்னேஸ்வரன் உட்பட வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பஸ்நிலையங்கள்180.6மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளன.

நிகழ்வு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் வர்த்தக மற்றும் கைத்தொழில்அமைச்சர்றிசாட் பதியூதின் தலைமையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் மன்னார் மாவட்ட மேலதிகச்செயலர்எஸ்.குணபாலன், மன்னார் பிரதேச செயலாளர் எம்.பரமதாசன், மன்னார் நகர சபை முதல்வர் ஞா.அன்ரனி டேவிட்சன், மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் சா.க.முஜா ஹீர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (எ-60)

## பனம் கண்காட்சி வாரம் 22ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

வடக்கு மாகாண பனம்கண்காட்சிவாரம்எதிர்வரும்22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 28ஆம் திகதி சனிக்கிழமை வரை சங்கிலியன் பூங்காவில் நடைபெறவுள்ளது. வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சு, வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், பனை அபிவிருத்திச் சபை போன்றவை இணைந்து இந்தபனம் கண்காட்சி வாரத்தைச் சிறப்பாக நடத்தவுள்ளன என்று வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார். ஒரு வாரத்துக்குநடைபெறும்கண்காட்சியில்வடக்கில்உள்ளசகல பனைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், பனைசார் உற்பத்தி நிறுவனங்கள் போன்றவை கலந்துகொள்ளவுள்ளன. பனம்பொருளிலானஉற்பத்திகளைஅதிகரிக்கவும்அதனை சந்தைப்படுத்தும் முகமாக கண்காட்சி வாரம் கடைப்பிடிக்கப்படுகின்றது. கண்காட்சிக்கூடங்களில்பனம்பொருளில்இருந்து இம்முறை புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருள்கள், கைப்பணிப் பொருள்கள் என்பனவும் காட்சிப்படுத்தப்படும். சிறப்பம்சமாகபார்வையாளர்களுக்கு ஆடிக்கூழ், சுடச்சுட ஒடியல் கூழ், பனம் களியில் இருந்து புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டகுளிர்பானம்என்பனவழக்கிவைக்கப்படவுள்ளன. (எ-17)

அனுமதியின்றி கடலட்டை பிடிப்பு

## மீனவர்கள் இருவருக்கு 14ஆயிரம் ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

வேலணை கடற்பரப்பில் அனுமதி இன்றி கடல் அட்டை பிடித்த குருநகர் மீனவர்கள் இருவருக்கு 14ஆயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தது ஊர்காவற்றுறை நீதிமன்றம்.

நேற்றுமுன்தினம்யாழ்ப்பாணம்வேலணை கடல் பகுதியில் கடலட்டை பிடித்த குருநகர்ப் பகுதிப் படகை சோதனையிட்ட நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் அவர்க்ளிடம் தொழில் புரிவதற்கான அனுமதி மற்றும் படகுக்கான பதிவுகள் இல்லாமையை கண்டுபிடித்தனர். அதனையடுத்து ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று வழக்குத் தாக்கல் செய்தனர்.

குறித்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட இருவரும் குற்றத்தை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் இருவருக்கும் 7 ஆயிரம் ரூபா வீதம் குற்றப்பணம்விதித்ததோடுபடகுதொடர்பான விசாரணையை எதிர்வரும் 31ஆம்திகதிக்கு நீதிபதி அ.யூட்சன் ஒத்திவைத்தார். இதேநேரம் மாமூலைப் பகுதியில் தடை செய்யப்பட்ட சுருக்குவலை பயன்படுத்திய குற்றச்சாட்டில் 4பேர்மீதுபருத்தித்துறைநீதிமன்றில்நேற்றுமுன்தினம்வழக்குத்தாக்கல்செய்யப்பட்டது. குறித்த வழக்கை ஆராய்ந்த பருத்தித்துறை நீதவான்நளினிகந்தசாமி4மீனவர்களுக்கும் தலா 5 ஆயிரம்ரூபாவீதம் 20 ஆயிரம் ரூபா குற்றப்பணம்விதித்துத்தீர்ப்பளித்தார். (எ-105)





இயக்கச்சி கூட்டுப்படைத் தள பாதுகாப்பு மண்ணணைகளால்

## மீனவர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நேரில்சென்று ஆராய்ந்தார்குருகுலராஜா

யாழ்ப்பாணம்,ஜூலை19

இயக்கச்சிகூட்டுப்படைத் தளத்தை பாதுகாக்கும் நோக்கோடுஇராணுவத்தினர் அமைத்த மண் அணைகளாலும், காவலரண்களாலும்ஆனையிறவுக் கடல் நீரேரிக்கு நீர் வரத்தின்மையால் பாதிக்கப்பட்டுள்ள இயக்கச்சி மீனவர்கள் தொடர்பில்நேரடியாகச்சென்று நிலமைகளை ஆராய்ந்தார் வடக்கு மாகாண சபைஉறுப்பினர்குருகுலராஜா.

போர் காரணமாக 1991ஆம் ஆண்டு இயக்கச்சிக் கூட்டுப்படைத் தளத்தை பாதுகாக்கும் நோக்கோடுஇராணுவத்தினரால்மண்அணைகளும், காவலரண்களும் அமைக்கப்பட்டன. இதனால் ஆனையிறவுக் கடல்நீரேரிக்கு சுண்டிக்குளம் கடலில் இருந்தான நீர் வரத்துக்களும் அதனோடு இணைந்தான கடல்வளங்களின் வருகையும்பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் அதனை நம்பி ஆனையிறவு நீரேரியில் தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் இயக்கச்சி பகுதி மீனவர்களின் தொழில் நடவடிக்கைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அதனை நம்பி வாழும் பல குடும்பங்கள் வறுமையில் வாடித்தவிக்கின்றன.

இந்த நிலைமைகளை ஆராய்வதற்காகவடக்கு மாகாணசபையின்முன்னாள் கல்வி அமைச்சரும் மாகாண சபை உறுப்பினருமானத.குருகுலராஜா நேற்றுமுன்தினம்நேரடியாகவேகளப் பயணம்மேற்கொண்டு நிலைமைகளை பார்வையிட்டதுடன் இந்தப் பிரச்சினைக்குநிரந்தரத் தீர்வை பெற்றுத் தருவதாகவும், இராணுவத்தினர்அமைத்துள்ளமண்ணணைகளையும், காவலரண்களையும் அகற்றி இயக்கச்சி மீனவர்களுடைய ஜீவனோபாய நடவடிக்கைகள் பாதிக்கப்படாத வகையில் உரிய தரப்பினர் ஊடாக நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

பயணத்தில் வடக்கு மாகாணசபையின்முன்னாள் கல்வி அமைச்சரும், மாகாணசபை உறுப்பினருமானத.குருகுலராஜா மற்றும் பச்சிலைப்பள்ளிபிரதேசசபை தவிசாளர்சு.சுரேன்உபதவிசாளர் மு.கயன் உறுப்பினர் த.றமேஸ் ஆகியோருடன் இயக்கச்சி மீனவர் சங்கப் பிரதிநிதிகளும்உடனிருந்தனர். (எ-105)

# துர்நடத்தைகளில் ஈடுபடுபவர்களுக்கும் தூக்குத்தண்டனை வழங்க வேண்டும்

### வடக்கு மாகாண சபை உறுப்பினர் டெனீஸ்வரன் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஜூலை 19**


**பெண்கள் மற்றும் சிறுவர்கள் பாதுகாப்பாக நடமாட வேண்டுமெனின் பாலியல் துர்நடத்தைகளுக்கும் தூக்குத்தண்டனை வழங்க வேண்டும் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் டெனீஸ்வரன் தெரிவித்தார்.**

வடக்கு மாகாண சபையின் சிறப்பு அமர்வு கடந்த சில தினங்களுக்கு முன்னர்இடம்பெற்றது. இந்தஅமர்விலேயே அவர் இதனைதெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:

இலங்கையில் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த அரசு தூக்குத் தண்டனையை நடைமுறைப்படுத்தவுள்ளது. அரசின் இந்த முடிவை நான் வரவேற்கின்றேன். ஏனெனில் அண்மைக் காலமாக வடக்கு மாகாணம் உட்பல பல இடங்களில் போதைப் பொருள் பாவனை மற்றும் கடத்தல்கள் அதிகமாகி உள்ளன. அவற்றுக்கு துணையாக உள்ள குற்றவாளிகள் இனம் கண்டு தண்டிக்கப்பட வேண்டும். போதைப் பொருள் பாவனை காரணமாகவே பலசமூக விரோதச்செயல்கள் இடம்பெறுகின்றன.

அதனைக் கட்டுப்படுத்த கொண்டு வரப்பட்டுள்ளது தூக்குத் தண்டனை. அதேபோலவன்புணர்வுக்குற்றத்துடன் தொடர்புடைய குற்றவாளி களுக்கும் தூக்குத்தண்டனைவழங்கப்படவேண்டும். அப்போதுதான் பெண்களும் பாடசாலை சிறுவர்களும் பாதுகாப்புடன் வாழ முடியும்-என்றார். இதேவேளை பெண்கள், சிறுவர்மீதுதுர்நடத்தையில் ஈடுபடுபவர்களுக்குதூக்குத்தண்டனை வழங்கப்பட வேண்டும் என வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் வலியுறுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-8)





விசாரணைக்கு உத்தரவிடப்பட்ட

## கட்டடத்துக்கு பூச்சுப் பூசும் செயற்பாடு இடைநிறுத்தம்

கிளிநொச்சி, ஜூலை19

கிளிநொச்சியில், விசாரணைக்கு உத்தரவிடப்பட்ட கட்டடத்துக்குப் பூச்சுப் பூசும் செயற்பாடுமேற்கொள்ளப்பட்டநிலையில் நிறுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில்சிறப்புத்தேவைக்குட்பட்டவர்களுக்கான கட்டடம் புதிதாக அமைக்கப்பட்டு கடந்த 12ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. எனினும் தற்போதே அதில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன. சங்கத்தின் புதிய கட்டட கட்டுமானப் பணிகளின் தரம் தொடர்பில் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண முதலமைச்சர்சி.வி.விக்கினேஸ்வரன்மாகாண சமூக சேவைகள் பணிப்பாளருக்குப் பணித்திருந்தார்.

இந்தநிலையில்குறித்தகட்டடத்தின்வெடிப்புப் பகுதிகளை ஒப்பந்தகாரர்கள் நேற்று முன்தினம் பூசி மெழுகினர். அதன்போது சங்கத்தால் தடுத்து நிறுத்தப்பட்டது.

வடக்குமாகாணசபைஉறுப்பினர்களான பசுபதிப்பிள்ளை, தவநாதன் ஆகியோரின் தலா இருபது இலட்சம் ரூபா, மாகாண சபை உறுப்பினர் அரியரத்தினத்தின் இரண்டு இலட்சம் ரூபாஎன மொத்தம் 42 இலட்சம் ரூபா நிதியில் அமைக்கப்பட்ட புதிய கட்டத்தின் பல பகுதிகளில் வெடிப்புக்கள்ஏற்பட்டுள்ளன. இதனால்42 இலட்சம் ரூபாபெறுமதியில்கட்டடம் அமைக்கப்பட்டுள்ளதாஎன்றசந்தேகமும்ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பில்மாகாணசபைஉறுப்பினர் பசுபதிப்பிள்ளை மற்றும் குறித்த சங்கத்தின் உறுப்பினர்கள் ஆகியோர் முதலமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வந்ததை அடுத்து முதலமைச்சர் மேற்படி பணிப்புரையைவழங்கியநிலையிலேயே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தடுக்கப்பட்டுள்ளன. (எ-214)

## சைவப் புலவர் பரீட்சைப் பெறுபேறு

யாழ்ப்பாணம், ஜூலை19

இந்த வருடத்துக்கான சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் பரீட்சையில், இளஞ்சைவப் புலவர் பரீட்சையில் சித்தியடைந்த வர்களின் பெறுபேறுகள் உதயனில் நேற்று வெளியாகின. அதேபோல் சைவப்புலவர்பரீட்சையில் சற்சொரூபவதி சுபமுரளிதரன் (கொழும்பு), கமலாதேவி சபாரத்தினம் (அரியாலை), கணபதிப்பிள்ளை வெற்றிவேல் (கிளிவெட்டி திருமலை), காந்திமதி சூரியகுமார் (லண்டன்), நாகமணி நித்தியாணந்தன்(லண்டன்), பத்மாவதிதியாகராசா (லண்டன்), முருகப்பன் சேமகரன் (அவுஸ்ரேலியா), இராமையாஜீவன்பிரசான்(மாத்தளை), மந்தாகினி பாலச்சந்திரன் (மல்லாகம்), லீலாவதி அருளையா (தெல்லிப்பழை), சிவசிறி கறுவல்தம்பி குமாரசாமி(மண்டூர்மட்டக்களப்பு), நாராயணமூர்த்திசுஜீவன் (தவசிக்குளம்வவுனியா)ஆகியோர்சித்தியடைந்துள்ளனர் என்று அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் எஸ்.ரி.குமரன் அறிவித்துள்ளார். அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் இதனைநடத்தியிருந்தது. (எ-4)

6 மில்லியன் ரூபா செலவிட்டு அமைத்த

# சுற்றுலா மையம் கவனிப்பாரின்றிப் பற்றைகளாகிப் பாவனையற்றுள்ளது

### பாதை சரியில்லை என்கிறது பிரதேச சபை

யாழ்ப்பாணம், ஜூலை19

வடக்குமாகாணமுதலமைச்சரின் கறித்தொதுக்கப்பட்ட நிதியில் அமைக்கப்பட்ட வன்னேரிக்குளம் சுற்றுலா மையம் கவனிப்பார்இன்றி,பயன்பாடின்றிக்கைவிடப்பட்டுள்ளதுஎன்றுதெரிவிக்கப்படுகிறது.


கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச சபைக்கு உட்பட்ட வன்னேரிக்குளம் பகுதியில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை நிதியில் 6 மில்லியன் ரூபாவில் அமைக்கப்பட்ட வன்னேரிக்குளம் சுற்றுலா மையம் அழகுபடுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 2017ஆம் ஆண்டுமே 27ஆம்திகதி மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

தற்போது அங்கு பற்றைகள் மூடி வளர்ந்து காணப்படுகின்றன.

இதனைப் பொறுப்பெடுத்துக் கொண்ட உரிய தரப்பினர் அதனைப் பராமரிக்கத் தவறியமையே இந்த நிலைக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படு கின்றது.

"கிளிநொச்சிவன்னேரிக்குளத்தில் கட்டப்பட்ட சுற்றுலா மையம் பெரும் நிதிச் செலவில் கட்டப்பட்ட போதிலும் எவரும் இதனைக் கண்டு கொள்வதில்லை. பயன்படுத்துவதுமில்லை.

அரிதானபறவைஇனங்கள்கூடும் இந்த இடம் இயற்கை அழகு நிறைந்துள்ளது. இதனைப்பயன்படுத்துவதற்கு யாருமின்றிக் கவனிப்பாரற்று உள்ளமை கவலை ஏற்படுத்துகின்றது.



ஆகவே அரிதாக அமையப்பெற்றுள்ள இந்த இடத்தை சம்மந்தப்பட்டவர்கள் உரிய கவனம் செலுத்தி மக்கள் மத்தியில்விளம்பரம் செய்து பாதையைச் சீராக்கும் போது பலர் நன்மை அடைவர்" என்று பிரதேச வாசி ஒருவர் தெரிவித்தார்.

"அங்கு செல்வதற்கான பாதை மிக மோசமான நிலையில் காணப்படுவதால்மக்களின்வரவு அங்குமிகக்குறைவாகக்காணப்படுகின்றது. துப்புரவுப்பணிகளை நாங்கள் செய்து வருகின்றோம். தற்போது கூறப்படுகின்ற முறைப்பாட்டுக்கு அமைய துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்படும் பாதை சீரமைக்கப்பட்டால் மக்களின் வரவுகாணப்படும்.'ஒருதொழிலாளியை நிய மித்து சூழலைக் கட்டுப்படுத்த லாம்' என்று கரைச்சிப்பிரதேசசபையினர்தெரிவித்தனர். (4,6,222)

## மகிந்த பெயரில் அறிக்கை பொய் என்கிறார் கோத்தபாய



கொழும்பு, ஜூலை19
அரச தலைவர் தேர்தலில் யார் அரச தலைவர் வேட்பாளராகப் போட்டியிடுவார் என்பது தொடர்பில், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவெளியிட்டதைப் போன்ற அறிக்கை பொய்யானது. என்று முன்னாள்பாதுகாப்புச்செயலர் கோத்தபாய ராஜபக்சதெரிவித்துள்ளார். அரச தலைவர் வேட்பாளராக மகிந்த தம்மைப் பெயரிட்டுள்ளதாக வெளியானதகவல்களில் உண்மையில்லை. மக்களையும் அரசியலில் தொடர்பு பட்டவர்களையும் குழப்புவதற்கான சிலரின் நடவடிக்கையிது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில், சமூக ஊடகங்களின் மூலம் கோத்தபாய மறுப்பு வெளியிட்டுள்ளார். அதில்தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, "2020ஆம்ஆண்டில் அரச தலைவர் வேட்பாளராக என்னை நியமித்துள்ளதாக முன்னாள் அரச தலைவர்மகிந்த ராஜபக்சவினால் தகவல் வெளியிடப்பட்டதாக சமூக ஊடகங்களில்வெளியான ஊடக அறிக்கைபொய்யானது. மக்களைப்பிழையாகவழிநடத்திஅரசியல்ரீதியில் குழப்பநிலைமையை ஏற்படுத்தும்நோக்கில் இந்தப் பொய்யான தகவல் பரப்பப்பட்டுள்ளது" என்று கோத்தபாய ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார். (ரி2)

### வேலை தேடும் பட்டதாரிகள்

# பிரச்சினையைத் தீர்ப்பதில் அரசுக்குத் திட்டம் இல்லை

### சாடுகிறார் அநுரகுமார



**கொழும்பு, ஜூலை 19**
**வேலை தேடும் பட்டதாரிகள் பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது என்பது தொடர்பில் சரியான திட்டம் அரசுக்கு இல்லை. இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் 22/7 இன் கீழான நிலையியல்கட்டளைமீதுகேள்வியெழுப்பி உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் தெரிவித்ததாவது,
1999, 2005, 2012 ஆண்டுகளில் வேலை தேடும் பட்டதாரிகள் வேலைகளுக்கு இணைத்துக்கொள்ளப்பட்டனர். ஆனால், பட்டதாரிகள் வீதிகளில்இறங்கிப் போராடிய பின்னரே வேலை வாய்ப்புக்களை வழங்கும் நிலைமையே இன்று காணப்படுகின்றது.
கடந்த 2012 மார்ச் 31ஆம் திகதியன்றே இறுதியாகப் பட்டதாரிகள் அரசசேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.
அதன்பின்னர் இதுவரையான காலப்பகுதியில் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறிய பட்டதாரிகள் வேலை தேடும் வரிசையில்தான் இருக்கின்றனர்.
போராட்டங்களின் பின்னர் 2017 இல் வெளியான அறிவித்தலின் படி 57 ஆயிரம் பேர் வேலைவாய்ப்புக்களுக்காக விண்ணப்பித்திருந்தனர். ஆனால் இவர்களுக்கு இன்று வரை அரச வேலை வழங்கப்படவில்லை. வேலையில்லாப் பட்டதாரிகளின் இணைப்புத் தொடர்பில்அரசுபலஅறிவித்தல்களைவிடுத்தது. வயதுஎல்லை 35 என்றே குறிப்பிடப்பட்டிருந்தது. 2015 டிசெம்பர் 31 வரையான காலப்பகுதி வரையே விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.
24ஆயிரம்பேரை சேவையில் இணைத்துக்கொள்வதாகக்கூறப்பட்டது. இதில் அரச கட்சிகளின் கட்சித்தலைமைகளின்கட்சிக்கு ஆதரவானவர்களைஅடிப்படையாகக் கொண்டு பட்டியல் தயாரிக்கப்பட்டதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. எவ்வாறாயினும் இன்றுவரை அவர்களுக்குஎன்னநடக்குமெனத் தெரியவில்லை. 2015 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு பின்னரான வர்களையும் தொழில் வாய்ப்புகளுக்கு இணைத்துக் கொள்வார்களா?
சகலருக்கும் அரசு வேலை வாய்ப்புக்களை வழங்குமா? அனைத்துப்பட்டதாரிகளுக்கும் தொழில்வாய்ப்புக்களைவழங்குவதற்கான தேசியக் கொள்கையை அரசு தயாரிக்குமா?.
எப்படியிருப்பினும் இந்த அரசிடம் வேலை தேடும் பட்டதாரிகளின் பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது என்பது தொடர்பில் சரியான திட்டம் ஒன்று அரசுக்கு இல்லை-என்றார். (ரி2)

## நாமலுக்கு மட்டுமே வேட்பாளர் பதவி

### சம்பத் தசநாயக்க தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை19
நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு அல்லாது ராஜபக்ச குடும்பத்தில் வேறு எவருக்கும் கூட்டுஎதிர்க்கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் பதவி வழங்கப்படுவதில்லையெனஊவாமாகாணமுதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்துள்ளார்.
பதுளைப்பகுதியில்நடைபெற்றநிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத்தெரிவித்தார். அவர்தெரிவித்ததாவது,
ராஜபக்ச குடும்பத்தில் நாமலுக்கு அன்றி வேறு எவருக்கும் இந்த வேட்பாளர் பதவி வழங்கப்பட மாட்டாது.
ராஜபக்ச சகோதரர்கள் எவருக்கும் இந்தப் பதவி வழங்கப்படமாட்டாதுஎனநான்இன்றுகூறியதை எழுதிவைத்துக் கொள்ளுங்கள்.
இதுநடைபெறாதுஎன்பதனால்தான்கூட்டுஎதிர்க் கட்சியிலுள்ள ஒவ்வொருவரும் அரச தலைவர் வேட்பாளர்கள் யார் என்பதைத் தெரியாது ஒவ்வொருவரையும் கூறிக் கொள்கின்றனர்-என்றார். (ரி2)



## கோத்தபாயவை வேட்பாள்ராக கூறியதற்கு வருந்துகின்றேன்

### இனிக் கூற மாட்டேன் என்கிறார் அஜித் பிரசன்ன

கொழும்பு, ஜூலை19
சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சஎனதான்இனிக்கூறமாட்டேன்எனவும், இதற்குமுன்னர்அப்படிக்கூறியதற்காகவருந்துகின்றேன் என்றும் மேஜர் ஜெனரல் அஜித் பிரசன்ன தெரிவித்துள்ளார்.
சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் யார்? என இதுவரையில் எந்தவிதத் தீர்மானமும் எடுக்கவில்லை. இதற்கு முன்னதாகவே பல ஊடகவியலாளர் சந்திப்புக்களில் நான் அக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சதான் எனக் கூறியது தவறானது எனவும் அவர் குறிப்பிட்டார்.
இதற்காகதான் வருத்தம் தெரிவித்துக்கொள்வதாகவும், இதன்பிறகுஎந்தஊடகவியலாளர் சந்திப்புக்களிலும் கோத்தபாய ராஜபக்சவின் பெயரை இதற்காகப் பயன்படுத்த மாட்டேன் என்றும்நேற்றுமுன்தினம்நடைபெற்றசிறப்பு ஊடகவியலாளர்சந்திப்பில்மேஜர்அஜித்தெரிவித்துள்ளார். (ரி2)

## ஞானசார தேரருக்கு ஆகஸ்ட் 8 இல் தீர்ப்பு

கொழும்பு, ஜூலை19
பொதுபலசேனாஅமைப்பின் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராகத் தொடுக்கப்பட்டிருக்கும்வழக்கின் தீர்ப்புஎதிர்வரும்ஆகஸ்ட் மாதம் வழங்கப்படும் என்றுநீதிமன்றம்நேற்று அறிவித்துள்ளது.
ஹோமாகம நீதிவான் நீதிமன்றில் கடந்த 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆம் திகதி நீதவான் முன்னிலையில் நடந்து கொண்ட விதம் மற்றும் நீதி மன்றத்தை அவமதித்தமை போன்ற குற்றச்சாட்டுகளின்பேரில் ஞானசார தேரருக்கு வழக்குத் தொடரப்பட்டிருந்தது.
அப்போது ஹோமாகம நீதவானாகஇருந்தரங்க திஸாநாயக்கவால்ஞான சார தேரருக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முறையிடப்பட்டது. வழக்கு விசாரணைகள்நிறைவடைந்த நிலையில் தீர்ப்பை எதிர்வரும்மாதம்8ஆம்திகதி அறிவிப்பதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது. மேன்முறையீட்டு நீதி மன்றத் தலைமை நீதிபதி ப்ரீதி பத்மன் சுரசேன மற்றும் சிரான் குணரத்ன ஆகியோரால் தீர்ப்பு அறிவிக்கப்படவுள்ளது. (ரி2)

## மகிந்தவிடம், சமரவீர மன்னிப்புக் கோரவேண்டும்

### கூறுகிறார் பந்துல குணவர்தன



கொழும்பு, ஜூலை19
எரிபொருள் விலை தொடர்பில் பொய்யானதரவுகளைவெளியிட்டதுடன் அதுகுறித்து முன்னாள்அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை விவாதத்துக்கு அழைத்தமை தொடர்பிலும் அமைச்சர் மங்கள சமரவீர, மகிந்தராஜபக்சவிடம்மன்னிப்புக்கோரவேண்டும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தனதெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்றசெய்தியாளர்சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போது, கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்பந்துலகுணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார். அவர் தெரிவித்ததாவது,
நாடு பொருளாதார ரீதியில் நெருக்கடிகளைச்சந்தித்துள்ளது. அது குறித்துப்பொறுப்புக்கூறவேண்டியநிதியமைச்சர் மங்கள சமரவீர, ராஜபக்ச அரசின்மீது அடிப்படையற்றகுற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகிறார். எரிபொருள் விலை குறித்து அவர் தொடர்ச்சியாக உண்மைக்குப் புறம்பான தகவல்களையே வெளியிட்டுவருகின்றார்.
எரிபொருள் விலை தொடர்பில்தன்னுடன் விவாதத்துக்கு வருமாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கும் அவர் அழைப்புவிடுத்துள்ளார்.
எரிபொருள்விலைகுறித்துப் பொய்யான தரவுகளை வெளியிட்டதுடன், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை விவாதத்துக்கு அழைத்தமைதொடர்பிலும்அவர் மகிந்தவிடம்மன்னிப்புக் கோரவேண்டும்.
கூட்டரசினால் நாட்டின் பொருளாதாரத்தை நிர்வகிக்க முடியாதுபோயுள்ளது. அதனால்உலக சந்தையில் சமையல் எரிவாயு விலை அதிகரித்துக் காணப்படும் போது, நாட்டிலுள்ளஎரிவாயுநிறுவனங்களிடம் விலையைக் குறைக்குமாறு வேண்டுகின்றனர்.
உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டு ஒரு இரவுக்கு எரிபொருள் விலையை அதிகரிக்கின்றனர். அடுத்தநாள் காலையில் விலையைக்குறைக்கின்றனர்.
மகிந்தவின்ஆட்சியின்போதுஉலக சந்தையில்எரிபொருள்விலைஉச்சக்கட்டத்தில்இருந்தபோதிலும்நாம் மக்கள் மீது சுமை ஏற்றாது உரிய வகையில் முகாமைத்துவம் செய்தோம்.
நாட்டிலுள்ள சகல பிரிவினரும் தமதுவாழ்வாதாரத்தைக்கொண்டு நடத்த முடியாத நிலைக்குத்தள்ளப் பட்டுள்ளனர். அதனால் மக்கள் அரசுக்குஎதிராகக்கிளர்ந்தெழும்நிலையில் உள்ளனர்.
கூட்டரசால்ஆகக்கூடியதுஇன்னும் ஒரு வெசாக் பேயாவையே கடத்த முடியும். அதற்கு மேல் ஒருபோதும் ஆட்சியைக் கொண்டு நடத்த முடியாது-என்றார். (ரி2,31)

## பெருவில் அவசரம்!

லிமா, ஜூலை 19
போதைப்பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தென்னமரிக்க நாடான பெருவில் அவசரநிலைபிறப்பிக்கப்பட்டது.
தென்னமரிக்காவில் போதைப்பொருள் கடத்தல் அதிகரித்துள்ளது. பெரு, கொலம்பியா, பிரேசில், சிலி, மெக்சிக்கோ ஆகிய நாடுகளில் போதைப்பாவனை உச்சம் தொட்டுள்ளது. பெருவுக்கு அண்டைநாடான கொலம்பியாவில் இருந்து போதைப்பொருள் கடத்தப்படுகிறது. அத்துடன் நாட்டின் பாதுகாப்புக்கு மிகப் பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவே போதைப்பொருள் கடத்தலைத் தடுக்க பெரு நாட்டில் கொலம்பியா எல்லையில் புதுமேயோ பகுதியில் உள்ள அமேஷோனியன் மாகாணத்தில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.
இது 60 நாள்கள் நடைமுறையில் இருக்கும். அதற்கான உத்தரவை பெரு நாட்டின் அதிபர் மார்டின் விஷ்காரா பிறப்பி த்துள்ளார். அதைத் தொடர்ந்து எல்லையில் போதை பொருள் கடத்தல். நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. போதைப் பொருள் கடத்தல்காரர்களின் ஊடுருவலைக் கண்காணிக்க 5 உலங்கு வானூர்திகள், 3 வானூர்திகள் பயன்படுத்தப்படுகின்றன. (ம)



### ஆப்கான் போரில் திடீர் திருப்பம்

# தலிபான்களுடன் பேசுகிறது அமெ.

காபூல், ஜூலை 19
ஆப்கானிஸ்தானில் கடந்த பல தசாப்தங்களாக நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போரில் திடீர் திருப்பமாக தலிபான்களுடன் பேச்சு நடத்த முன்வந்துள்ளது அமெரிக்கா. அமெரிக்காவின் இந்த நிலைப்பாடு தலிபான்களுக்குக் கிடைத்த வெற்றி என்றும் பார்க்கப்படுகிறது.




ஆப்கானிஸ்தானில் கடந்த பல தசாப்தங்களாக தலிபான்களுக்கும் அரச தரப்புக்கும் இடையில் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. தலிபான்களுக்கு எதிராக அமெரிக்கா செயற்படுகின்ற போதிலும் அந்த அமைப்பைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலிலும் அதிகப்படியான தாக்குதல்களை தலிபான்கள் மேற்கொண்டு வருகின்றனர். இந்த வருடத்தில் மட்டும் சுமார் 30க்கும் மேற்பட்ட தாக்குதல்களை காபூலில் மட்டும் தலிபான்கள் மேற்கொண்டுள்ளனர். இதையடுத்து தலிபான்களை பல தடவைகள் பேச்சுக்கு அழைத்தார் ஆப்கானிஸ்தான் அதிபர் அஸ்ரப் கானி. "தலிபான்கள் அரசுடன் பேச்சு நடத்தி உடன்பாட்டுக்கு வந்தால், அந்த அமைப்பை அரசியல் கட்சியாக அங்கீகரிப்போம். அத்துடன் சிறையிலுள்ள தலிபான்களை விடுவிப்போம்" என்று கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கானி அறிவித்தமை பன்னாட்டு அரங்கில் பரபரப்பை ஏற்படுத்தியது. எனினும் இந்த அழைப்பை ஏற்க மறுத்தது தலிபான். அமெரிக்காவுடன் மட்டுமே தாம் பேச்சு நடத்துவோம் என்றும் அந்த அமைப்பு அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டது. எனினும் தலிபான்களுடன் பேச்சு நடத்த வாய்ப்பில்லை என்று தெரிவித்த அமெரிக்கா, முதலில் ஆப்கானிஸ்தான் அரசுடன் தலிபான்கள் பேசவேண்டும் என்றும் வலியுறுத்தியது. இதையடுத்து முறுகல்நிலை மேலும் உச்சம் பெற்றதை அடுத்து தலிபான்களுடன் பேச்சு நடத்த இணங்கியுள்ளது அமெரிக்க அரசு. (ம)

# அமெரிக்காவ

வொஷிங்டன், ஜூலை 19
பொருளாதாரத் தடை விதித்த அமெரிக்காவுக்கு எ
ராக பன்னாட்டு நீதிமன்றத்தின் உதவியை நாடி
ஈரான்.
கடந்த 2015ஆம் ஆண்டில், அப்போதைய அமெரி
அதிபர் பராக் ஒபாமா ஆட்சிக் காலத்தில் ஈரானுக்கு
அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், சீனா, பிரான்ஸ், ஜே
மனி ஆகிய 6 வல்லரசு நாடுகளுக்கும் இடை
அணு சக்தி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அதில் அ
சக்தியை ஆக்கபூர்வப் பணிகளுக்கு மட்டுமே பய
படுத்துவோம் என்றும் அணு ஆயுதத் தயாரிப்பு
பயன்படுத்த மாட்டோம் என்றும் ஈரான் உறுதிய
தது. இதை ஏற்று அந்த நாட்டின் மீது விதிக்கப்ப
பல்வேறு பொருளாதாரத் தடைகள் அமெரிக்கா

## நவாஸ் செரிப் மேன்முறையீடு நிராகரிப்பானது

இஸ்லாமபாத், ஜூலை 18
சிறையில் அடைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் தலைமை அமைச்சர் நவாஸ் செரிப், அவரது மகள் மரியம் செரிப் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீடு மனு நிராகரிக்கப்பட்டது.
லண்டன் அவன்பீல்ட் குடியிருப்பு தொடர்பான ஊழல் வழக்கில் 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்ட பாகிஸ்தான் முன்னாள் தலைமை அமைச்சர் நவாஸ் செரிப், 7 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்ட அவரது மகள் மரியம் நவாஸ் மற்றும் ஓராண்டு தண்டனை விதிக்கப்பட்ட மருமகன் சப்தர் ஆகியோர் ராவல்பிண்டி நகரில் உள்ள அடிடாலா சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.
இந்த நிலையில், ஊழல் வழக்கில் பாகிஸ்தான் பொறுப்புடைமை நீதிமன்றம் விதித்த தண்டனையை எதிர்த்து சிறையில் இருக்கும் மூன்று பேரின் சார்பிலும் இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மேன்முறையீட்டு மனுக்கள் மீதான விசாரணை நேற்று நடைபெற்றது. அவை மன்றால் நிராகரிக்கப்பட்டன. (ம)



# அப்பிடிச் சொல்லலேங்கோ நீங்க தப்பாப் புரிஞ்சிட்டீங்க

வொஷிங்டன், ஜூலை 19
அமெரிக்க அதிபர் தேர்தலில் ரஷ்யா தலையிட்டது என்று அமெரிக்க உளவுத்துறை உறுதிப்படுத்தியுள்ள நிலையில், அவ்வாறு ரஷ்யா தலையிடவில்லை என்று குறிப்பிட்ட ரஷ்ய அதிபர் புடினின் கருத்தை ஆதரித்துப் பேசிய ட்ரம்ப், தற்போது தனது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்கியுள்ளார்.



ட்ரம்ப் - புடின் இடையிலான சந்திப்பு கேல்சின்கியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இந்தச் சந்திப்பின்போதே இவ்வாறான சர்ச்சை எழுந்துள்ளது.
புடின் - ட்ரம்ப் இடையிலான சந்திப்பின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், செய்தியாளர் ஒருவர் "2016ஆம் ஆண்டில் நடந்த அமெரிக்கத் தேர்தலில் தலையிடவில்லை என்று அதிபர் புடின் தெரிவித்திருக்கிறார். எல்லா அமெரிக்க உளவு நிறுவனங்க ளும் ரஷ்யா தலையிட்டதாக முடிவுக்கு வந்துள்ளன. என்னுடைய முதல் கேள்வி, இதில் யார் சொல்வதை நீங்கள் நம்புகிறீர்கள்" என்று கேட்டார்.
அவருக்குப் பதில் அளித்த ட்ரம்ப், "என்னுடைய அதிகாரிகள் என்னிடம் வந்து ரஷ்யா செய்ததாக கூறினார்கள். அதிபர் புதின் ரஷ்யா அப்படிச் செய்யவில்லை என்றார். (ரஷ்யா) அப்படிச் செய்திருக்கும் என்று கூறுவதற்கான காரணம் ஏதும் எனக்குத் தெரியவில்லை" என்று கூறினார்.
இந்தக் கருத்து தமது சொந்த நாட்டு உளவு நிறுவனங்களை மறுத்து, எதிராளி நாட்டின் அதிபரின் கருத்தை ஆதரித்த செயலாக அமெரிக்காவில் பார்க்கப்பட்டது. ட்ரம்பின் சொந்தக் கட்சியான குடியரசுக் கட்சி செனட்டர்கள் உள்ளிட்டோர், இதற்கு எதிரான கண்டனங்களைப் பதிவு செய்திருந்தனர். இதையடுத்து தனது நிலைப்பாட்டை மாற்றினார் ட்ரம்ப்.

### இப்போது என்ன சொல்கிறார்?

செய்தியாளர் சந்திப்பு உரையாடல்களின் எழுத்தாக்கத்தை தாம் படித்ததாகவும், எனவே தாம் சொல்ல வந்தது குறித்த விளக்கம் அளிக்க விரும்புவதாகவும் தெரிவித்துள்ள ட்ரம்ப், "செய்தியாளர் சந்திப்பில் நான் சொன்ன முக்கியமான ஒரு வாக்கியத்தில் 'வுட்நாட்' என்று சொல்வதற்குப் பதிலாகத் நான் 'வுட்' என்று கூறிவிட்டேன்" என்று தெரிவித்தார். "(ரஷ்யா) அப்படி செய்திருக்காது என்பதற்கான காரணம் எதுவும் எனக்குத் தெரியவில்லை" அல்லது "அது ஏன் ரஷ்யாவாக இருக்காது?" என்பது போன்ற இரட்டை எதிர்மறை வாக்கியமாக அது இருந்திருக்கவேண்டும் என்று தனது தரப்பை தற்போது நியாயப்படுத்தியுள்ளார் ட்ரம்ப். (ம)

## வெயிலால் 15 பேர் உயிரிழப்பு

ஜப்பானில் அண்மையில் பெய்த கடும் மழையால் 200க்கும் மேற்பட்டோர் உயிரிழந்த நிலையில் அங்கு தற்போது கடும் வெயிலுக்கு 15 பேர் உயிரிழந்தனர்.
ஜப்பான் அடிக்கடி இயற்கையின் சீற்றத்துக்கு உள்ளாகும் ஒரு நாடுதான். அங்கு சமீபகாலமாக கடும் வெயில் பதிவாகியுள்ளது. சுமார் 39 டிகிரி அளவுக்கு ஜப்பானில் தற்போது வெப்பநிலை உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# சிரியாவின் எய்ன் நகரில்

டமஸ்கஸ், ஜூலை 19
சிரியாவின் எய்ன் நகரில் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளுக்கும் சிரிய அரச தரப்புக்கும் இடையில் தற்போது கடும் போர் இடம்பெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் அங்கு நடத்தப்பட்ட வான் தாக்குதலில் 10 பேர் உயிரிழந்தனர்.
ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றைத் தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் இருந்து ஈராக் முழுவதுமாக விடுபட்டுள்ளது. சிரியா தற்போது படிப்படியாக விடுபட்டு வருகிறது. எனினும் எய்ன் நகரம் தொடர்ந்தும் ஐ.எஸ். அமைப்பின் பிடியிலேயே உள்ளது. அந்த நகரை மீட்பதற்காக அண்மையில் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது சிரியா. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அங்கு நடத்தப்பட்ட இலக்குத் தவறிய தாக்குதல் ஒன்றில் 10 பொதுமக்கள் உயிரிழந்தனர் என்று அறியவருகிறது. (ம)




# வுக்கு எதிராக ஈரான் வழக்கு



நீக்கப்பட்டன.

இதனிடையே, அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பதவியேற்ற பிறகு, ஈரானுடனான அணு சக்தி ஒப்பந்தத்தை முறிப்பேன் என்று விமர்சித்து வந்தார். இந்த நிலையில் கடந்த மே மாதத்தில் இந்த ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா வெளியேறுவதாக ட்ரம்ப் அறிவித்தார். ஈரானிடம் கச்சா எண்ணெய் வாங்கக் கூடாது என்று அமெரிக்கா ஏனைய நாடுகளை வலியுறுத்தியிருந்தது.

இதற்குப் பதிலடியாக, "அனுபவ முதிர்வு இல்லாதவர்களின் பேச்சு பயனற்றது. தடை விதித்தால் பதில் நடவடிக்கை நிச்சயம்.." என்று ஈரான் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து ஈரான் - அமெரிக்கா இடையெ மோதல் வலுத்து வந்த நிலையில் பன்னாட்டு நீதிமன்ற உதவியை ஈரான் நாடியுள்ளது. (ம)



# இஸ்ரேல் – சிரிய நாடுகளின் எல்லையில் பதற்ற நிலைகள்

டமஸ்கஸ், ஜூலை 19

இஸ்ரேல் - சிரிய எல்லையில் நடமாடிய குழுவொன்றால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டது.

சிரியாவின் பகுதிக்குள் சுமார் 60 பேரைக் கொண்ட இந்தக் குழு நடமாடித் திரிந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் நடமாட்டம் உறுதிப்படுத்தப்பட்டதும் இஸ்ரேல் தனது எல்லையைப் பலப்படுத்தியதுடன் ஒலி பெருக்கியின் மூலம் எச்சரிக்கை விடுத்தது. எனினும் அந்தக் குழு அங்கிருந்து செல்லவில்லை. சிரியப் பகுதிக்குள் தற்காலிக முகாம்கள் அமைத்துத் தங்கியுள்ளது. இதையடுத்து அந்தப் பகுதியில் தொடர்ந்தும் பதற்றம் நீடிக்கிறது.




அவ்வாறு நடமாடித் திரிபவர்கள் சிரிய அரசுக்கு எதிரான கிளர்ச்சியாளர்கள் என்றும் கருத்தொன்று உலவுகின்றது. (ம)

# புடினின் முன்பாக நூடில்ஸ் போன்று

## *ட்ரம்ப் மீது அர்னோல்ட் பாய்ச்சல்*

வொஷிங்டன், ஜூலை 19



அமெரிக்க அதிபர் ட்ரம்ப், ரஷ்ய அதிபர் புடினின் முன்பு நனைந்த நூடில்ஸ்போல நின்றார். வளைந்து, குலைந்து அமெரிக்காவின் மானத்தை ட்ரம்ப் விற்றுவிட்டார் என்று தெரிவித்தார் கலிபோர்னியா மாகாணத்தின் முன்னாள் மேயரும், ஹொலிவூட் நடிகருமான அர்னோல்ட்.

பின்லாந்துத் தலைநகர் ஹேல்சின்கியில் கடந்த திங்கட்கிழமை புடின் - ட்ரம்ப் இடையிலான சந்திப்பு நடை பெற்றது.

இந்தச் சந்திப்பை அடுத்து ஏகப்பட்ட வசை பாடல்களை வாங்கிக் குவித்து வருகிறார் ட்ரம்ப். இந்த நிலையில் இவ்வாறு தெரிவித்தார் அர்னோல்ட்.

"அதிபர் டிரம்ப் அவர்களே, புடினுடன் நீங்கள் செய்தியாளர் சந்திப்பில் பேசியதைப் பார்த்தேன். வளைந்து குலைந்த நூடில்ஸ் போல புடின் முன்னாள் நீங்கள் நிற்கிறீர்கள். ஒரு ரசிக சிறுவன் தனது அபிமானவரின் அருகில் நிற்பது போல இருந்தது. புடினிடம் ஆட்டோகிராப் அல்லது செல்பி எடுத்துக்கொள்ள அனுமதி கேட்கச் சென்றவர் போல இருந்தது. அமெரிக்காவினதும் உங்களினதும் மதிப்பை மொத்தமாக விற்று விட்டீர்கள்'' என்று அர்னோல்ட் மேலும் தெரிவித்தார். (ம)

# உலங்குவானூர்தி விபத்தில் 5 சிப்பாய்கள் துயரச் சாவு

## *தென்கொரியாவில் சம்பவம்*

சியோல், ஜூலை 19

தென்கொரியாவின் தெற்குப் பகுதியில் பயிற்சியில் ஈடுபட்ட உலங்குவானூர்தியொன்று விபத்துக்கு உள்ளானதில் அதிலிருந்த 5 சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

ஏற்கனவே பழுதடைந்து பின்னர் பழுது பார்க்கப்பட்ட அந்த உலங்குவானூர்தி சோதனைக்காகவும் பயிற்சிக்காகவும் எடுத்துச் செல்லப்பட்டது. சிறிது தூரம் சென்ற பின்னர் தனது கட்டுப்பாட்டை இழந்த அது, நிலத்தில் வீழ்ந்தது. இதையடுத்து அதிலிருந்த 5 சிப்பாய்கள் உயிரிழந்தனர்

(ம)



# ல் வான்தாக்குதல்



# 14 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஜோர்டானில் தயாரிக்கப்பட்ட ரொட்டி

ஜோர்டானில் 14 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே ரொட்டி செய்துள்ளதற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பழமையான தளம் ஒன்றைத் தோண்டிய விஞ்ஞானிகள் இதனைக் கண்டுபிடித்துள்ளனர்.

தீயில் சுடப்பட்ட அவை, தட்டையான ரொட்டி போன்றும், இன்றைய பல தானிய வகைகள் போன்றும் ருசித்திருக்கும் என்று கூறப்படுகிறது. அந்த ரொட்டிகளுக்குள் வறுத்த மாமிசத்தை வைத்து முன்னோர்கள் பயன்படுத்தியிருக்கக்கூடும். இதுவே பழமையான சேன்விச்சாகவும் இருக்கிறது. ஜோர்டான் பலைநிலத்தில் இதற்குரிய ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அண்மையில் துருக்கியில் 9 ஆயிரம் வருடங்களுக்கு முன்னரேயே ரொட்டி



தயாரிக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்தன. தற்போது துருக்கியை விடப் பழமையான ஆதாரங்கள் ஜோர்டானில் கிடைத்துள்ளன. (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரசியல் கைதிகள் விடுவிப்பில் தொடர்ந்து அக்கறை வேண்டும்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நீக்குவதோடு, ஒருகால வரையறைக்குள்தமிழ்அரசியல்கைதிகளைவிடுவிக்கவேண்டும்என்று எதிர்க்கட்சித்தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனிடம் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு இந்த விடயத்தைவலியுறுத்தியிருக்கிறது. கடந்தசிலமாதங்களாக மற்றைய அரசியல்நகர்வுகளுக்குள்புதைந்து போய்க்கிடந்த இந்த விடயங்கள் மீண்டும் கிளறப்பட்டி ருப்பது காலத் தேவையானது.

சம்பந்தனிடம் முன்வைக்கப்பட்டிருக்கும் இரண்டு கோரிக்கைகளும் 2015 அரச தலைவர் தேர்தலின் போதும், நாடாளுமன்றத் தேர்தலின் போதும், தமிழர் தரப்பால் தெளிவாக வலியுறுத்தப்பட்ட விடயங்கள். அவற்றுக்கு இணங்கிக் கொண்டே அரச தலைவர் மைத்திரியும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் தமிழர்களின் ஆதரவைக் கோரிப் பெற்றார்கள். அதுவும்போக தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கிவிட்டு பன்னாட்டுத்தரத்துக்கான புதிய சட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக ஐக்கிய நாடுகள் சபைக்கும், பன்னாட்டுச் சமூகத்திற்கும்கூட அரசு வாக்குறுதியளித்திருந்தது.

அது தொடர்பான தொடக்க நகர்வுகளும் எடுக்கப்பட்டன. தற்போது இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்காக, அதைவிட மோசமானபுதியபயங்கரவாதத்தடைச் சட்டம் ஒன்றின் வரைவும் முன்வைக்கப்பட்டது. ஆனால் அதற்கு எதிர்ப்புக் கிளம்பியதும், இந்த விடயம் கிணற்றில் போட்ட கல்போன்று அப்படியே கிடப்பிற்குப் போய்விட்டது.

இந்தச் சட்டத்தை இல்லாமல் செய்துவிட்டால், இதன் கீழ் அநியாயமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளைச் சட்டப்படி விடுவிப்பதும் இலகுவாகிவிடும். அதனாலேயே பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்காமல் அரசுகாலங்கடத்துகின்றதோஎன்கிற அச்சமும் எழுகின்றது. ஏனெனில் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என்று அரச தலைவரும் தலைமை அமைச்சரும் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் சிறையில் அடைக்கப்பட்டிருப்பவர்கள் பயங்கரவாதச் செயலகளைப் புரிந்தவர்கள். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கிவிட்டால் அவர்களைத் தொடர்ந்தும் சிறையில் வைத்திருப்பதோ, அல்லது தண்டனை பெற்றுக்கொடுப்பதோ கடினமாகிவிடும். எனவேதான் இந்த விடயத்தில் தெளிவான முடிவு எதனையும் எடுக்காமல் காலந்தாழ்த்தி வருகிறார்கள்.

சிறையில் அடைக்கப்பட்டிருப்பவர்கள் புரிந்த குற்றங்கள் அனைத்தும் அவர்கள் சார்ந்திருந்த அமைப்பின் உத்தரவின் கீழேயே மேற்கொள்ளப்பட்டது என்பதால், அந்தக் குற்றங்களைப் பயங்கரவாதச் செயல்களாகக் கணிக்க முடியாது, அவர்களின் அரசியல் நிலைப்பாடு காரணமாகவே அவர்கள் தற்போதும் சிறைகளில் தவிக்கவேண்டியிருக்கிறது என்று எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் பலதடவைகள் வலியுறுத்தியபோதும் அவர்களின் விடுவிப்புக்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வரவில்லை.


நூற்றுக்கும் சற்று அதிகமான அரசியல் கைதிகள் தொடர்ந்து சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் நிலையில், அவர்களின் விடுதலைக்கு முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவே தடையாக இருந்தார் என்று கூட்டமைப்பின் உறுப்பினர்களும் நம்பிக்கொண்டிருந்த காலம் ஒன்றிருந்தது. புதிய நீதி அமைச்சர் பதவியேற்ற பின்னர், உருப்படியாக ஏதாவது நடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதுவும் பொய்த்துப் போனது. அடிப்படையில் அரசியல்கைதிகளைவிடுவிக்கும் நோக்கமோ, பொது மன்னிப்பு வழங்கும் நோக்கமோ அரசியல் தலைமைகளுக்குஇல்லாதபோது அமைச்சர்கள் என்ன செய்யமுடியும் என்கிற கேள்வியும் நியாயமானதே!

தமது விடுதலையை வலியுறுத்தி அரசியல் கைதிகள் பல போராட்டங்களை நடத்தியபோதும், விடுதலை இன்னும் சாத்தியமாகவில்லை. புதிய அரசமைப்பை நிறைவேற்ற முயற்சிப்பது உட்பட பலகாரியங்களைநிறைவேற்றவேண்டிய சிக்கலுக்குள் கூட்டமைப்பு தவித்துக் கொண்டிருக்கின்றபோதிலும், அரசியல் கைதிகளின் பிரச்சினையையும் அது உரிய முக்கியத்துவத்தோடு அணுகுவது இன்னியமையாதது. போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் பற்றிய விசாரணைக்கான தடயங்களே இல்லாத நிலையிலும், பலவந்தப் படுத்தப்பட்ட வாக்குமூலங்களை அடிப்படையாகக் கொண்டு வழக்குகளை எதிர்கொண்டவர்கள் சிறைகளில் தவிப்பது நீதியுமாகாது.

# விக்கியின் உண்மையான முகத்தை சம்பந்தன் வெளிப்படுத்துவாரா?

சேரலாதன்

விரைவில் மாகாணசபைத் தேர்தல் இடம்பெறவுள்ளதால் சம்பந்தனும், விக்னேஸ்வரனும் சந்தித்துப்பேசி தமிழ் மக்களுக்கு நன்மையளிக்கத் தக்க நல்லதொரு முடிவைக்காண வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரித்தானியக் கிளையினர் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டதாகத் தெரியவருகின்றது.



முதலமைச்சர் பதவிக்கு வந்ததில் இருந்து விக்னேஸ்வரன் கூட்டமைப்புக்கு எதிரான கொள்கைகளையே கடைப்பிடித்து வருகின்றார். அவர் பதவிக்கு வந்ததன் பின்னர் இடம்பெற்ற தேர்தல்கள் எதிலும் கூட்டமைப்புக்கு ஆதரவான பரப்புரைகளில் பங்கேற்காது தவிர்த்துக் கொண்டார். நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது கூட்டமைப்புக்கு எதிரானவர்களுடன் தொடர்புகளை அவர் பேணி வந்துள்ளார். தேர்தல் முடிவுகள் வெளியானபோது தமிழரசுக் கட்சியை ஏளனம் செய்வதற்கும் அவர் தவறவில்லை. தற்போது தாம் புதிய கட்சியொன்றை உருவாக்கப் போவதாகவும், அது சாத்தியப்படாதுவிட்டால், கூட்டணி அமைக்கப் போவதாகவும் அவர் கூறியுள்ளமை கவனத்துக்கு உரியது.

**முதலமைச்சர் பதவியைப் பெற்ற பின்னர் சம்பந்தனை மதிக்கத்தவறிய விக்னேஸ்வரன்**

கடந்த மாகாணசபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக சம்பந்தனால் நிறுத்தப்பட்டவர் இந்த விக்னேஸ்வரன். ஆனால் பதவிக்கு வந்ததன் பின்னர், சம்பந்தனையோ அவரது கருத்துக் களையோ மதிப்பதற்கு அவர் தவறிவிட்டார். அமைப்புக்கு எதிரானவர்களுடன் கூட்டுச் சேர்வதையும் அவர் பெருவிருப்பமாகக் கொண்டு செயற்படுவதையும் காணமுடிகின்றது. அவர் தம்மையொரு வலிமை படைத்த சக்தியாக எண்ணிக் கொண்டிருப்பதால், கூட்டமைப்பை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. இந்த நிலையில் சம்பந்தனும், விக்னேஸ்வரனும் சந்தித்துப் பேசவேண்டுமெனக் கோரிக்கை விடப்பட்டுள்ளமை அர்த்தமில்லாத ஒன்றாகவே தெரிகின்றது.

தற்போது சம்பந்தனும் விக்னேஸ்வரனும் சந்தித்துப் பேசவேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளவர்கள், கடந்த காலங்களில் விக்னேஸ்வரனுக்கு அறிவுரை கூறாமல் இருந்தது ஏன் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

இந்த நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான கஜேந்திரகுமார் அண்மையில் தெரிவித்த கருத்தொன்று கவனத்தில் கொள்ளத்தக்கது. கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமது கட்சி இரண்டாவது இடத்தைப் பிடித்ததாகவும், மாற்றுத் தலைமைக்கான அத்திபாரம் இதன் மூலமாக இடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர், விக்னேஸ்வரன் தனிக்கட்சியொன்றை அமைத்தால், அவருடன் கூட்டுச்சேர்ந்து இயங்குவதில் தமக்குச் சிரமமெதுவும் இருக்காதெனவும், தெரிவித்துள்ளார். ஆனால் விக்னேஸ்வரனை மாற்றுத் தலைவராக ஏற்றுக்கொள்வது தொடர்பாக அவர் எதையும் கூறவில்லை என்பது கவனிக்கத் தக்கது. அத்துடன் விக்னேஸ்வரனும் இன்னுமொரு தலைமையின் கீழ்செயற்படுவதற்கு விரும்புவாரா என்பதும் சந்தேகத்துக்கு இடமானதே.


**வடக்கு மாகாண சபையின் கூட்டமைப்புச் சார்பான அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் தாமே என மாவை தெரிவிப்பு**

கூட்டமைப்பில் சம்பந்தனுக்கு அடுத்த நிலையில் உள்ள மாவை சேனாதிராசா, அடுத்த வடக்கு முதலமைச்சர் வேட்பாளர் தாமேயென அறிவித்துவிட்டார். இவருக்குப் பதிலாக வேறொருவரை நியமிப்பது சம்பந்தனுக்கு இலகுவான காரியமாக இருக்கப் போவதில்லை.

இதேவேளை விக்னேஸ்வரன் கூட்டமைப்புக்குச் சவாலாக மாற்று அணியொன்றை அமைக்கும் முயற்சிகளை ஆரம்பித்துவிட்டதாகவும், அதனைச் சம்பந்தன் ஊடாகத் தடுத்து நிறுத்தும் முயற்சிகளில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோவும், புளொட்டும் இறங்கியுள்ளதாகவும் பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன. சம்பந்தனின் பேச்சை விக்னேஸ்வரன் செவிமடுப்பாரா என்பது ஒருபுறமிருக்க, அவரிடம் கூட்டமைப்பு சரணாகதி அடைவதைக் கூட்டமைப்பின் தொண்டர்கள் விரும்புவார்களா? என்பதையும் ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கூட்டமைப்பு சோதனையானதொரு காலகட்டத்தைத் தற்போது தாண்டிக் கொண்டிருக்கிறது. விக்னேஸ்வரன் இதைச் சீர் செய்வதற்குப் பதிலாக மேன்மேலும் பிரச்சினைகளை ஏற்படுத்துவதிலேயே தீவிரமாக உள்ளார். தாமொரு தலைவராக உருவாக வேண்டுமென்பதே இவரது நீண்டநாள் அபிலாசையாகவும் காணப்படுகின்றது.

**முதலமைச்சர் விக்னேஸ்வரன் மீது கடும் அதிருப்தி கொண்டுள்ள கூட்டமைப்பின் ஆதரவாளர்கள்**

விக்னேஸ்வரனின் கடந்தகாலச் செயற்பாடுகளால் வெறுத்துப்போன கூட்டமைப்புத் தொண்டர்கள், அவர் கூட்டமைப்பிலிருந்து ஒதுங்கி நிற்பதைத் தான் பெரிதும் விரும்புகின்றனர்.



மாகாணசபைத் தேர்தல் இடம்பெறுமாயின், எவருக்குமே அறுதிப் பெரும்பான்மைகிடைக்காதெனவும் கூறப்படுகின்றது. ஈபிடிபியின் தலைவரான டக்ளஸ் தேவானந்தாவும் போட்டியில் குதிக்க விருப்பதால், பல்முனைப்போட்டி ஒன்றே வடக்கில் இடம்பெறப் போகின்றது. உள்ளூராட்சித் தேர்தலில் ஏற்பட்ட நிலையொன்று மாகாணசபைத் தேர்தலில் இடம்பெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை.

ஆகவே கூட்டமைப்பினர் புதிய வியூகங்களை வகுத்து வாக்காளர்களைக் கவருவதற்கான செயற்திட்டங்களில் இறங்க வேண்டும். விக்னேஸ்வரன் விடயமும், சம்பந்தனால் சாமர்த்தியமாகச் சமாளிக்கப்பட வேண்டும். ஓர் இனவாதியாகத் தெற்கில் பார்க்கப்படுகின்ற அவர், இங்குள்ளவர்களிடம் தீவிரமான இனப்பற்றாளாராகத் தம்மைக் காட்டிக் கொள்கின்றார். இவரது உண்மையான முகத்தை வெளிப்படுத்துவது சம்பந்தனின் முக்கிய பணியாகும்.

# இந்தியாவை விட்டு வெகுதொலைவில் இந்து சமுத்திரத்தின் முத்து

இந்துமதி

சீனாவின் தலையீடு இலங்கையில் அதிகரித்துச் செல்வதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதற்கு மட்டுமே இந்தியாவினால் முடிகின்றது. தனக்கு மிக அருகில் அமைந்திருக்கும் ஒரு நாடு, தனது பரம எதிரியின் பிடிக்குள் சிக்கிக்கொள்வதைத் தடுக்க முடியாமல் போயுள்ளமை, இந்தியாவின் பலவீனத்தைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

**சீனாவும் இந்தியாவும் உலகில் வேகமாக வளர்ச்சி கண்டு வருகின்றன**

சீனாவும், இந்தியாவும் உலகிலேயே அதிக மக்கள் தொகையைக் கொண்ட நாடுகளாக விளங்குகின்றன. பொருளாதார பலத்திலும் இவ்விரண்டு நாடுகளும் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறி வருகின்றன. தகவல் தொழில்நுட்பத்துறையைப் பொறுத்தவரையில் இந்தியாவின் கரங்கள் ஓங்கி வருவதைக் காண முடிகின்றது. சீனாவின் உற்பத்திப் பொருள்கள் உலக சந்தையை ஆக்கிரமித்துக் காணப்படுகின்றன. அவற்றின் விலைகளும் மலிவாக இருப்பதைக் காணமுடிகின்றது. சீனாவிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு அமெரிக்கா அதிக அளவு வரிவிதித்தாலும், இதற்குப் பதிலாக அமெரிக்காவிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு சீனா வரியை அதிகரித்துப் பதிலடி வழங்கியதும் சமீபகாலச் சம்பவங்களாகும்.



அமெரிக்காவுக்கு எதிரியாக மாறியுள்ள சீனா, இந்தியாவின் பரம எதிரி என்பது இரகசியமான ஒன்றல்ல. 1962ஆம் ஆண்டில் ஒரு புறத்தில் சமாதானம் பேசிக் கொண்டே, மறுபுறத்தில் சீனா இந்தியாவின் முதுகில் குத்துவது போன்று போர் தொடுத்தது. இதைச் சற்றும் எதிர்பார்க்காத இந்தியா அந்தப் போரில் வெற்றிபெற இயலாது தோல்வி கண்டது. தோல்வி தந்த ஏக்கம்இந்தியநாட்டின்முதலாவதுதலைமை அமைச்சர் பொறுப்பை ஏற்ற ஜவகர்லால் நேருவின் திடீர் மறைவுக்கு ஒரு காரணமானது. இந்தப்போரில்பெருமளவுநிலத்தை இந்தியா சீனாவிடம் இழந்தது. அந்த இழப்பு இதுவரையில் ஈடுசெய்யப்படவில்லை.

**பூகோள ரீதியில் இலங்கை கேந்திர முக்கியத்துவம் மிக்க இடத்தில் அமைந்துள்ளது**

இந்துமகாசமுத்திரத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததொரு இடத்தில், இலங்கைத்தீவு அமைந்துள்ளது. இலங்கை பாதுகாப்பாக இருக்க வேண்டியது இந்தியாவின் பாதுகாப்புக்கு மிகவும் அவசியமானது. அதுமட்டுமல்லாது, அந்நியரின் தலையீடு இலங்கையில் இருப்பதையும் இந்தியாவால் அனுமதிக்க முடியாது.

ஆனால் போரினால் நலிவடைந்து, பொருளாதார ரீதியில் மோசமான நிலையை எட்டியிருந்த இலங்கை, இங்கு சீனாவின் கால்கள் ஆழப்பதிவதற்கு இடமளித்துவிட்டது. மகிந்த ராஜபக்ச அரச தலைவராக இருந்ததும், சீனாவுக்கு ஒரு வாய்ப்பாக அமைந்துவிட்டது. வகை தொகையின்றிக் கடன்களை சீனா, இலங்கைக்கு வாரி வழங்கியது. கடனுக்கான வட்டியையும் சீனா கணக்காகக் கணக்குப் பார்த்து வருகின்றது. கடனும் வட்டியுமாக பெருந்தொகை நிதிக்கு இலங்கை கடனாளியாக மாறிவிட்டமைக்கு, சீனாவே பொறுப்பாளியாகும். பெருந்தொகையான கடன்களை வாரி வழங்கி நாடுகளைத் தனது வலைக்குள் சிக்க வைப்பது சீனாவின் தந்திரங்களில் ஒன்றாகும். தற்போது இலங்கையும் அதன் பொறிக்குள் சிக்கிக்கொண்டு விட்டது. முக்கியத்துவம் வாய்ந்த அம்பாந்தோட்டைத் துறைமுகத்தையும் சீனாவிடம் இலங்கை இழந்துவிட்டது. கொழும்பிலும் சீனா தனது ஆதிக்கத்தை விஸ்தரித்துக் கொண்டுள்ளது. இதைவிடப் பெரும்பாலான உட்கட்டுமானப் பணிகளும், 40ஆயிரம் வீடுகளை அமைக்கின்ற பணிகளும் அந்த நாட்டின் பொறுப்பிலேயே ஒப்படைக்கப்பட்டுள்ளன. மத்தள விமான நிலையம் இந்தியாவிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்ற போதிலும், அது இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. காலப்போக்கில் இதுகூட இந்தியாவுக்கு வழங்கப்படாது, சீனாவுக்கு வழங்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.



**மகிந்தவைக் கைக்குள் போட்டுக்கொண்ட சீனா இலங்கை மீது தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்த முயல்கிறது**

2015ஆம் ஆண்டு இடம்பெற்ற அரசதலைவர் தேர்தலில் மகிந்த ராஜபக்ச வெற்றிபெற வேண்டுமென்பதே சீனாவின் விருப்பமாகக் காணப்பட்டது. இதன் காரணமாகவே தேர்தல் செலவுகளுக்காக பல மில்லியன் ரூபா பணம் சீன நிறுவனம் ஒன்றிடமிருந்து மகிந்தவுக்குக் கைமாறியதாக அமெரிக்க ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது. இதை மகிந்த தரப்பினர் மறுத்தாலும், அதற்கான ஆதாரங்கள் இங்கிருந்தே அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், மகிந்த தமது அரசியல் வாழ்வில் பெரும் பின்னடைவை எதிர்கொள்வது நிச்சயமாகிவிடும்.

விடுதலைப்புலிகளை அழித்ததில் முக்கியமான ஆறுநாடுகளுக்குப் பங்கு இருந்ததாகக் கூறப்படு கின்றது. இதில் இந்தியாவும் சீனாவும் அடங்குகின்றன. புலிகளைத் தோற்கடித்து அழிப்பதில் வெற்றி கண்ட இந்தியாவினால், சீனாவின் இராஜதந்திரத்தை வெற்றி கொள்ள முடியவில்லை. போரில் வென்றதைப்போன்று இதிலும் சீனாவே வெற்றி பெற்றுள்ளது.

தென்னிலங்கை மக்களும் இந்தியாவுக்கு எதிரான மனப்பான்மையைக் கொண்டிப்பது பல சந்தர்ப்பங்களில் தெரியவந்துள்ளது. இந்த நிலையில் போரில் விடுதலைப் புலிகளை ஒழிப்பதற்கு இந்தியா பெருமளவில் உதவினாலும், அந்த நன்றியுணர்வு கூட சிங்கள மக்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

உண்மையைச் சொல்லப்போனால், இலங்கை இந்தியாவைவிட்டு வெகுதூரம் விலகிச் சென்றுவிட்டது என்றுதான் கூற வேண்டும். ■

> “போரினால் நலிவடைந்து, பொருளாதார ரீதியில் மோசமான நிலையை எட்டியிருந்த இலங்கை, இங்கு சீனாவின் கால்கள் ஆழப்பதிவதற்கு இடமளித்துவிட்டது. மகிந்த ராஜபக்ச அரச தலைவராக இருந்ததும், சீனாவுக்கு ஒரு வாய்ப்பாக அமைந்துவிட்டது. வகை தொகையின்றிக் கடன்களை சீனா, இலங்கைக்கு வாரி வழங்கியது.”

## ஆசிரியருக்கான கடிதம்

### கட்டுப்பாடில்லாத் தீர்மானங்களால் சாதனை படைப்பு

“ஆண்ட தமிழினம் மீண்டும் ஒருமுறை ஆள நினைப்பதில் என்ன பிழை” என்கின்ற கோஷங்கள் 1990களில் ஒலித்த வண்ணமிருந்தன. நாட்டின் ஒரு பகுதியைக் கைப்பற்றி, சிறிது காலம் ஆட்சியும் நடத்தப்பட்டது. போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், வடக்கிலும் மாகாண சபை ஆட்சி முறை கொண்டுவரப்பட்டது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கொழும்பு மத்திய அரசுக்கும், ஐ.நா. சபைக்கும்கூட அனுப்பப்பட்டிருந்தன. அதில் உச்சக்கட்டமாக, மாகாணசபையால், மாகாண சபைக்கு உடன் அமைச்சரவை வேண்டுமெனவும், அமைச்சரவையை நியமிக்கு மாறும் முதலமைச்சரையே கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்ட சாதனையும் நிகழ்த்தப்பட்டுள்ளது. கடந்த ஒக்டோபர் மாதம் வரையில் வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட 114 பிரேரணைகளில் 10 வீதமே செயற்படுத்தப்பட்டதாக பேரவைச் செயலகத்தால் தெரிவிக்கப்பட்ட நிலையில், சபையின் 127 ஆவது அமர்வில் இந்தத் தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் செயற்படுத்தப்படாவிட்டால், தம்மாலேயே நிறைவேற்றப்பட முடியாத தீர்மானங்களையே இதுவரை வடக்கு மாகாண சபை இடக்கு முடக்காக கொண்டு வந்து நிறைவேற்றி வருகின்றது என்று விமர்சிக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளன.

இந்த நிலையில் ஐ.நா. மற்றும் இலங்கை அரசு போன்ற ஏனைய தரப்பினரை தமது தீர்மானமெதனையும் நடைமுறைப்படுத்துமாறு கோர, வடக்கு மாகாண சபைக்கு என்ன யோக்கியத்தை உள்ளது என்பது சிந்திக்கப் படத்தக்கது.

‘துன்பம் வரும் போது சிரியுங்கள்’ என்று வள்ளுவர் சொல்லி வைத்தார். துன்பங்கள் வருகின்ற அதே வேளை, கடவுள் சிரிப்பதற்கான சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்தியே தருகின்றார்.

தேரடியான்.

### போர்க் குற்றங்களுக்கு அரசும் படையினருமே பொறுப்பானவர்கள்

இந்த நாட்டில் இனப்பிரச்சினை உருவாகிய பின்னர் போர் மற்றும் இனக் கலவரங்களில் கொல்லப்பட்டவர்களில் பெருமளவிலானோர் அப்பாவிப் பொது மக்களே. போர் நடவடிக்கைகள் தீவிரமடைந்த பின்பும் கொல்லப்பட்டவர்கள் பெரும்பாலும் அப்பாவிப் பொது மக்களே. போரின் போதான மோதல்கள் எங்கோ நடந்துகொண்டிருக்க, பல மைல்களுக்கு அப்பால் வாழ்நத பொது மக்கள் குடியிருப்புக்கள் மீது அரசபடையினரால் எறிகணைத் தாக்குதல்களும் விமானக் குண்டுத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. மருத்துவமனைகள், பாடசாலைகள், சிறுவர் இல்லங்கள் எதுவும் தப்பவிடப்படவில்லை. இவற்றைச் செய்தவர்கள் இலங்கையரசின் முப்படையினரே. எனவே படையினர் அத்தனை பேரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களே! இதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களும் சிங்கள இனவாத ஆட்சியாளர்களே. எனவே சம்பந்தன் ஐயா, ஐ.நா. உயரதிகாரிகள் குழுவினரிடம் கூறிய கருத்து, படையினர் அனைவரும் குற்றம் இழைத்திருக்கவில்லை என்ற கருத்துப்பட, பொறுப்பான கருத்தாக அமையவில்லை. வயதிலும் பதவியிலும் உயர்ந்த ஒருவரின் கருத்து இப்படி அமைந்திருக்கலாமா? தமிழ் மக்களுக்கு விடிவே இல்லையா?

ப.யேசுபாதம், *வட்டக்கச்சி.*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** திட்டமிட்டு செயல்பட்டு முன்னேறுவீர்கள். தொழிலில் நிலுவைப் பணி நிறைவேற்றுவீர்கள். பணியாளர்கள் பணிவிஷயமாக வெளியூர் செல்வர்.

**இடபம்:** பரந்த மனப்பான்மையுடன் செயல்படுவீர்கள். நல்லவர்களின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும்.

**மிதுனம்:** உறவினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தாமதமான பணியை புதிய உத்தியால் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி ஏற்படும்.

**கடகம்:** நற்செயலுக்கான பாராட்டு வந்து சேரும். மனதில் உற்சாகம் மேலோங்கும். தொழில், வியாபாரம் செழிக்க புதிய யுக்தி பயன்படுத்துவீர்கள். மிதமான பணவரவு கிடைக்கும்.

**சிங்கம்:** தொழிலில் உள்ள குறைகளை பிறரிடம் விவாதிக்க வேண்டாம். இலாபம் சுமார். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும். அரசு தொடர்பான அனுகூலம் தாமதமாகலாம்.

**கன்னி:** பிறர் பாராட்டும் வகையில் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வாடிக்கையாளர் ஆதரவு கிடைக்கும். . வீடு, வாகனத்தில் நவீன மாற்றம் செய்வீர்கள்.

**துலாம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு விலகும். தொழிலில் கடின உழைப்பு தேவைப்படும். அளவான பணவரவு கிடைக்கும். நிலுவைப் பணம் வசூலாகும் .


**விருச்சிகம்:** நேர்த்தியுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் அளப்பரிய வளர்ச்சி ஏற்படும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.

**தனுசு:** எவரிடமும் தற்பெருமை எண்ணத்துடன் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உருவாகிற இடையூறை தாமதமின்றி சரிசெய்வது நல்லது.

**மகரம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டால் நன்மை காண்பீர்கள். வெகுநாள் மனதில் இருந்த சஞ்சலம் தீரும்.அதிக உழைப்பினால் தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். இலாபம் உயரும்.

**கும்பம்:** அவமதித்தவர் அன்பு பாராட்டுகிற நிலை உருவாகும். தொழில், வியாபார வளர்ச்சியால் புதிய சாதனை படைப்பீர்கள். ஆதாயம் பன்மடங்கு உயரும்.

**மீனம்:** நண்பரின் செயலை குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத குறுக்கீடு வரலாம். பொறுமையுடன் செயல்படுவதால் சிரமம் விலகும்.



# படையப்பா 2 விரைவில்...?

'காலா' படத்துக்குப் பிறகு கார்த்திக் சுப்புராஜ் இயக்கும் படத்தில் நடித்து வருகிறார் ரஜினிகாந்த். இந்தப் படத்தை அடுத்து கே.எஸ்.ரவிக்குமார் இயக்கும் படத்தில் நடிக்க ரஜினி ஒப்பந்தமாகிவிட்டார் என்று கூறப்படுகிறது. முன்னதாக முத்து, படையப்பா, லிங்கா உள்ளிட்ட படங்களில் ரஜினிகாந்தை இயக்கி இருந்தார் கே.எஸ்.ரவிக்குமார். இந்த நிலையில் இது படையப்பா இரண்டாம் பாகமாக இருக்க வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தப் படத்துக்காக நடிகை ரம்யாகிருஷ்ணனிடம் இயக்குநர் ரவிக்குமார் பேச்சு நடத்தியதாகத் தெரிகிறது.

# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | | 3 | | 7 | 9 | | |
| | | | | 9 | | 4 | | 6 |
| | | 3 | | | 6 | | | |
| | | | | | 5 | | 1 | 8 |
| | | 8 | | | | 5 | | |
| 4 | 3 | | 7 | | | | | |
| | | | 9 | | | 8 | | |
| 2 | | 7 | | 5 | | | | |
| | | 6 | 1 | | 2 | | | 5 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 9 | 7 | 1 | 6 | 3 | 4 | 8 |
| 6 | 7 | 3 | 5 | 8 | 4 | 2 | 9 | 1 |
| 1 | 8 | 4 | 9 | 2 | 3 | 6 | 5 | 7 |
| 7 | 1 | 5 | 6 | 3 | 2 | 4 | 8 | 9 |
| 8 | 3 | 6 | 1 | 4 | 9 | 5 | 7 | 2 |
| 9 | 4 | 2 | 8 | 5 | 7 | 1 | 6 | 3 |
| 5 | 6 | 8 | 2 | 7 | 1 | 9 | 3 | 4 |
| 4 | 2 | 7 | 3 | 9 | 5 | 8. | 1 | 6 |
| 3 | 9 | 1 | 4 | 6 | 8 | 7 | 2 | 5 |

நேற்றைய விடை





நாசாவே பிச்ச வாங்கும் நம்மகிட்ட.... என்ன ஒரு கண்டுபிடிப்பு!!!





உன் தொழில் பக்திக்கு ஒரு அளவே இல்லையா..!!

## பருவப் பெயர்கள்

### பெண்கள்

பேதை- ஐந்து முதல் ஏழு வயது
பெதும்பை - எட்டு முதல் 11 வயது
மங்கை- 12 முதல் 13 வயது
மடந்தை- 14 முதல் 19வயது
அரிவை - 20 முதல் 25 வயது
தெரிவை - 26 முதல் 31 வயது
பேரிளம்பெண்- 32 முதல் 40 வயது

### ஆண்கள்

பாலன்- ஒன்று முதல் 7 வயது
மீளி- 8முதல் 10வயது
மறவோன்- 11 முதல் 14 வயது
திறவோன்- 15 வயது
காளை- 16 வயது
விடலை- 17 முதல் 30 வயது
முதுமகன் - 30 வயதுக்கு மேல்



# இமோஜிகளால் ஆகியது உலகு

வார்த்தைகளை இமோஜிக்கள் விழுங்கிவிட்டன. இன்றைய அவசர உலகத்தில் குடும்ப உறுப்பினர்களிடையேகூட சிரிப்பு, துக்கம், கைகுலுக்கல்கள், பாராட்டுக்கள் என்று எல்லாமும் மென்மையாகச் சத்தமில்லாமல் இமோஜிக்களாகவே அரங்கேறுகிறது வாட்ஸப்பில். ஆய்வின் கூற்றுப்படி, சமூக வலைதளங்களில் ஒரு நாளைக்கு ஏறத்தாழ 6 பில்லியன் இமோஜிக்கள் உலகெங்கிலும் பரிமாறிக் கொள்ளப்படுகிறது.

ஜப்பானிய மொழியிலிருந்து வந்த வார்த்தை இமோஜி. இ என்றால் வரைபடம் என்றும், மோஜி என்றால் பாத்திரம் என்றும் அர்த்தமாகும்.

பேஸ்புக், இன்ஸ்டாகிராம் வாட்ஸப்பில் இப்போது வரும் செய்திகள் இமோஜிக்கள் இல்லாமல் வருவதில்லை. முகத்திற்கு நேர் நடக்கும் உரையாடலில் ஒருவரின் கையசைவுகளும் உடல்மொழிகளும் அவரின் குரல் தொனியும் முக்கிய பங்கு வகிக்கிறது. இவை அனைத்தும் பேசுபவரின் எண்ண ஓட்டத்தை அறிய மிகவும் உதவும்.

ஒரு செய்தியின் முடிவில் சேர்க்கப்படும் சரியான இமோஜி அந்தச் செய்தியின் பொருளையும் அதற்கு நாம் அளிக்க இருக்கும் விளக்கத்தையும் நிர்ணயிக்கும் திறன் கொண்டது.

நேரில் நாம் ஒரு சிரித்த முகத்தைப் பார்க்கும்போது எமது மூளைக்குள் சில பகுதிகள் புத்துணர்ச்சி பெற்று எம்மையும் சிரிக்கச் செய்யும். அதேபோல் சிரிக்கும் இமோஜிக்களும் எமது மூளைக்கு புத்துணர்ச்சி அளிக்கின்றன.

ஆன்லைன் பேச்சுவழக்கில் இமோஜிக்களை உபயோகப்படுத்துவது ஒரு நெருங்கிய தோழமை உறவையும், முற்போக்கு சிந்தனை உணர்வையும் ஏற்படுத்துகிறது.

முகம் பார்த்து பேசுதல், என் கையை பிடித்துக் கொள், நான் அழுது தீர்க்கிறேன் போன்ற செயல்கள், என் அருகில் அமர்ந்து என் மௌனத்தைக் கேள் போன்ற நிகழ்வுகள் எல்லாம் இந்த அவசர உலகத்தில் மலையேறிப் போய்விட்டது. பரபரப்பான வாழ்க்கைமுறையும் மக்களின் பொறுமையின்மையும் மனித உணர்வுகளை செல்லாக் காசாக நினைக்க வைத்துவிட்டது.

அப்படியிருக்க, அறிவியல் உலகம் நாம் இழந்து நிற்கின்ற எமோஷனல் வாழ்க்கை முறையை ஞாபகப்படுத்துவதற்கே இது போன்ற இமோஜிக்களை உருவாக்கி உள்ளனர்.

உறவுகளுக்கு நடுவே இருக்கும் உணர்வுகளை சொல்ல முடியாமல் தவிக்கும் நாம், இந்த இமோஜிக்கள் மூலமாவது நல்ல உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வோம்.





ஜோசப் ஸ்டாலின்



# வெற்றிமொழிகள்

வாக்குகளைச் செலுத்தியவர்கள் தேர்தலைத் தீர்மானிப்பதில்லை, வாக்குகளை எண்ணுபவர்களே தீர்மானிக்கிறார்கள்.

கல்வி என்பது ஒரு ஆயுதம் போன்றது.

எழுத்தாளர் என்பவர் மனித ஆன்மாவின் பொறியியலாளர்.

பட்டு கையுறைகளைக் கொண்டு உங்களால் புரட்சியை உருவாக்க முடியாது.

எண்ணங்கள் துப்பாக்கிகளை விட அதிக சக்தி வாய்ந்தவை.

ஹீரோக்கள் வரலாற்றினை உருவாக்குவதில்லை, ஆனால் வரலாறு ஹீரோக்களை உருவாக்குகிறது.

எங்கு மனிதன் இருக்கிறானோ, அங்கு பிரச்சினையும் இருக்கிறது. எங்கு மனிதன் இல்லையோ, அங்கு பிரச்சினையும் இல்லை.

எந்த வெல்லமுடியாத படைகளும் ஒருபோதும் இருந்திருக்கவில்லை என்பதை வரலாறு காட்டுகிறது

YARL HOSPITAL

யாழ். திருநெல்வேலியில் முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட

# யாழ் வைத்தியசாலை

24 மணிநேர சேவை

## தற்போது அதிநவீன வசதிகளுடன் கூடிய சத்திர சிகிச்சைக் கூடம்

### ✓ Laproscopy Surgery (வீடியோ மூலம் சத்திரசிகிச்சை)

| | |
|---|---|
| -Hernia (ஹேணியா) | 130,000/= |
| -Appendectomy (அப்பன்டிஸ் சத்திரசிகிச்சை) | 110,000/= |
| -Hysterectomy (கருப்பை அகற்றல்) | 130,000/= |
| -Cholecystectomy (பித்தப்பை அகற்றல்) | 130,000/= |
| -Lap & Dye Examination | 55,000/= |
| -LRT (கர்ப்பத்தடை சத்திரசிகிச்சை) | 70,000/= |

### ✓ Gyn & Obs (பெண்ணியல் சத்திரசிகிச்சைகள்)

| | |
|---|---|
| -LRT (கர்ப்பத்தடை சத்திரசிகிச்சை) | 55,000/= |
| -Vaginal Hysterectomy (குடல் இறக்க சீர் செய்தல்) | 99,000/= |
| -Abdominal Hysterectomy (கர்ப்பப்பை அகற்றல்) | 99,000/= |
| -D & C (கர்ப்பப்பை சுத்திகரித்தல்) | 39,000/= |

### ✓ Laser Surgeries

-Laser Vericose Surgery (வரிகோஸ் சத்திரசிகிச்சை)

### ✓ Eye Laser Treatment

நீரிழிவு நோயினால் தாக்கமடைந்த விழித்திரையின் நரம்பு பகுதி மற்றும் குருதி கசிவை நிறுத்துவதற்கான லேசர் சிகிச்சை

**Video Colonoscopy** (வீடியோ மூலம் (மலவாசல்) பெருங்குடல் பரிசோதனை) 50,000/=

**Video Endoscopy** (வீடியோ மூலம் உணவுக்கால்வாய் பரிசோதனை) 12,500/=

அக்ரகாரா. அரச/ ETF தனியார் நிறுவனங்களின் காப்புறுதி அங்கீகாரம் பெற்றது.

### ✓ General Surgeries

| | |
|---|---|
| -Vericosevein (வரிகோஸ் சத்திரசிகிச்சை) | 95,000/= |
| -Hernina (ஹேணியா சிகிச்சை) | 80,000/= |
| -Appendectomy (அப்பண்டிஸ் சத்திரசிகிச்சை) | 75,000/= |
| -Thyroidectomy (தைரொட்டு சுரபி அகற்றல்) | 130,000/= |
| -Parotidectomy (உமிழ் நீர் சுரப்பி அகற்றல்) | 110,000/= |
| -Anal Fissure | 45,000/= |
| -Anal Fistula | 45,000/= |
| -Haemorrhoids (Piles) Surgery | 55,000/= |

### ✓ E.N.T சத்திர சிகிச்சைகள்

| | |
|---|---|
| **Nose மூக்கு** | |
| -Septoplasty (மூக்கு சீராக்கல்) | 90,000/= |
| -Septorhinoplasty | 170,000/= |
| -Endoscopic Sinus Surgery | 95,000/= |
| -Endoscopic Nasal Polypectomy | 85,000/= |
| **Ear காது** | |
| -Myringoplasy (காது சௌவு துவாரம் அடைத்தல்) | 90,000/= |
| -Mastoidectomy | 120,000/= |
| **Larynx & Throat தொண்டை** | |
| -Tonsilectomy / Adenoidectomy | 75,000/= |
| -Phono Surgery (குரல் மாற்ற சத்திரசிகிச்சை) | 60,000/= |
| -Thyroidectomy (தைரொட்டு சுரபி அகற்றல்) | 130,000/= |

மேலே குறிக்கப்பட்ட கட்டணங்கள் அனைத்தும் சத்திரசிகிச்சை கூடம், வைத்திய நிபுணர்கள், அத்துடன் ஒரு நாள் இணைந்த குளியலறையுடனான தங்கும் விடுதி அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

315, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 3533, 021 222 1011, 0777 781 005

மேலதிக தகவல்களுக்கு: 077 310 7685

(SUP1596)(10)


## மரண அறிவித்தல்

### நாகராசா கமலேந்திரன் (ராசு)

*(உரிமையாளர்- பிள்ளையார் கடைச்சல் தொழிலகம்)*



யாழ். கோண்டாவில் மேற்கு ஆசாரிலேனை பிறப்பிடமாகவும் சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா கமலேந்திரன் (ராசு) கடந்த (16.07.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராசா பரமேஸ்வரி தம்பதியரின் கனிஷ்டபுத்திரனும் காலஞ்சென்றவர்களான சிவகுரு சரோஜினி தம்பதியரின் அன்புமருமகனும் காந்திமதியின் அன்புக்கணவரும் தனுஜா (ஜேர்மனி), புவிராஜ், அமல்ராஜ் (தொழிற்பயிற்சி அதிகாரசபை யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் பிரவினின் அன்புமாமனாரும் காலஞ்சென்ற சரோஜினிதேவி மற்றும் நாதன் (துர்க்கா கடைச்சல் தொழிலகம், யாழ்ப்பாணம்). இந்திரதேவி ஆகியோரின் அன்புச்சகோதரரும் இந்துமதி, யெயாமதி, மதிவண்ணன் (டோகா), கலாமதி, சிறிமதி, மதிச்சந்திரன் (சுவிஸ்) காலஞ்சென்றவர்களான மதிக்குமார், இலங்கைராஜா மற்றும் தங்கவடிவேல், குதுகலகுமாரி ஆகியோரின் அன்புமைத்துனரும் சாம்ப சிவம், தங்கராஜா, டக்சினி, நாகேந்திர ராஜா, விக்கினேஸ்வரன் (ரவி), றஞ்சி (சுவிஸ்), சித்திரா (இத்தாலி) ஆகியோரின் சகலனும் யெகன் (மகா அலுமினியப்பிற்றிங்), வியிதா, றயிதா (பிரான்ஸ்), சுயிதா, சந்துசன், யதுசா, மதுசன், லாவன்யா (சுவிஸ்), அஸ்வினி, றூபினி (இத்தாலி) ஆகியோரின் மாமனும் பகிரன், டினேஸ் (லண்டன்), சுதர்சன் (சுவிஸ்), சுதாகர், சுகந்தன், சுபாசினி, சாலினி (கனடா), நர்மதா, ராதா (லண்டன்), லோஜனா, ராகுலன், திவ்வியா (பிரான்ஸ்), நிமல்ராஜ், அகில்ராஜ், பிருந்தாபன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.07.2018) வியாழக்கிழமை நாவலடி லேன் வண்ணார்பண்ணை என்னும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2 மணியளவில் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**புவிராஜ் (மகன்) 077 4689 638**
**அமல்ராஜ் (மகன்) 075 6435 277**


விளம்பர தொடர்புகளுக்கு
உதயன் advt@uthayan.com, 0214931111


## ஓராண்டு நினைவஞ்சலி

### சங்கரப்பிள்ளை பர்வகம்



பிறப்பு 15.04.1933

இறப்பு 29.07.2017

அம்மா...!

உமையிழந்து ஆண்டொன்று ஆனதுவோ?
செம்மையாம் சிரிப்பு செந்தளிப்பாம் - பூவதனம்
சேர்த்து மகிழ்ந்திருந்த செய்தியெலாம் மறைந்திடுமோ?
உம்மைக் காக்க உழைத்தோம் முடியவில்லை!
ஒவ்வோர் பொழுதுமிங்கு உம் நினைவில் வாடுகிறோம்!
எம் வீட்டு நாயகியே! என்றென்றும நாம் மறவோம்!
இறைவன் தாள்மலரில் நீரமரப் பிரார்த்திப்போம்
- ஓம் சாந்தி -

687/6, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# பெறுகை அழைப்பு
# மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்
## கருவிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு
## வாழ்வாதார உதவித்திட்டம்

1. யாழ்ப்பாணமாவட்டச் செயலகத்தின் திணைக்களப் பெறுகைக்குழுவின் தவிசாளர் யாழ் மாவட்ட பிரதேச செயலகங்களினால் வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வழங்குவதற்காக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பொருட்களுக்கு விலைக்கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப் பட்ட மூடிய விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.

2. இது தேசிய போட்டி விலைக்கேள்விமுறையாக இருந்தாலும் வடக்கு மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

3. அக்கறையுள்ள கேள்வியாளர்கள் யாழ் மாவட்ட செயலக பெறுகை அலகில் கேள்விபத்திரங்களை இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ளமுடியும். தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள் :

021 221 4633/021 222 2233, 2234 (Ext. – 140) Facsimile – 021 222 3674 .

4. அக்கறையுள்ள கேள்வியாளர்கள் எழுத்து மூலமான விண்ணப்பத்துடன் தமது வியாபாரப்பதிவுச் சான்றிதழ் பிரதியையும் சமர்ப்பிக்கவேண்டும். மீளளிக்கப்படாத கட்டணமாகிய ( Non Refundable fee )அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணத்தில் உள்ள பெறுகை அலகு அலுவலகத்தின் மூலம் செலுத்தி பற்றுச் சீட்டை சமர்ப்பித்து 19.07.2018 தொடக்கம் 02.08.2018 வரை மு.ப. 9.00 மணியிருந்து பி.ப. 02.30 மணி வரை அலுவலக நேரங்களில் கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

5. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வித் தொகைகளுக்கான கேள்விப்பிணைப் பொறுப்பு கேள்விகளுடன் இணைக்கப்பட்டு தவிசாளர், திணைக்களப் பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 03.08.2018 பி.ப 02.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைக்கப்படல் வேண்டும். மேலும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்வி இலக்கத்தினையும் (Bid ID),பொருள் விபரத்தினையும் குறிப்பிடல் வேண்டும். கேள்விகள், சமுகமளிக்கும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமாக கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

6. விலைக்கேள்வி செல்லுபடிக்காலம் கேள்வி இறுதித் திகதியிலியிருந்து அல்லது நீடிக்கப்படும் திகதியிலிருந்து (Bid Valid) 90 நாள்களும், கேள்விப் பிணைப்பொறுப்பு (Bid Security) கேள்வி-திறத்தல் திகதியிலிருந்து 120 நாள்களும் ஆகும்.

7. முற்கேள்விக் கூட்டம் (Prebid Meeting) 25.07.2018 மு.ப. 10.00 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறும்.

8. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி முடிவாக அமையும்.

9. அட்டவணை கீழ்வருமாறு:

| | BID ID | Category of Items | Bid Security Rs. | Bid Security Validity Period Until | Non Refundable fund Rs. |
|---|---|---|---|---|---|
| 01 | JK/PROC/Tools/Alufit /01/2018 | **Aluminiyam fitting & Welding Work Equipments & Tools** (அலுமினிய பொருத்துக்கள் மற்றும் வெல்டிங் வேர்க் உபகரணங்கள், கருவிகள்.) | 50,000 | 01.12.2018 | 1000 |
| 02 | JK/PROC/Tools/Tailor/ 02/2018 | **Sewing Mechines, Tailiring Equipments & Tools** (தையல் இயந்திரங்கள் மற்றும் தையல் வேலைக்கான உபகரணங்கள், கருவிகள்) | 100,000 | 01.12.2018 | 1000 |
| 03 | JK/PROC/Furniturewood /03/2018 | **Furnitures - Wooden** (மரத்தளபாடங்கள்) | 50,000 | 01.12.2018 | 1000 |
| 04 | JK/PROC/Furnituresteel /04/2018 | **Furnitures - Plastics & Steel** (பிளாஸ்டிக் மற்றும் இரும்பிலான தளபாடங்கள்) | 50,000 | 01.12.2018 | 1000 |
| 05 | JK/PROC/Tools/Mason/ 05/2018 | **Masonry Equipments & Tools** (மேசன் உபகரணங்கள், கருவிகள்) | 75,000 | 01.12.2018 | 1000 |
| 06 | JK/PROC/Tools/Food/ 06/2018 | **Food Processing Equipments & Tools** (உணவு உற்பத்திக்கான உபகரணங்கள், கருவிகள்) | 50,000 | 01.12.2018 | 1000 |
| 07 | JK/PROC/Tools/Carpent/ 07/2018 | **Carpentry Equipments & Tools** (தச்சுவேலைக்கான உபகரணங்கள், கருவிகள்) | 50,000 | 01.12.2018 | 1000 |
| 08 | JK/PROC/Tools/Agri/ 08/2018 | **Agriculture Equipments & Tools** (விவசாய உபகரணங்கள், கருவிகள்) | 75,000 | 01.12.2018 | 1000 |
| 09 | JK/PROC/Tools/Fish/ 09/2018 | **Fisheries Equipments & Tools** (மீன்பிடி உபகரணங்கள், கருவிகள்) | 50,000 | 01.12.2018 | 1000 |

**நா.வேதநாயகன்,**
**அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்,**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**


ராசி அதிர்ஷ்டம்
திகதி 18.07.2018 வெற்றி வாரம் 2332 வர்ணம் பச்சை
மீனம்
வெற்றி இலக்கங்கள் 06 30 39 59
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 22, 35, 860/=
2018.07.20ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே. 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

DLB CAR PLUS
சீட்டிழுப்பு வாரம் 67
சீட்டிழுப்பு திகதி 18.07.2018
வெற்றி இலக்கங்கள் 19 21 51 I வெள்ளி
- 13 31, 89, 740/=
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB LOT DL என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 3058 திகதி: 2018.07.18 புதன்கிழமை
ஊதா
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து போனஸ் இலக்கம் அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
11 27 30 75 B 21 33,236,870/-
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB LOT AKiran டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 315
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.07.18
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 51,536,475/-
வெற்றி இலக்கங்கள் 20 35 37 40 P
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB LOT AKiran டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778


## Faculty of Management Studies & Commerce
## University of Jaffna Sri Lanka

**1st, 2nd & 3rd years Bachelor of Business Administration**
**1st, 2nd & 3rd years Bachelor of Commerce**
**Second Semester Examination 2016 (Old Syllabus)**

The applications are called for the above examinations of the faculty of Management Studies & Commerce. The candidates can receive the application forms at the Dean's Office, Faculty of Manegement Studies & Commerce, From 18.07.2018. The repeat candidates should pay 250/= to each subject at the People's Bank, University branch and the receipt should be annexed with the application form.

The filled appllication forms should be submitted at the Dean's Office, Faculty of Management Studies & Commerce of or before 26.07.2018.

**Registrar,**
**University of Jaffna, Sri Lanka.**

(C 7317/15/18)




357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கரடிப் போக்குச் சந்தி, ஏ–9 வீதி, கிளிநொச்சி.
நவீன சந்தை, முதலாம் மாடி, சாவகச்சேரி. 021 222 7432
esprintersjaffna@gmail.com, www.esprinters.com
021 492 7454 / 021 492 7471 / 021 492 7472

## தாய்லாந்து சிறுவர்கள் வீடுதிரும்பினர்

பாங்கொக், ஜீலை19 தாய்லாந்தின் மர்மக் குகையான தாம் லுவாங் குகையில் 17 நாள்களாக சிக்கியிருந்து, பின்னர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சிறுவர்கள் நலமுடன்வீடுதிரும்பினர். தாய்லாந்தின் சியாங் ராய் பகுதியில் உள்ள தாம் லுவாங் குகையை பார்வையிடச் சென்ற 12 சிறுவர்கள் மற்றும் அவர்களின் கால்பந்து பயிற்சியாளர் கடந்த மாதம் 23ஆம் திகதி குகைக்குள் சிக்கிக் கொண்டனர். குகையில் 17 நாள்களாக சிக்கித் தவித்த கால்பந்து பயிற்சியாளர் மற்றும் சிறுவர்கள் 12 பேர் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டு சியாங் ராய் நகரில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களுக்குத் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இதையடுத்து அவர்கள் நலமுடன் நேற்று வீடுதிரும்பினர். (ம)








# மெய்யான வார்த்தைகள் பொய்யாவதில்லை

ஒரு அழகான காட்டில் ஒரு காகமும் புறாவும் நண்பர்களாக இருந்தன. இதை தேடும் போதும் மற்றைய நேரங்களிலும் இரண்டும் ஒன்றாகவே சுற்றித் திரிந்தன. ஒரு நாள் காகம் புறாவிடம் "நான் கூடு கட்டப் போகிறேன். அதுவும் இதுவரை எவரும் கட்டியிருக்க முடியாத அழகான கூட்டைக் கட்டப் போகிறேன்" என்றது.

"அது சரி எங்கே உன் கூட்டைக் கட்டப் போகிறாய்" என்றது புறா. காகமோ இம்முறை நான் மரங்களில் கூடு கட்டப் போவதில்லை. நாம் எப்போதும் உட்கார்ந்து பேசிப் பொழுதைக் கழிப்போமே அந்த மின் கம்பத்தில்தான்" என்றது பெருமையாக "இதென்ன இது? அந்த இடம் மக்கள் நடமாட்டம் நிறைந்தது. அங்கே இடையிடை உட்கார்ந்து பொழுதைக் கழிக்கலாம். நிரந்தரமாக கூடு கட்ட மட்டும் நினைக்காதே. மின்கம்பத்தின் அபாயம் உனக்குத் தெரியாதா? மின்கசிவு ஏற்படும் அபாயம் அங்கே உண்டு. அதிகம் காற்றடித்தால் உன் கூடு விழும் அபாயமும் உள்ளது. அது உன் குஞ்சுகளுக்கு நல்லதல்ல" என்றது புறா. "இதோ பார், மின்கம்பங்களில் இருந்தால் அதிகாலை வேளைகளிலும் அந்தி மாலைப் பொழுதிலும் தெருக்களில் அழகான காட்சிகளையும் காணலாம். நகரம் மின்விளக்குகளால் ஒளிர்வதையும் காணலாம். மனிதர்களின் காலை மாலை பரபரப்பான நடவடிக்கைகளையும் கண்டு களிக்கலாம். என் குஞ்சுகளும் தமது கூட்டிலிருந்தபடியே அவற்றை ரசிக்கட்டுமே" என்றது காகம். புறாவுக்கு இது ஒன்றும் சரியாகப் படவில்லை. "நண்பா அழகை ரசிப்பதற்காக நிரந்தர பாதுகாப்பை இழக்கிறாய் நீ" என்று சற்று உரத்துக் கூறியது.

"இதே பார் என் கூட்டை எங்கு அமைக்க வேண்டும் என்பது எனக்குத் தெரியும். நீ உன் வழியைப் பார்த்துப் போ" என்று காகம் புறாவை விரட்டி விட்டது. புறா தன் நண்பனை எண்ணிக் கவலையுடன் அங்கிருந்து பறந்து தன் இருப்பிடம் சேர்ந்தது.

காகம் கூடு கட்டத் தொடங்கியது. முட்டையிட்டு பொரித்த 3 குஞ்சுகளுடன் மின் கம்பத்தின் கீழ் மானிடரின் போக்குவரத்து மற்றும் செயற்பாடுகளை ரசித்தபடி காலத்தைக் கழித்தது. இடையிடையே நண்பனான புறா கூறியவற்றை நினைத்துப் பார்க்கும். பின்னர் மறந்து விடும். தன் குஞ்சுகளுக்கு இரை தேடி ஊட்டுவதில் கண்ணாயிருந்தது.




ஒருநாள் காகம் வழக்கம் போல வெளியே இரைதேடிச் சென்று விட்ட நேரம் அந்த பேரிடர் சம்பவித்தது. பலமான காற்றுடன் மழைபெய்ய ஆரம்பித்தது. காகத்தின் குஞ்சுகள் தாயைத் தேடின. காகம் உடனடியாக கூட்டுக்கு திரும்ப நினைத்த போதிலும் விடாத மழையும் பலமான காற்றும் வீசிக்கொண்டே இருந்ததால் அது முடியவில்லை. ஒரு உணவு விடுதியின் தாழ்வாரத்தில் தங்கி நின்ற காகம் குஞ்சுகளின் நிலையை எண்ணிப் பதறியது.

இரண்டு மூன்று மணித்தியாலங்களில் பின் மழையும் காற்றும் ஓய்ந்தன. காகம் வேகமாகப் பறந்து மின்கம்பத்தை அடைந்தது. அங்கே கூடும் இல்லை; குஞ்சுகளும் இல்லை. அதிர்ச்சியும் வேதனையும் அடைந்த அது, சூழல் பகுதிகளில் கூடு காற்றில் பறந்து மரங்களில் சிக்குண்டிருக்கக் கூடுமா? எனத் தேடியது. எதிர்பாராமல் புறா சொன்னதையும் நினைத்துக் கொண்டது. உடனே மின் கம்பத்தின் கீழ் தெருவைப் பார்த்தது. அந்தோ பரிதாபம் அங்கே சிதைந்து போன கூடும் வாகனச் சில்லுக்குள் அகப்பட்டு உயிர்ப் பலியாகிப் போன தன் குஞ்சுகளையும் கண்டு பதறித் துடித்தது. கீழே பறந்து சென்று காகக் குஞ்சுகளைத் தன் சிறகுகளால் மார்போடு அணைத்து தேம்பித் தேம்பி அழுதது காகம். நல்ல நண்பனின் அறிவுரைகளைத் தான் புறக்கணித்ததை எண்ணி எண்ணி குலுங்கிக் குலுங்கி அழுதுகொண்டே இருந்தது. கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் செய்து என்ன பயன்?

**நல்ல கருத்துக்களை எவர் கூறினாலும் அவற்றை ஏற்று வழிநடந்தால் வாழ்க்கையில் நல்லதே நடக்கும்.**

## பிஞ்சு இருக்கு



புலவர் ஒருவரின் பாடலைக் கேட்டு மகிழ்ந்த அரசன் மரம் செடி, கொடிகள் வரைந்து இழைக்கப்பட்ட பொன்னாடை ஒன்றை அவருக்குப் பரிசளித்தான். அதனைப் பெற்றுக்கொண்ட புலவர், அந்த ஆடை நடுவில் சிறிது கிழிந்து இருப்பதைக் கண்டு திகைத்தார்.

தனக்கு அளிக்கப்பட்ட பொன்னாடை கிழிந்து இருப்பதை அரசனுக்கு உணர்த்த வேண்டும். அதே சமயத்தில் அரசனின் உள்ளமும் வருந்தக் கூடாது என்ன செய்வது என்று சிந்தித்தார் புலவர்.

"அரசே! நீங்கள் பரிசு அளித்த பொன்னாடையில் மரம் இருக்கிறது பூ இருக்கிறது பிஞ்சும் இருக்கிறது என்று கூறி ஆடையில் கிழிந்திருந்த பகுதியைக் காட்டினார்.

புலவர் நாசுக்காக தன் தவறை உணர்த்தியதோடு அவரின் சிலேடை நயம் நிறைந்த சொல்லாற்றலையும் வியந்து அரசன் அவருக்கு நல்லதொரு பொன்னாடையையும் பல பரிசில்களையும் கொடுத்தனுப்பி வைத்தான்.


## பின்வரும் சொற்களைப் பொருத்தமான இடைவெளிகளில் வைத்து நிரப்பி எழுதுவோம்

காகா / கீகீ / வள் வள் / மியாவ் /
கொக்கரக்கோ / டாங்டாங் /கடகட / பளபள

1. காகம் --------------- என்று கத்தியது.
2. நாய் --------------- என்று குரைத்து.
3. கோயில் மணி --------------- என ஒலித்தது.
4. கிளி --------------- என்று கத்தியது.
5. சேவல் --------------- என கூவியது.
6. பூனை --------------- என்று கத்தியது.
7. வண்டி --------------- என ஓடியது
8. காப்பு --------------- என்று மின்னியது

## அறிஞர்களின் அனுபவ மொழிகள்

- பிறரைப் பழி வாங்க எண்ணுவதற்கோ, எமக்கு இழைக்கப் பெற்ற தீங்குகளை நினைத்துப் பார்ப்பதற்கோ நேரத்தை ஒதுக்கக் கூடாது. காரணம் எமது வாழ்க்கை மிகச் சுருக்கமானது.
  - சார்லட் பிரான்டி
- வெளியே காட்டிய கோபம் மன்னிப்புக்கு வழி தேடும். உள்ளே அடக்கிய கோபம் பழிக்கு வழி தேடும்.
  - புல்வெர்
- நேர்த்தியாகச் சென்று முடிப்பதோடு உங்கள் வேலை முடிந்தது. உங்களைப் பற்றி விமர்சிப்பதை மற்றவர்களுக்கு விட்டு விடுங்கள்.
  - கணித மேதை பித்தாக்சஸ்
- கடவுள் நூலைத் தான் கொடுப்பார். சேலையை மனிதன் தான் நெய்ய வேண்டும்.
  - எபி குரூஸ்
- கேலியைக் கண்டு பயப்பட வேண்டாம். உங்கள் மீது ஒருவன் உப்பை அள்ளிப்போட்டால் புண்கள் இருந்தலான்றி உங்களுக்கு ஒரு தீங்கும் நேராது.
  - ஜீனியஸ்
- பிறர் பாரத்தைத் தாங்க கை கொடுத்தால் எமது பாரத்தின் கனம் தானே குறைந்து விடும்.
  - அப்பசி
- ஒருவர் தெரியாமற் செய்த பிழைக்கு நாம் அனுதாபம் காட்ட வேண்டும். ஏளனம் செய்யக் கூடாது.
  - செஸ்டர்ஃபீல்ட்



## புள்ளிகளை இணைத்து படத்தை முழுமை செய்வோம்



## விக்னேஸ்வரனின்...

வைக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்த நீதியரசர் ஒருவர், உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழுவில் நேற்று இருந்துள்ளார். அவர் முன்பாக வழக்கு எடுத்துக் கொள்ள முடியாது என்று தெரிவிக்கப்பட்டதையடுத்து ஒத்திவைக்கப்பட்டது.

வடக்கு.மாகாண அமைச்சரவையில் பா. டெனீஸ்வரன் தொடர்கின்றார் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த மாதம் 29ஆம் திகதி இடைக்காலக் கட்டளை வழங்கியது. இதற்குத் தடைவிதிக்கக் கோரி வடக்கு மாகாண முதலமைச்சர் தரப்புச் சட்டத்தரணிகளால், உயர் நீதிமன்றத்தில் கடந்த மாதம் 4ஆம் திகதி மேன்முறையீட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

சமர்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் மூலப் பிரதியாக இல்லாமல் உள்ளமையினால், மூலப் பிரதிகளைச் சமர்பிக்குமாறு உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியிருந்தது. நீதிமன்ற அறிவுறுத்தலுக்கு அமைவாக மீளவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதனை விசாரிப்பதா, இல்லையா என்பதை ஆராய்வதற்கு உயர் நீதிமன்றில் இந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாமில் நீதியரசர் தெகிதெனிய இருந்துள்ளார்.

நீதியரசர் தெகிதெனிய கடந்த ஆண்டு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் குழாமில் இருந்தவர். பா.டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்த போது அதனைத் தள்ளுபடி செய்து தெகிதெனிய தலைமையிலான நீதியரசர் குழாம் உத்தரவிட்டிருந்தது. அதனை எதிர்த்து உயர் நீதிமன்றில் பா.டெனீஸ்வரன் மேன்முறையீடு செய்திருந்தார். உயர் நீதிமன்றம், வேறு நீதியரசர்களைக் கொண்ட குழு முன்னிலையில் விசாரிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு உத்தரவிட்டிருந்தது.

வடக்கு முதலமைச்சர், உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள மேன்முறையீட்டு மனுவை விசாரிக்கும் குழுவில் நீதியரசர் தெகிதெனிய நேற்று இருந்துள்ளார். இதனாலேயே வழக்கு 26ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்புட்டுள்ளது.

இதேவேளை, மேன்முறையீட்டு நீதிமன்ற இடைக்காலக் கட்டளை நடைமுறைப்படுத்தப்படாமையினால், வடக்கு மாகாணத்தில் அமைச்சர் சபை செயற்பட முடியாத நிலையில் உள்ளது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக காத்திருப்பதாகத் தெரிவித்தே வடக்கு முதலமைச்சர், இடைக்காலக் கட்டளையைச் செயற்படுத்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (5)

## மாற்று...

சகலருக்கும் நினைவுத் தூபி அமைக்கும் தீர்மானத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 6 உறுப்பினர்களும், ஈ.பி.டி.பி.யின் இரண்டு உறுப்பினர்களும் இணைந்து நிறைவேற்றினர்.

வல்வெட்டித்துறை நகர சபையின் அமர்வு நேற்று இடம்பெற்றது. இந்த அமர்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் பொன்னம்பலம் சிவஞானசுந்தரம் தீர்மானத்தை முன்வைத்தார். 'விடுதலைக்காகப் போராடிய அனைத்து இயக்கங்களின் போராளிகள், படையினராலும் இனவெறியாளர்களாலும் கொல்லப்பட்ட ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் நினைவாகவும் ஓர் நினைவுத் தூபி அமைக்கவேண்டும். குமரப்பா புலேந்திரன் உள்பட 12 மாவீரர்கள் நினைவுத் தூபியை முதலில் கட்டி முடிக்க வேண்டும். அதன் பின்னர் மற்றைய நினைவுத் தூபியைக் கட்ட வேண்டும்' என்ற தீர்மானத்தை முன்மொழிந்தார்.

சபையின் கடந்த அமர்விலும் இதே தீர்மானம் முன்மொழியப்பட்டு அது தோற்கடிக்கப்பட்டிருந்தது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால், குமரப்பா புலேந்திரன் உள்ளிட்ட 12 வேங்கைகளுக்கு மாத்திரம் நினைவுத் தூபி அமைக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

கடந்த அமர்வில் தோற்கடிக்கப்பட்ட தீர்மானம் மீளவும் சபைக்கு கொண்டு வரப்படுவதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். தோற்கடிக்கப்பட்ட தீர்மானத்தில், திருத்தங்கள் மேற்கொண்டு நான்கு உறுப்பினர்கள் கையெழுத்திட்டால் அந்தத் தீர்மானத்தை மீளவும் சபைக்கு கொண்டு வரமுடியும் என்று தவிசாளர் தெரிவித்தார். தீர்மானம் தொடர்பில் உறுப்பினர்களின் கருத்துக் கேட்கப்பட்டது.

இயக்கம் இருந்தால் இவ்வாறு ஒரு தீர்மானம் கொண்டு வருவீர்களா? அது இயக்கத்துக்குரிய புனிதமான இடம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் கந்தசாமி சதீஸ் தெரிவித்தார். சுயேச்சைக் குழு உறுப்பினர் கணேசமூர்த்தி கஜன், இலங்கை - இந்திய கூட்டுச் சதியால் கொல்லப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் வீரர்களுக்கு மாத்திரமே அங்கு தூபிஅமைக்கப்பட வேண்டும். அங்கு மாற்றுக் கட்சிகள், இயக்கங்களை நினைவுகூர அனுமதிக்க முடியாது. அவ்வாறு ஏனையோருக்கு தூபி அமைக்கப்படுவதன் ஊடாக, குமரப்பா புலேந்திரன் உள்ளிட்ட 12 வேங்கைகளின் தூபியை - வரலாற்றுச் சின்னத்தை அழிக்கும் செயற்பாடாகவே பார்க்கவேண்டியிருக்கும் என்று சுட்டிக்காட்டினார்.

சபையில் குழப்பநிலைமை தோன்றியது. தவிசாளர் தீர்மானம் மீது வாக்கெடுப்பு நடத்தினார். தீர்மானத்துக்கு ஆதரவாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் 6பேரும், ஈ.பி.டி.பியின் இரண்டு உறுப்பினர்களும் வாக்களித்தனர். (கடந்த அமர்வில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள், கூட்டமைப்பின் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்திருந்தனர்.) சுயேச்சைக் குழு உறுப்பினர்கள் 4பேர், தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் ஒருவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் க.சதீஸ் ஆகியோர் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஒருவர் தீர்மானம் விவாதிக்கும் போது சபையில் இருந்து அதனை எதிர்த்திருந்தார். அலைபேசி அழைப்பு வந்ததும், வாக்கெடுப்பில் பங்கேற்காமல் வெளியேறினார்.

கூட்டமைப்பின் தீர்மானம் ஒரு மேலதிக வாக்கினால் நிறைவேறியது. இதனையடுத்து வாக்களிப்பை எதிர்த்த 7 உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தனர். அடுத்த அமர்வை நடத்த விடமாட்டோம். சபையை முடக்குவோம். மக்களை அணிதிரட்டிப் போராட்டம் நடத்துவோம் என்று தெரிவித்தனர். (5,26)

## காத்திருந்து...

பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். போர் முடிந்த பின்னரும் மக்கள் மீளக்குடியமர்த்தப்படவில்லை.

காணிகளை விடுவிக்குமாறு கோரி மக்கள் கடந்த ஆண்டு மார்ச் 23ஆம் திகதி முதல் தொடர் போராட்டங்களை முன்னெடுத்தனர். 38 நாள்களுக்கு மேலாக அவர்களது போராட்டம் தொடர்ந்தது. கடந்த ஆண்டு



மே மாதம் 3ஆம் திகதி நூறு ஏக்கர் காணி கடற்படையினரின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டது. அந்தக் காணிகளுக்குள் மக்கள் மீளக்குடிய மர்த்தப்படவில்லை.

இந்த நிலையில் நேற்றுக் காலை தமது காணிகளுக்குள் மக்கள் பிரவேசித்தனர். அந்தப் பகுதிகளைத் துப்புரவு செய்யும் நடவடிக்கைளை முன்னெடுத்தனர். தற்காலி கூடாரங்களை அங்கு அமைத்துள்ளனர். முள்ளிக்குளம் பங்குத்தந்தை லோரன்ஸ் லியோ தலைமையில் அருட்தந்தையர்களும் மக்களுக்கு ஆதரவாக அங்கு சென்றிருந்தனர்.

காணிகளைத் துப்புரவு செய்யும் தமது நடவடிக்கைகளுக்கு கடற்படையினர் இடையூறு விளைவிக்கவில்லை என்றும் மக்கள் தெரிவித்தனர். (5,56)

## ஒரு வயது...

காணப்பட்டுள்ளது. வழமைக்கு மாறாக குழந்தைக்கு அதிகமாக வியர்வை வெளியேறியுள்ளது. வாந்தியும் எடுத்த நிலையில் அரை மயக்கம் அடைந்துள்ளது. குழந்தையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர். குழந்தை வரும் வழியிலேயே உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் கூறியுள்ளனர். குழந்தையின் இறப்புக்கு மூளையில் ஏற்பட்ட கிருமித் தொற்றே காரணம்' என்று இறப்பு விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார், இறப்பு விசாரணையை மேற் 'கொண்டார். (5,8)

## ஆவாக்...

கைகளை கருத வேண்டியுள்ளது. ஆவாக் குழுவின் செயற்பாடுகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு சட்டம் ஒழுங்கு அமைச்சும் பொலிஸாரும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

'வடக்கு - கிழக்கில் 100 இராணுவ முகாம்களை அகற்ற நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றன. போரின்போது முன்னணி வகித்த இராணுவத்தினர் பழிவாங்கப்படுகின்றனர். மறுபுறம் விஜயகலா புலிகளை பலப்படுத்துகின்றார். விடுதலைப்புலிகளுக்கு இழப்பீடு வழங்கப்படுகின்றது. புலிகளையும் புலம்பெயர் புலி அமைப்புக்களையும்திருப்திப்படுத்த சிறிசேன-விக்கிரமசிங்க அரசு முன்னெடுக்கும் இராணுவப் பழிவாங்கலை உடனடியாக நிறுத்த வேண்டும்' என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன தெரிவித்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்குப் பதிலளித்து உரையாற்றிய தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததாவது,

இராணுவத்தினரின் எண்ணிக்கை தொடர்பிலும் முகாம்கள் தொடர்பிலும் நாம் எந்தவொரு தீர்மானத்தையும் எடுப்பதில்லை. இராணுவமே அதற்கான தீர்மானங்களை எடுக்கின்றது. இந்த விவகாரங்களில் நானோ அல்லது அரச தலைவரோ தலையிடுவதில்லை. இராணுவப் பதவி வகைகளான ஜெனரல், கேர்ணல், மேஜர் போன்ற பதவித் தரங்களை நாம் குறைக்கவில்லை. இராணுவ முகாம்களை அதிகரிப்பதா? அல்லது குறைப்பதா? என்பதனை இராணுவ நிர்வாகமே தீர்மானிக்க வேண்டும். இராணுவம் முன்வைக்கும் யோசனைகளை நாம் நடைமுறைப்படுத்துகின்றோம். போருக்குப் பின்னர் முகாம்கள் குறைக்கப்படுவது சாதாரண விடயமாகும்.

இராணுவத்துக்காக ஒதுக்கீடு செய்யும் நிதியில் மூலதனச் செலவாக இராணுவத் தலைமையகத்துக்கான புதிய கட்டடத்துக்கே அதிகளவு செலவிடப்படுகின்றது. பழைய இராணுவத் தலைமையகத்துக்கான காணிகள் ஏன் விற்கப்பட்டது. அதன் காரணமாகவே வீணாக புதிய கட்டடத்துக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது - என்றார். (5,61)

## தேசிய...

காப்புக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை. இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் தினேஸ் குணவர்த்தன எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராணுவத்தினர் படையணிகளில் இருந்து மட்டுப்படுத்தப்படுகின்றமை, முகாம்களுக்கு ஏற்ற வகையில் படையணிகளை கட்டுப்படுத்துவது என்பன அரசு எடுக்கும் தீர்மானமோ அல்லது அரச தலைவர் தலைமை அமைச்சர் எடுக்கும் தனிப்பட்ட தீர்மானமோ அல்ல. இந்தத் திட்டங்கள் அனைத்துமே இராணுவத்தின் தனிப்பட்ட, அவர்களின் கட்டமைப்பின் கீழ் முன்னெடுக்கும் தீர்மானங்களாகும். இதனைத் தெளிவுபடுத்தியே இராணுவத் தளபதி பாதுகாப்பு அமைச்சுக்கு கடிதம் மூலமாகத் தெரிவித்துள்ளார். இந்த நடவடிக்கைகள் மூலமாக தேசியப் பாதுகாப்புக்கு எந்தப் பாதிப்பும் வரப்போவதில்லை. தேசிய பாதுகாப்பை கேள்விக்குட்படுத்தி நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என்று இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

தலைமை அமைச்சரோ அல்லது அரச தலைவரோ இராணுவத் தலையீடுகளைச் செய்து வடக்கின் தேசியப் பாதுகாப்பை பலவீனப்படுத்தும் எந்த நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை. இராணுவத்தை பழிவாங்கும் எந்தத் தேவையும் அரசுக்கு இருந்ததில்லை. வடக்கில் முகாம்களை அகற்ற வேண்டும் என்ற கட்டளைகளை நாம் பிறப்பிக்கவும் இல்லை - என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த சபை முதல்வர் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, நாம் இராணுவத்தைப் பழிவாங்கவில்லை. ஆனால் இராணுவதைப் பழிவாங்குவதாக கூச்சலிடும் மகிந்த அணியினரே அவர்களின் ஆட்சியில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை தரையில் இழுத்துச் சென்று சிறையில் அடைத்தனர். இன்று எம்மைப் பார்த்து இராணுவ தண்டிப்புக் குறித்துப் பேசுகின்றனர் - என்றார். (5,61)

## கல்மடுக்...

கல்மடுக் குளத்தில் தொழிலுக்குச் செல்வதாகக் கூறி நேற்றுமுன்தினம் புறப்பட்டுச் சென்றவர் என்றும், அவர் மாலை வரையில் வீடு திரும்பாமையினால் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அவர் உயிரிழந்த நிலையில் சடலமாக நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளார். (5,35)

## நிபுணர்...

கேற்றிருந்தது. புதிய அரமைப்புக்கான வரைவு முன்மொழிவைச் சமர்பிக்குமாறு வழிநடத்தல் குழு கோரியிருந்தது.

இரண்டு மாத இடைவெளியின் பின்னர் வழிநடத்தல் குழு நேற்றுக் கூடியது. நாடாளுமன்றக் கட்டிடத் தொகுதியில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடிய நேற்றைய கூட்டத்தில் வழிநடத்தல் குழுவின் உறுப்பினர்கள் பங்கேற்றுள்ளனர்.

நிபுணர் குழுவினரால் 3 ஆவணங்கள் வழிநடத்தல் குழுவுக்குச் சமர்பிக்கப்பட்டது. வழிநடத்தல் குழு கோரிய வடிவில் அந்த ஆவணங்கள் இல்லை என்று நிபுணர் குழுவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசமைப்பு வரைவின் சில கூறுகள் தொடர்பில் கட்சிகள் எடுத்துள்ள நிலைப்பாட்டை, நிபுணர் குழு சமர்பித்த முதல் வரைவு பிரதிபலிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க, மகிந்த அணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் தினேஸ் குணவர்த்தன ஆகியோர் அந்தக் கருத்தை முன்வைத்துள்ளனர். நாட்டின் தன்மை உள்ளிட்ட விடயங்களில் தாம் குறிப்பிட்ட நிலைப்பாட்டு வரைவு நகலில் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். இந்தக் கருத்தை வழிநடத்தல் குழுவின் ஏனைய உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இதனையடுத்து அவற்றைச் சீர் செய்வதற்கு தமக்கு இருவார கால அவகாசம் தேவை என்று நிபுணர் குழுவினர் தெரிவித்துள்ளனர். இரண்டு வார கால அவகாசம் வழிநடத்தல் குழுவால் வழங்கப்பட்டுள்ளது. (5)

# அபிவிருத்திக் கோட்பாடுகளும் நடைமுறைகளும்

பிருந்தா

சமூகவியல் என்பது சமூகம் தொடர்பான அனைத்து அம்சங்களையும் பற்றிக் கலந்துரையாடுகின்ற ஒரு கற்கைப் புலமாகும். சமூகமானது ஒரு முன்னேற்றத்தை நோக்கிச் செல்வதற்கு அபிவிருத்தி என்பது இன்றியமையாததாகும். அபிவிருத்தி என்பது இன்று எல்லாத் துறைகளிலும் பயன்படுத்தப்பட்டு வந்தாலும் சமூகவியலில் முக்கியமானதாகவும், தனித்துவமானதாகவும் காணப்படுகின்றது. சமூகவியலில் அபிவிருத்தியானது, 'முன்னேற்றம், வளர்ச்சி, படிமலர்ச்சி' எனும் எண்ணக்கருக்களுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது.

**தனிமனித அபிவிருத்தி**

சமூகவியலில் அபிவிருத்தியானது 1960 ஆம் ஆண்டு காலப் பகுதி வரையில் வளர்ச்சி என்று பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமையை அவதானிக்கலாம். சமூகங்களும், கலாசாரங்களும் எதிர்காலத்தில் வளர்ச்சியடைந்து செல்லலாம். எனவே மாற்றம் என்பது இயல்பானது. சமூக, கலாசார துறைகளில் ஏற்படுகின்ற அபிவிருத்தி என்பது வெறும் வளர்ச்சியை மாத்திரம் குறிப்பதன்று. அது உள்ளார்ந்த, நேர்நிலையான, நிலைபேறான விருத்தி நிலைகளை உள்ளடக்குவதாகக் காணப்படுகின்றது. தனிமனித அபிவிருத்தியானது சூழலில் காணப்படுகின்ற பொருளாதாரம் (உணவு, வருமானம், செத்து), பாதுகாப்பு, அரசியல் உரிமைகள், கௌரவம் மற்றும் கல்வி முதலான அம்சங்கள் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளதாகவும், இவற்றின் மூலமாகவே அபிவிருத்தி அடையப்படுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது. சமூகவியவில் அபிவிருத்தி தொடர்பான சிந்தனைகளை முன்வைத்தவர்களில், 'கொவ்லேற், குன்னர் மிர்டால், ஹேஸ்மன், ஜஸ்டின் டயஸ், பாஸ்டர்' முதலானவர்கள் முக்கியமானவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

**வரைவிலக்கணம்**

'கொவ்லேற்' (1931-2006) என்பவர் அபிவிருத்தியை திட்டமிடல், நடைமுறைப்படுத்துதல் எனும் அடிப்படையிலேயே முன்வைக்கின்றார். அபிவிருத்தியானது "சமூகத்தின் தேவைகளையும், விடுதலையையும் பூரணமாக நிறைவு செய்வது ஆகும்" என்கின்றார். அபிவிருத்தியின் இலக்கானது மூன்று கூறுகளில் தங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிடுகின்றார். அதாவது வாழ்தலுக்கான வாழ்வாதாரம், சுயமரியாதை, சுதந்திரம் என்பனவே அவையாகும். இவ்வடிப்படையில் தான் அபிவிருத்தி என்பதனை வரையறை செய்கின்றார்.

'குன்னர் மிர்டால்' (1898-1987) பல்துறை சார்ந்த அறிவியலாளராவார். பணம் மற்றும் பொருளாதாரம் சார்ந்து பல ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். இவர் அபிவிருத்தி என்பது, "முழுச்சமுதாய அமைப்புக்களும் முன்னேற்றத்தை நோக்கிச் செல்வதும், சமூகத் தேவைகள் பூரணமாக நிறைவு செய்தலும், வளர்ச்சியடைதலுமாகும்" எனக் குறிப்பிடுகின்றார்.

"ஹேஸ்மன்" என்பவர் அபிவிருத்தி என்பது, "பொருளாதாரத் துறையில் மாத்திரமன்று, பொருளாதாரத் துறையுடன் இணைந்து அந்த நாட்டினுடைய அரசியல், சமூக, கலாசார துறைகளிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்துதலே ஆகும்" எனக் குறிப்பிடுகின்றார்.

'ஜஸ்டின் டயஸ்' என்பவர், "பொருளாதார வளர்ச்சியும், மனித நலவுரிமைகளும் ஒன்றிணைந்து செயற்படுகின்ற போதே அபிவிருத்தி ஏற்படும்" என்கின்றார். இவ்வாறான அறிஞர்களைத் தவிர சமூக நிறுவனங்களும் அபிவிருத்தி தொடர்பாக தமது பிரகடனங்களை வெளியிட்டுள்ளன. அந்த வகையில் ஐக்கிய நாடுகள் அமைப்பு அபிவிருத்தி தொடர்பாகக் குறிப்பிடுகின்ற போது, "பொருளாதார, சமூக இணைப்புக்களின் கூட்டு மற்றும் உலக மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுதல், உற்பத்தியை வினைத்திற னடையச் செய்தல், சமூகத்தில் சமநிலையை ஏற்படுத்துவதற்காக செல்வம், வருவாய்களைச் சமமாக பகிரர்தல் முதலான வற்றை உள்ளடக்கியதே ஆகும்" என வலியுறுத்துகின்றது.

யுனஸ்கோ அபிவிருத்தி தொடர்பாகக் குறிப்பிடுகையில், "பொருளாதாரமும், சனத்தொகையும் மட்டுமின்றி சமூகம், கலாசாரம் முதலானவற்றை இணைத்துக் கொண்டதும், அதன் மாறுதல்களையும், வளர்ச்சிகளையும் உள்ளடக்கிய செயற்பாடுகள் தான்" எனக் குறிப்பிடுகிறது. இவ்வாறாக சமூகவியலில் அபிவிருத்தியானது சமூகத்தினுடைய முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டே வரையறை செய்யப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**சமூகவியலில் அபிவிருத்தி பற்றிய கோட்பாடுகள்**

கோட்பாடு என்பது தோற்றப்பாடு தொடர்பான பொதுமையாக்கப்பட்ட உண்மைகளின் தொகுப்பாகும். கோட்பாடுகள் பல்துறை சார்ந்து காணப்படுகின்றன. சமூகவியவிலும் பல்வேறு கோட்பாடுகள் காணப்படுகின்றன. இவற்றில் அபிவிருத்தி தொடர்பான கோட்பாடுகள் முக்கியமானவையாகக் காணப்படுகின்றன. அந்தவகையில் தங்கியிருத்தல் கோட்பாடு (Dependency theory), நவீனத்துவக் கோட்பாடு, மார்க்சிய கோட்பாடு, பரவற்கோட்பாடு (Diffusion theory) முதலானவை குறிப்பிடத்தக்க கோட்பாடுகளாகக் காணப்படுகின்றன.

**தங்கியிருத்தல் கோட்பாடு**

தங்கியிருத்தல் கோட்பாடானது கைத்தொழிலில் விருத்தியுறாத நாடுகள் கைத்தொழிலில் விருத்தியுற்ற நாடுகளில் தங்கியிருத்தலை முதலாளித்துவமானது ஏற்படுத்தியதாகக் குறிப்பிடுகின்றது. அதாவது குறைவிருத்தி நாடுகள் வறுமையுடையதாகக் காணப்படுவதற்கு காலணித்துவ ஆதிக்கம் காரணமாக அமைந்ததாகவும் இதனால் இந்த நாடுகள் விருத்தியுற்ற நாடுகளில் தங்கியிருக்க வேண்டிய நிலையில் காணப்படுவதாகவும் இக்கோட்பாடு வலியுறுத்துகின்றது. அத்துடன் ஒரு பிராந்தியத்தின் அபிவிருத்தியானது மற்றைய பிராந்தியத்தின் அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்துவதாகக் காணப்படுவதாக இந்தக்கோட்பாடு குறிப்பிடு கின்றது.

மைய நாடுகள்(ஐரோப்பிய) எல்லை நாடுகளின் (கீழைத்தேய) சமூகங்களின் மீது அரசியல், சமூக, பொருளாதார, கலாசார அம்சங்களின் மீது தாக்கத்தைச் செலுத்துவதன் மூலமாக எல்லை நாடுகளைச் சார்ந்திருக்கச் செய்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறான விடயங்களை இக்கோட்பாடு கொண்டிருந்தாலும் இவை பற்றிய விமர்சனங்களும் காணப்படுகின்றன. அதாவது சில மைய நாடுகள் விருத்தியடைவதில் பின்தங்கிக் காணப்படுவதுடன் சில கீழைத்தேய நாடுகள் விருத்தியடைந்து காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக ஜப்பான், சீனா, சிங்கப்பூர் முதலான வற்றைக் குறிப்பிடலாம். அத்துடன் இக்கோட்பாடானது குறைவிருத்தியின் உள்நிலைக் காரணிகளை ஆராயாது, சமூகத்துக்கு அப்பாலுள்ள வெளிநிலைக் காரணிகளைக் கருத்தில் கொள்கின்றமை பற்றிய விமர்சனங்களையும் நாம் கவனத்தில் எடுக்கவேண்டிய தேவை காணப்படுகின்றது.

**நவீனத்துவக் கோட்பாடு**

நவீனத்துவக் கோட்பாடு தொடர்பாக நோக்குகின்ற போது இக்கோட்பாடானது இரு பெரும் போர்களைத் தொடர்ந்து மனித குலத்தின் எதிர்காலம் தொடர்பான நம்பிக்கை நிறைந்த எண்ணங்களைக் கொண்டமைந்ததாகக் காணப்படுகின்றது. இது பத்தொன்பதாம் நூற்றாண்டு (1950 - 1980) காலப்பகுதியில் வளர்ச்சியடைந்ததாகும். இக்கோட்பாடானது சமூக உறுப்பினர்களது நவீன விழுமியங்களை மையப்படுத்தியதாகக் காணப்படுகின்றது. அத்துடன் அபிவிருத்தியில் ஏற்படுகின்ற முன்னேற்றங்களையும் மறுமதிப்பீடு செய்கின்றது. புரட்சிகர சிந்தனைகளை உள்ளடக்கியது. ஏனெனில் பாரம்பரிய சமூகம் மிகத் துரிதமாக நவீனத்துவம் அடைந்தமையை வெளிப்படுத்துகின்றது. 'w.w.Rostow' என்பவர் நவீன அபிவிருத்தியானது நான்கு கட்டங்களில் வளர்ச்சியடைவதாகக் குறிப்பிடுகின்றார். அதாவது, 'மூலவளம், சனத்தொகை, தொழில்நுட்பம், மூலதனம்' முதலானவை ஒன்றிணையும் போது அபிவிருத்தி ஏற்படுவதாகக் குறிப்பிடுகின்றார். இது தொடர்பான கோட்பாட்டாளர்களில் 'எமைல் டர்க்கெம்' முக்கியமானவராக திகழ்கிறார். இவர் ஆரம்ப கால புராதன சமூகம் இன்றைய சிக்கலான சமூகமாக மாற்றம் பெறுவதற்கு அபிவிருத்தி நிலமையே காரணமாக அமைந்தது என்கிறார். இவற்றுடன் உயிரியல் கூட்டொருமைப்பாடு (Organical Solidarity), இயந்திரவியல் கூட்டொருமைப்பாடு (Mechanical Solidarity) என்ற அடிப்படையில் சமூகத்தினுடைய கூட்டொருமைப்பாடு வளர்ச்சியடைந்ததாவும், இது அபிவிருத்திக்கு இட்டுச் சென்றதாகவும் குறிப்பிடுகின்றார். இவ்வாறான விடயங்களை உள்ளடக்கியதாக இக்கோட்பாடு காணப்படுகின்றது.

**மார்க்சியக் கோட்பாடு**

மார்க்சியக் கோட்பாடானது கால் மார்க்ஸ்சினால் முன்வைக்கப்பட்டதாகும். இவரது சிந்தனையானது வரலாற்றுப் பொருள் முதல் வாத அணுகுமுறையிலிருந்தே வெளிப்படுத்தப்பட்டது. இது சமூக மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. உற்பத்தி உறவுதான் சமூக உறவு எனவும், சமூகத்தில் அபிவிருத்தி என்பது சிக்கலான வழிமுறை என்றும் குறிப்பிடுகின்றார். இவர் ஐந்து வகையான சமூகத்தை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தியடைந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

அதாவது, 'பூர்வீகப் பொதுவுடமைச் சமூகம், ஆண்டான் அடிமைச் சமூகம், நிலபிரபுத்துவச் சமூகம், முதலாளித்துவச் சமூகம், சமத்துவச் சமூகம்' என சமூகங்கள் அபிவிருத்தியடைந்ததாகவும்; குறிப்பிடுகின்றார். பொருளாதார சக்தியே சமூக அபிவிருத்தியை ஏற்படுத்துவதாகவும் குறிப்பிடுகின்றார். பொருளாதாரத்தின் உட்கட்டமைப்பு வடிவம் தான் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவது என்கிறார். இவ்வாறான சிந்தனைகளை முன்வைத்தாலும் சில விமர்சனங்களும் காணப்படுகின்றது. அதாவது சுரண்டலால் மாத்திரம் குறைவிருத்தி ஏற்படும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என விமர்சிக்கப்படுகின்றது.

**பரவற் கோட்பாடு**

பரவற் கோட்பாட்டை 'மக்ஸ் வேபர்' மற்றும் 'எமில் டர்கைம்' முதலானவர்கள் முன்வைத்தனர். வேபர் அபிவிருத்தி என்பது மதத்தின் பால் கொண்ட இருப்பின் காரணமாகவே சமூக அபிவிருத்தி ஏற்படும் என்கிறார். இந்தக் கருத்தை 'முதலாளித்தவத்தின் உயிர்ப்பும் புரட்டஸ்தாந்து வாதமும்' எனும் நூலின் வாயிலாக வெளிப்படுத்துகின்றார். அதாவது இந்த நூலிலுள்ள கல்வினிசம் எனும் கொள்கையில் கடின உழைப்பு மூலமாகவே அதிக இலாபம் பெறலாம் எனவும், அற வழியில் ஈட்டும் செல்வமே நீடித்து காணப்படும் எனவும் வலியுறுத்தப்படுகின்றது. மேற்குலக நாடுகளில் முதலாளித்துவம் வளர்ச்சியடைய மதநம்பிக்கையே காரணம் எனவும் இதன் மூலமாகவே அபிவிருத்தி ஏற்பட்டதாகவும் குறிப்பிடு கின்றார்.

புரட்டஸ்தாந்து மதம் கடைப்பிடித்த இறுக்கமான கொள்கைகளால் மூலதனம் பரவலடைந்ததாகவும், அது அபிவிருத்திக்குக் காரணமானதாகவும் குறிப்பிடப்படுகின்றது. மரபான சமூகத்தில் வாழ்ந்தவர்கள் வாழ்வதற்காக மாத்திரமே உழைத்தனர். ஆனால் நவீன சமூகத்தில் மேலதிக வருமானம் பெறுதல் முக்கியமானதாகக் காணப்படுவதாக இவர் குறிப்பிடுகின்றார். இவ்வாறு பொருளாதாரப் பரவல் ஏற்பட்டு சமூகமானது அபிவிருத்தியடைந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. இவ்வாறான விடயங்களைக் கொண்டதாக் இக்கோட்பாடு காணப்படுகின்றது.

**சமூக அபிவிருத்தி வேண்டும்**

ஆகவே சமூகவியலில் அபிவிருத்தியானது முக்கியமான எண்ணக்கருவாகக் காணப்படுவதுடன், சமூக மாற்றத்தை ஏற்படுத்துகின்ற ஒன்றாகவும் நோக்கப்படுகின்றது. சமூகத்தில் அபிவிருத்தியானது பொருளாதாரம் என்பதில் மாத்திரம் தங்கியில்லாமல் அனைத்துத் துறைகளுடனும் சார்ந்து காணப்படுகின்றது. எடுத்தக்காட்டாக கல்வியில் ஏற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தியானது முழுச் சமூகத்திலும் முன்னேற்றத்தை ஏற்படுத்துகின்றது. எனவே அபிவிருத்தியானது பொருளாதார வளர்ச்சி மற்றும் மனிதநல உரிமைகள் ஒன்றிணைகின்ற போது ஏற்படுத்துகின்றன.

இது தொடர்பாக 'கொவ்லேற், குன்னர் மிர்டால், ஹேஸ்மன், ஜஸ்டின் டயஸ், பாஸ்டர்' முதலானவர்கள் தமது வரையறைகளை முன்வைத்துள்ளனர். இது தொடர்பில் முன்வை க்கப்பட்ட கோட்பாடுகளாக, 'தங்கியிருத்தல் கோட்பாடு, நவீனத்துவக் கோட்பாடு, மார்க்சிய கோட்பாடு, பரவற்கோட்பாடு' முதலானவை காணப்படுகின்றன. தற்கால நடைமுறையில் சமூகவியலில் அபிவிருத்தி என்பது ஒற்றைப் பரிணாமமுடையதாக அன்றி பல்பரிணாமம் உடையதாக விளங்குகி றது. குறிப்பாக, 'உலகமயமாதல், பின்நவீனத்துவம், பெண்ணியம், பின் காலனித்துவம் சார்ந்த புதிய பார்வை' போன்ற பல்பரிணாம வெளிப்பாடுகளாக விமர்சிக்கப்படுகின்றன. வியாக்கியானம் பெறுகின்றன.


## கடைகளுடன் கூடிய வீடுகள் விற்பனைக்கு

K.K.S வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் எனும் இடத்தில் 4 கடைகளுடன் சேர்ந்த 3 வீடுகள் விற்பனைக்குண்டு.
(இரண்டு மாடி வீடுகள் உட்பட)

தொடர்பு - 077 271 1267, 021 205 4446,
Viber/ Whatsapp - 0044 74294 26855



## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 09.06.1956 | இறப்பு 18.07.2018


எமது நிறுவனத்தின் நீண்டகால ஊழியரான

**முருகேசு சிவபாலன்**

அவர்கள் நேற்று (18.07.2018) புதன்கிழமை
காலமாகிவிட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருறும்
அவரின் குடும்பத்தினர் அனைவருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்
கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

**உரிமையாளரும் ஊழியர்களும்**
குகன் எரிபொருள் நிரப்பு நிலையம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

# கோபத்தை கட்டுபடுத்த இலகுவான வழிகள்



கோபம் என்பது மனித உணர்ச்சிகளில் ஒன்று. ஆனால் அதை கட்டுபாட்டுக்குள் வைத்துக் கொள்ள வேண்டும். கோபத்தை கட்டுபடுத்துவதைவிட, சரியாகக் கையாளத் தெரிந்திருக்க வேண்டும். அப்படிக் கையாளத் தெரியாவிட்டால் எமது தொழில், உறவுகள், வாழ்க்கை என அனைத்தையும் சீரழித்துவிடும்.

உங்களுக்கு கோபம் வந்தால் எப்படிக் கையாள வேண்டும் என தெரிந்து கொள்ளத் தொடர்ந்து படியுங்கள்.

1. தொடர்ந்து இயற்கை உணவுகளை, இயன்ற வரை சாப்பிட்டுப் பழக கோபம் படிப்படியாகக் குறையும்.
2. தியானம், சாந்தி ஆசனம் செய்ய கோபம் குறையும்.
3. ஒன்று முதல் பத்து வரை எண்ணிடலாம்
4. தண்ணீர் குடித்திட கோபம் தணியும்.
5. கோபத்திற்கான காரணத்தை ஒரு பேப்பரில் வரிசையாகப் பட்டியல் இட்டு எழுத கோபம் குறையும்.
6. பழச்சாறுகள், இயற்கை உணவுச் சாறுகள் குடித்து கோபத்தை குறைக்கலாம்.
7. கோபத்தின் போது முகம் விகாரமாகி, அன்பு, சாந்தம் குறைவதை கண்ணாடி மூலம் உணர்ந்து குறைத்தல்.
8. கோபத்திற்கு காரணமாக சொல், செயல், எண்ணத்தில் இருந்து வேறு செயல் செய்தல்.
9. கோபப்படும் இடம், நபரிடம் இருந்து விலகிச் செல்லலாம்.
10. வயிறு ஈரத்துணிப் பட்டி, கண் பட்டி, நெற்றிப்பட்டி போடலாம்.
11. நீர்வீழ்ச்சி, ஷவர் பாத், தொட்டிக் குளியல் செய்ய கோபம் குறையும்.
12. கோபத்தை இறைவனிடம் சமர்ப்பிக்கலாம்.
13. கோப உணர்ச்சிகள் அதிக குருதி அழுத்தம், கண் சிவப்பு அமில சுரப்பு, அல்சரை உண்டு பண்ணும் & மிருக குணத்தை உச்ச நிலைக்கு உயர்த்திடும்.

ஒரு நொடி கோபப்பட்டால் 60 விநாடிகள் சந்தோஷத்தை இழக்கிறோம் என்பதை எண்ணி பார்க்க வேண்டும். எனவே, பிறரின் மேல் நம்பிக்கை வைத்து கோபத்தை வெற்றி கொள்ளுங்கள். பிறருடன் நட்பாய் இருங்கள். மகிழ்ச்சியாய் இருங்கள்

# மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| கத்தரி | 120 | 80 | 80 | 140 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 120 |
| மரவள்ளி | 40 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 220 | 150 | 160 | 200 |
| பாகல் | 280 | 160 | 250 | 240 |
| க.கிழங்கு | 100 | 100 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 120 | 100 | 110 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 150 | 160 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 |
| தக்காளி | 280 | 180 | 160 | 260 |
| வாழைக்காய் | 40 | 50 | 80 | 50 |
| கீரை | 40 | 30 | 15 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 40 | 40 |
| ப.மிளகாய் | 200 | 500 | 500 | 300 |
| புடோல் | 120 | 100 | 80 | 120 |
| கோவா | 140 | 100 | 160 | 160 |
| வெண்டி | 100 | 80 | 100 | 100 |
| போஞ்சி | 300 | 250 | 250 | 260 |
| லீக்ஸ் | 240 | 280 | 200 | 280 |
| தேங்காய் | 70 | 70 | 70 | 70 |
| உ.கிழங்கு | 100 | 120 | 100 | 130 |
| தேசிக்காய் | 80 | 40 | 40 | 120 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 20 |
| கறிமிளகாய் | 280 | 200 | 350 | 240 |
| கரட் | 280 | 180 | 200 | 360 |
| முருங்கைக்காய் | 300 | 500 | 200 | 300 |

# வெந்தயம்



பழங்கால மருத்துவ முறையிலும் வெந்தயம் முக்கியப் பங்கு வகிக்கிறது. அதனுடைய விதைகள், இலை எல்லாமே மிகவும் பயனுள்ளதாகும். சாதரண விதைகளை விட அவற்றை முளை கட்டிச் சாப்பிடுவதால் இரட்டிப்பு பலன்கள் கிடைக்கிறது. முதல் நாள் இரவில் ஒரு ஈரத் துணியில் வெந்தயத்தை போட்டு கட்டி வைத்திட வேண்டும். மறு நாள் காலை எடுத்துப் பார்த்தால் வெந்தயத்தில் முளைவிட்டிருக்கும். இவற்றை அப்படியே கூட எடுத்துச்சாப்பிடலாம். இதனால் ஏராளமான நன்மைகள் நமக்கு கிடைக்கிறது.

**சத்துக்கள்**

முளைகட்டிய வெந்தயத்தில் அதிகப்படியான விற்றமின் சி, ப்ரோட்டீன், நியாசின், பொட்டாசியம், இரும்புச்சத்து மற்றும் ஆல்கலாய்ட்ஸ் நிறைந்திருக்கும். அதோடு ஈஸ்ட்ரோஜனாக கருதப்படும் டயோஸ்ஜெனினும் அதிகமாக காணப்படுகிறது.

**சர்க்கரை நோயைக் குறைக்கும்**

சர்க்கரை நோயாளிகளுக்கு முளைகட்டிய வெந்தயம் மிகப் பெரும்கிய வரப்பிரசாதமாக அமைந்திடும். வெந்தயத்தில் இருக்கும் மூலக்கூறுகளால் உடலில் இன்ஸுலின் சுரப்பு அதிகரிக்கும் அதோடு குருதியில் சர்க்கரை அளவு அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளும். குறிப்பாக இரண்டாம் வகை சர்க்கரை நோய் உள்ளவர்கள் இதனைச் சாப்பிடலாம்.

தொடர்ந்து 24 வாரங்கள் வரை முளைகட்டிய வெந்தயத்தை சாப்பிட்டு வர குருதியில் சர்க்கரை அளவு குறைந்திடும். வெந்தயத்தில் இருக்கும் அமினோ அமிலம் இன்சுலின் சுரப்பைத் துரிதப்படுத்துகிறது

**இதயம்**

முளைகட்டிய வெந்தயம் இதயத்துக்கு மிகவும் நல்லது. இதனை தினமும் சாப்பிட்டு வந்தால் இதயம் தொடர்பான பிரச்சினைகளை தவிர்த்திடலாம். இதனைத் தொடர்ந்து சாப்பிடுவதால் உடலில் கொலஸ்ட்ரால் சேராமல் பார்த்துக் கொள்ளும். இதனால் இதயத்தின் செயல்பாட்டில் எவ்வித இடர்பாடுமின்றி தொடரும். அதோடு இதிலிருக்கும் பொட்டாசியம் எமது உடலில் இருக்கும் சோடியம் அளவைச் சீராக்கும். இதனால் குருதி அழுத்தம் முறையாகப் பராமரிக்கப்படும்.

**வைரஸ்**

முளைகட்டிய வெந்தயம் வைரஸ் தொற்று ஏற்படாமல் பாதுகாக்கும். குறிப்பாக காய்ச்சல், தலைவலி போன்றவற்றை உடனடியாக குணப்படுத்தக்கூடிய ஆற்றல் கொண்டுள்ளது

**செரிமானம்**

ஆரம்ப காலங்களிலிருந்தே வெந்தயத்தை செரிமானம் தொடர்பான மருத்துவத்திற்கே அதிகம் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். முளைகட்டிய வெந்தயத்தில் அதன் பயன்கள் இரட்டிப்பாகக் கிடைக்கும். வயிறு பொருமல், அஜீரணம், வயிற்றுவலி, வயிற்றுப் போக்கு போன்ற பிரச்சினைகள் இருப்பவர்களுக்கு உடனடித் தீர்வு கொடுக்கும்.

**தாய்ப்பால்**

முளைகட்டிய வெந்தயத்தில் galactagogou என்ற சத்து இருக்கிறது. இவை பெண்களுக்கு தாய்ப்பால் சுரப்பை அதிகப்படுத்துகிறது. தாய்ப்பால் கொடுக்கிற பெண்கள் தினமும் ஒரு தேக்கரண்டி அளவில் எடுத்துக் கொள்ளலாம்.

**தொப்பை**

வெந்தயத்தை ஊற வைத்த நீரை குடித்து வந்தாலோ அல்லது முளைகட்டிய வெந்தயத்தை சாப்பிட்டாலோ நல்ல பயன் உண்டு. குறிப்பாக வயிற்றில் அதிகமாக கொழுப்பு சேர்ந்திருப்பவர்கள் தாராளமாக இதனைச் சாப்பிடலாம். முளைகட்டிய வெந்தயத்தில் இருக்கும் மூலக்கூறுகள் தொப்பையை குறைத்திடும்.

**எப்படிச் சாப்பிடலாம் ?**

எத்தகைய உடல் வாகு கொண்டவராக இருந்தாலும் ஒரு நாளைக்கு ஒரு தேக்கரண்டிக்கு மேல் சாப்பிடக்கூடாது. முளைகட்டிய வெந்தயம் காலை உணவுக்கு முன்பாக சாப்பிடுவது மிகவும் நல்லது. அதன் கசப்பு சுவை உங்களுக்கு பிடிக்கவில்லையெனில் உணவுகளில் சேர்த்து சாப்பிடலாம். முளைகட்டிய வெந்தயத்தில் அவ்வளவாக கசப்புத் தெரியாது. குறைந்தது ஒரு மாதம் வரை எடுத்துக் கொண்டால் மட்டுமே சிறந்த பலனை எதிர்ப்பார்க்க முடியும். உணவுகளில் ஏதேனும் ஒவ்வாமை இருந்தால், வேறு ஏதாவது நாட்பட்ட நோய்க்கு மருந்து எடுத்துக் கொண்டிருந்தால் மருத்துவ ஆலோசனை பெறுவது

# கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 800 | 1000 | 1200 | 1000 |
| நண்டு | 600 | 500 | 600 | 500 |
| கணவாய் | 800 | 800 | 1000 | 1000 |
| பாரை | 600 | 600 | 700 | 1100 |
| சுறா | 600 | 900 | 1000 | 1200 |
| சீலா | 500 | 500 | 600 | 400 |
| விளை | 600 | 500 | 600 | 800 |
| முரல் | 400 | 400 | 600 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 400 | 500 | 600 |
| ஒரா | 400 | 500 | 600 | 500 |
| திரளி | 250 | 200 | 300 | 200 |
| நகரை | 250 | 250 | 400 | 250 |
| சூடை | 150 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 300 | 300 | 300 | 400 |
| திருக்கை | 350 | 300 | 500 | 400 |
| மதனம் | 250 | 300 | 300 | – |
| கொய் | 200 | 100 | 100 | 100 |
| பாலை | 250 | 300 | 600 | 300 |
| வாளை | 150 | 300 | 500 | 200 |




# இது புதுசு

ஆண்களுக்கான கைக்கடிகார வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரத்து 400 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 19
வடமாராட்சி கடலோடிகள் ஐக்கிய சமூக சேவைகள் அமைப்பால்நடத்தப்படும்விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 12ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.
படகு ஓட்டப்போட்டி, கட்டுமரம் வலித்தல் போட்டி, நீச்சல் போட்டி ஆகிய கடல்சார் போட்டிகளுடன் இருபாலாருக்குமான சைக்கிள் ஓட்டப் போட்டி, ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி, பெண்களுக்கான கிளித்தட்டுபோட்டி, கூடைப்பந்தாட்டப் போட்டி, ஆண்களுக்கான கால்பந்தாட்டம் மற்றும் இல்ல விளையாட்டுப் போட்டிகள் என்பனவும் இடம்பெறவுள்ளன. மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23)

## ஆட்டம் சமநிலை

யாழ்ப்பாணம், ஜூலை 19
வல்வை சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் நடராசா வைத்தியலிங்கம் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்று சமநிலையில் முடிந்தது.
றெயின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் தீருவில் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ரேவடி விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் கோலெதுவும் பதிவுசெய்யப்படாததை அடுத்து ஆட்டம் சமநிலையானது. (ம-23)

## வெற்றிபெற்றது சிறிஅம்பாள்

யாழ்ப்பாணம், ஜூலை 19
கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சிறி அம்பாள் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிறி அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதியது.
நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணியினரும் தலா இரண்டு கோல்களைப் பதிவு செய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:3 என்ற கோல் கணக்கில் சிறிஅம்பாள் அணி வெற்றிபெற்றது. (ம-23)



# சொந்தத் தொடரில் மகாஜனா சம்பியன்




யாழ்ப்பாணம், ஜூலை 19
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் பிரபல கால்பந்தாட்டப் பயிற்றுநர்: ரி.பி.பத்மநாதன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.
மகாஜனக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் தலா 2 கோல்களைப் பதிவுசெய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத்தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:2 என்ற கோல் கணக்கில் மகாஜனா கிண்ணம் வென்றது. (ம-23)

## றெஜின்போ அசத்தல் ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 19
வல்வை சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் நடராசா வைத்தியலிங்கம் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் றெயின்போ விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
றெஜின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் தீருவில் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து றெயின்போ விளையாட்டுக்கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் றெஜின்போ விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக றெஜின்போ அணியின் ஜோன்சன் தெரிவுசெய்யப்பட்டார். (ம-23)




## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 19

**உதயதாரகையின் கால்பந்துத் தொடர்**

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொற்பதி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக பி அணியை எதிர்த்து தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் செந்தமிழ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாரந்தனை அண்ணா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**வசந்தசிறி வி.க. தாச்சித் தொடர்**

சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வைகறை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சித்திவிநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கண்ணகி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சாந்தை விளையாட்டுக் கழக ஏ அணி மோதவுள்ளது.

**சைனிங்ஸ் வி.க. கால்பந்தாட்டம்**

வல்வை சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் நடராசா வைத்தியலிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வல்வை றெயின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளங்கதிர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சைனிங்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ரேவடி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**திருமகள் சசநி கரப்பந்தாட்டம்**

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 66ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சதீஷ் குமார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து அச்சுவேலியூத் அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சிறுப்பிட்டி கலையொளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## தேசியக் கூடைப்பந்து யாழில் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜ.லை 19
இலங்கை விளையாட்டுத் திணைக்களத்தினால் 44ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடர் யாழ்ப்பாண மாவட்டத்தில் நாளை ஆரம்பமாகிறது.
பழைய பூங்காவில் அமைந்துள்ள யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் கூடைப்பந்தாட்டத் திடல் மற்றும் சென். ஜோன்ஸ் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடல் ஆகியவற்றில் ஆட்டங்கள் இடம்பெறும். (ம-23)



## போராடி வென்றது கரவைச்சுடர் கழகம்

யாழ்ப்பாணம், ஜூலை 19
கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கரவைச்சுடர் விளையாட்டுக் கழக அணி வென்றது.
கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கரவைச்சுடர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். பிலிப்நேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணியினரும் தலா இரண்டு கோல்களைப் பதிவுசெய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:3 என்ற கோல் கணக்கில் கரவைச்சுடர் விளையாட்டுக் கழக அணி வென்றது. (ம-23)



# உலகக்கிண்ணத்தில் நல்லதும் கெட்டதும்

19 வயதான மப்பேவின் அற்புதமான ஆட்டம், பிரேசிலின் நெய்மர் நாடகமாடியதாக எழுந்த குற்றச்சாட்டு, நடப்பு சம்பியன் அந்தஸ்துடன் களமிறங்கிய ஜேர்மனி லீக் சுற்றிலேயே மூட்டை கட்டியமை, நாக் அவுட் சுற்றில் ஆர்ஜென்ரீன, போர்த்துக்கல், ஸ்பெய்ன் வெளியேறியமை, டிகோ மரடோனாவின் கிண்டல் எனப் பரபரப்புக்குப் பஞ்சம் இல்லாமலேயே ரஷ்யாவில் சுமார் ஒருமாத காலம் நடைபெற்று வந்த உலகக் கிண்ணக் கால்பந்துத் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று கோலாகலமாக நிறைவடைந்தது. உலகக்கிண்ணத் திருவிழாவில் நடைபெற்ற நல்ல விஷயங்களும், சில விரும்பத்தகாத விஷயங்களும் குறித்த ஓர் அலசல்.

**புதியவர்கள் சோபிக்கவில்லை**

புதியவர்கள் அறிமுக அணியாக களமிறங்கிய ஐஸ்லாந்து, பனாமா ஆகிய அணிகள் லீக் சுற்றைத் தாண்டவில்லை. எனினும் அந்த அணிகளுக்கு ரசிகர்கள் வழங்கிய ஆதரவு அளப்பரியது. ஐஸ்லாந்து அணியின் ஆட்டங்களைக்காண அந்த நாட்டு மக்கள் பெரும் கூட்டமாகப் படையெடுத்தனர். அதேபோல் உலகக் கிண்ணத் தொடரில் முதன் முறையாக பனாமா நாட்டின் தேசிய கீதம் இசைக்கப்பட்ட போது தொலைக்காட்சி வர்ணணையாளராக இருந்த பனாமாவைச் சேர்ந்தவர் ஆனந்தக் கண்ணீர் சிந்தியமை என்றும் மறக்க முடியாதது.

**விருப்பமான மைதானங்கள்**

12 நகரங்களில் உலகக் கோப்பை போட்டி நடத்தப்பட்டாலும் ரசிகர்கள் அதிகம் விரும்பி வந்து பார்த்த மைதானங்கள் லுஸ்னிக்கி மற்றும் சோச்சிதான். இங்கு நடைபெற்ற அனைத்து ஆட்டங்களின் நுழைவுச் சீட்டுக்களும் விற்றுத் தீர்ந்தன.

ரஷ்ய உலகக் கிண்ணத் தொடரில் ஒட்டுமொத்தமாக 64 ஆட்டங்களில் 4 சிவப்பு அட்டைகள் மட்டுமே வழங்கப்பட்டன. விஏஆர் தொழில்நுட்ப உதவியால் மைதானத்தின் அனைத்து பகுதியிலும் நடைபெற்ற நிகழ்வுகள் கண்காணிக்கப்பட்டதால் முரட்டுத்தனமான ஆட்டத்தை வெளிப்படுத்திவிடக்கூடாது என்பதில் வீரர்கள் தகுந்த எச்சரிக்கையுடன் செயற்பட்டார்கள். நாக் அவுட் சுற்றில் காயம் அடைந்த உருகுவே வீரர் எடிசன் கவானியை, கைத்தாங்கலாக ரொனால்டோ அழைத்துச் சென்று ரசிகர்களின் மனதை வென்றார்.

**ரசிகர்களை ஈர்த்தவர்கள்**

பிரான்ஸின் கிலியான் மப்பே, இங்கிலாந்தின் ஹரிகேன், குரோசியாவின் லுகா மோவிக், இவான் ராகிடிக், பெல்ஜியத்தின் ரோமுலு லூகாகு ஆகியோர் ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தனர். ஏமாற்றியவர்கள் என்று வரிசைப்படுத்தினால் முதலிடம் மெஸ்ஸிக்குத்தான். அடுத்த இடத்தை நெய்மருக்கும், அதன் பின்னர் ராமோஸ், இஸ்கோ என்று வரிசைப் படுத்தலாம்.

**இனவெறி**

ஜேர்மனி அணி லீக் சுற்றுடன் வெளியேறிய நிலையில் அந்த அணி வீரரான மெசட் ஓஸில் இனவெறிக்கு ஆளானார். மெசட் ஓஸில் துருக்கி வம்சாவளியைச் சேர்ந்தவர். மேலும் அவர், துருக்கி அதிபர் எர்டோகனுடன் இணைந்து போட்டோவுக்கு போஸ் கொடுத்ததும் பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளானது. இதே போன்று துருக்கி பாரம்பரியத்தைக் கொண்ட.சுவீடன் வீரர் ஜிம்மி துர்மாஸ், இணையதளங்களில் இன வெறி சர்ச்சைக்கு உள்ளானார்.

**அர்த்தமற்றவைகள்**

செர்பியா அணி 1:2 என்ற கோல் கணக்கில் சுவிற்சர்லாந்திடம் தோல்வியடைந்த ஆட்டத்தில் நடுவராகச் செயல்பட்ட ஜெர்மனியின் பெலிக்ஸ் பிரைச்சை, போர் குற்றங்களை விசாரிக்கும் ஐ.நா. நீதிமன்றத்தின் முன்பு நிறுத்த வேண்டும் என சேர்பிய கால்பந்து அணியின் பயிற்சியாளர் லேடன் கிரஸ்டஜிக் கடுமையாக விமர்சித்தார். இதனால் பிபா அவருக்குத் தண்டம் விதித்தது.

**சர்ச்சை மன்னர் மரடோனா**

ஆர்ஜென்ரீன கால்பந்து அணியின் ஜாம்பவானான டிகோ மரடோனா, மைதானத்தில் புகைப் பிடித்தமை, மற்றும் ரசிகர்களை நோக்கி நடுவிரலை உயர்த்தி அநாகரீகமாக நடந்து கொண்டமை சர்ச்சைகளை ஏற்படுத்தின.

**கொலை மிரட்டல்கள்**

லீக் சுற்றின் போது ஜப்பான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் சிவப்பு அட்டை பெற்ற கார்லோஸ் சான்செஸுக்கு சமூக வலைத்தளங்களில் கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டது. இதுதொடர்பாக கொலம்பிய பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். இது 1994ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் ஓன் கோல் அடித்த கொலம்பியா வீரர் அன்ட்ரஸ் எஸ்கோபார், நாடு திரும்பிய சில நாள்களில் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை கண் முன் கொண்டு வந்தது.


**நெய்மரின் பல்டிகள்**

பிரேசில் அணியின் நட்சத்திர வீரரான நெய்மர் உலகக் கிண்ணத் தொடரில் இரு கோல்கள் மட்டுமே அடித்தார். நாக் அவுட் சுற்றில் மெக்சிக்கோ அணிக்கு எதிரான ஆட்டத்தின் போது நெய்மர், எதிரணி வீரர் காலை தட்டிவிட்டதாகக்கூறி சில அடி தூரத்துக்குடைவ் செய்தபடி உருண்டு சென்று விழுந்தார். இதனால் கடும் விமர்சனங்களைச் சந்தித்தார். காணொலிகளின் மறு பரிசீலனையில் நெய்மர் சம்பளத்துக்கு மேலாக நடித்துள்ளமை தெரியவந்துள்ளது.



## குரோசியாவிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்!

### இனவாத மோதல்களுக்கு எதிராக ஹர்பஜன் சிங் ஆவேசக் கருத்து



"இந்திய நாட்டில் இந்து, முஸ்லிம்கள் இடையே நடக்கும் சண்டையை நிறுத்திவிட்டு, சிறிய நாடான குரோசியா உலகக் கிண்ணத் தொடரில் இறுதியாட்டம் வரையில் முன்னேறியதைப் பார்த்துக் கற்றுக் கொள்ளுங்கள்" என்று கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் சிங் ஆவேசமாகத் தெரிவித்தார்.

50 லட்சத்துக்கும் குறைவான மக்கள் தொகை கொண்டிருக்கும் நாடு குரோசியா. அந்த நாடு உலகக்கிண்ண இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுவிட்டது. ஆனால், 135 கோடி மக்கள் தொகை கொண்டிருக்கும் நாம் இன்னும் இந்து - முஸ்லிம் சண்டையை நடத்திக்கொண்டிருக்கிறோம். நான் என்ன சொல்ல நினைத்தேனோ அதைச் சொல்லிவிட்டேன். நான் நேர்முறையாகவே அனைத்து விடயங்களையும் சொல்லி இருக்கிறேன். என்னுடைய இந்தக் கருத்து மிகப்பெரிய நாடான இந்தியாவில் உள்ள மக்களுக்குச் சிறிய அளவிலாவது பாதிப்பை ஏற்படுத்தும். விளையாட்டை மிகவும் நேசிக்கும் நாம், ஏன் இன்னும் கால்பந்தாட்டத்தைப் புறந்தள்ளி வருகிறோம் என்று புரியவில்லை" என்று ஹர்பஜன் சிங் மேலும் தெரிவித்தார்.

(ம)

## அரியாலை நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

அரியாலை சுதேசிய நூற்றாண்டு விழா அடுத்த வருடம் கொண்டாடப்படவுள்ள நிலையில் அதற்குரிய போட்டிகள் தற்போதிருந்தே ஆரம்பமாகியுள்ளன.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற பட்டம் ஏற்றும் போட்டியுடன் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள் ஆரம்பமாகியுள்ளன. அடுத்த வருடம் சித்திரை புத்தாண்டன்று நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள் இடம்பெறவுள்ளன. ஆனால் பட்டம் ஏற்றக்கூடிய பருவநிலை ஏப்ரலுக்கு பின்னர்தான் வருமென்பதால் இந்த வருடம் பட்டம் ஏற்றும் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

உதயன் பத்திரிகையில் நேற்று வெளியான செய்தியில் 'அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தால் இந்தப் பட்டம் விடும் போட்டி நடத்தப்பட்டது' என்றவாறாகத் தவறுதலாகப் பதிப்பாகியுள்ளது. பட்டம் விடும் போட்டியை எந்தவொரு சனசமூக நிலையமும் நடத்தவில்லை. அது நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்துக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் குழுவால் பொதுமக்களின் பங்களிப்புடன் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ம)




## வேலையாள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் உணவு விடுதி ஒன்றுக்கு சமையல் தெரிந்த ஆண், பெண் இருபாலாரும் தேவை. தங்கி நின்று பணிபுரியக்கூடியவர்கள் விரும்பத்தக்கது.

**தொடர்பு - 076 577 8980**

## வேலை வாய்ப்பு

சட்டத்தரணி ஒருவரின் அலுவலகத்தில் வேலை செய்வதற்கு கணினியில் தமிழ், ஆங்கிலம் தட்டச்சு செய்யக்கூடிய அலுவலர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். முன் அனுபவம் விரும்பத்தக்கது. சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

**தொடர்பு - விளம்பர இலக்கம் 1007**
C/O **உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## பப்படம் தயாரிக்கும் மிசின் விற்பனைக்கு

**பப்படம் தயாரிக்கும் மிசின்கள் மூன்று விற்பனைக்கு உண்டு.**
குறுகிய காலம் பாவித்த நிலையில் உள்ளது

**077 022 2423/ 071 089 8531**

## Techno World

(வெலிங்டன் சந்தி, யாழ்)

**இறுதி முக்கிய கருத்தரங்கு A/L 2018**

உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் - இரவீந்திரகுமார்
(உயிர் முறைமைகள் தொழில்நுட்பத்திற்கான தனித்துவமான ஒரே ஒரு வளவாளர்)
பொறியியல் தொழில்நுட்பம் - ஜெக்நாதன்
(விரிவுரையாளர், தொழில்நுட்பக்கல்லூரி)

**20, 21, 22 - 07 - 2018 ஆம் திகதிகளில் மட்டும் முக்கிய வினாத்தாள் வழங்கப்படும்.**
**077 0175 346**

## SPOKEN ENGLISH
### WITH DIPLOMA CERTIFICATE

O/L எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக நுழைவு மாணவர்கள், தொழில்புரிவோர் வெளிநாடு செல்வோர், இல்லத்தரசிகள், இளைஞர் யுவதிகள்

3 மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம்

**சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் – 21.07.2018**
1. காலை 08–10  3.மதியம் 01–03
2. காலை 10–12  4.மாலை 03–05

வாரநாள் பிரிவுகள் (செவ்வாய், வியாழன்) ஆரம்பம் – 19.07.2018
1. காலை 08–10  2. காலை 10–12

SAAMSON Experts in English Training
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர்.
021 320 3313  077 1570 486

## SealCore மரத்தூள் சேர்க்கைக்கதவுகள், சமையலறை நீர்த்தொட்டிகள்

Sealcore Stainless Steel Industries (Pvt) Ltd இன் தயாரிப்பு




| யாழ்ப்பாணம் | மானிப்பாய் | வவுனியா |
|---|---|---|
| இல. 35, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் | இல. 118, யாழ்ப்பாணம் வீதி, மானிப்பாய் | இல. 376, யாழ்ப்பாணம் வீதி, தாண்டிக் குளம், வவுனியா |
| தொ.பே/தொலைநகல்: 021-2222413 | தொ.பே/தொலைநகல்: 021-2256474 | தொ.பே/தொலைநகல்: 024 - 2050168 |

மஸ்கன்ஸ் (பிறைவேட்) லிமிடெட்
இல. 175, சிறி சுமணதிஸ்ஸ மாவத்தை, கொழும்பு - 12
+94 11 2449537 +94 11 2325561-3, E-mail: mascons@eureka.lk / Web: www.mascons.com

## ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

# IELTS

- Latest training materials. ( Book 12 )
- Skills development in all four categories.
- Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.

சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம்

## IELTS Life Skills

திருமணம் செய்து நிரந்தர விசாவில் UK செல்பவர்களுக்கானது, புதிய நடைமுறைக்கு அமைவாக இலகுவான முறையில் UK அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில பரீட்சை

**British Council'S IELTS Registration Centre**

கடந்த வருடமும் British Council இன் விருது பெற்ற IELTS பரீட்சைக்கு தனித்துவமான நிறுவனம்
புதிய நடைமுறைகள் பற்றி அறிய http://www.itdmi.com/ls

## Spoken English

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| Mon,Wed,Fri 8:00 a.m<br>Mon,Wed,Fri 3:30 p.m<br>Sat, Sun 3.30 p.m | Tue, Thu 3.30 p.m.<br>Sat, Sun 3:30 p.m. | Sat, Sun 10.00 a.m.<br>Tue,Thu 9:00 a.m | Sat, Sun 9.30a.m |

பதிவுகளினை முற்கூட்டியே உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்

**DMI INTERNATIONAL ENGLISH COLLEGE**

யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | நெல்லியடி Tel.: 021-226 2470 | சாவகச்சேரி Tel.: 021-227 0775 | சுன்னாகம் Tel.: 021-224 1970 | கிளிநொச்சி Tel.: 021-228 5455

www.itdmi.com/ielts  Hotline 0777 17 35 17

## மரண அறிவித்தல்



### முருகேசு சிவபாலன்

நெடுங்காடு, காரைநகரைப் பிறப்பிடமாகவும் கருங்காலி, காரை நகரை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சிவபாலன் நேற்று (18.07.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கனகசபை - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலாதேவியின் பாசமிகு கணவரும் மேனகா, சோபிகா, பிருந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும் குகதர்சனின் அன்பு மாமனாரும் பிரகதியின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, இரட்ணேஸ்வரி மற்றும் இராசமலர், சிவனேஸ்வரி, நேசமலர், யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.07.2018) வியாழக் கிழமை காலை 7.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீலகிரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகமூர்த்தி வீதி,
கருங்காலி, காரைநகர். (C7316/35/18)

தகவல்: குடும்பத்தினர்.
077 208 6937

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 29.07.2017 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்

### திருமதி வசந்தி பூபாலசிங்கம்

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தின ஆத்மசாந்திப் பிரார்த் தனை இன்று (19.07.2018) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணி யளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தரு ணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்த னையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ் விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கொக்கன் வளவு,
இணுவில் கிழக்கு, இணுவில்.

குடும்பத்தினர். (CS 14551)

## E.S Printers




# 357, Kasthuriyar Road, Jaffna.
021 492 7471 / 021 492 7472

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.07.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.